பக்கங்கள்: முப்பத்துஇரண்டு +VIII

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 15 ஞாயிற்றுக்கிழமை (29.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 184



02
தமிழர்கள் வென்றெடுத்த கிண்ணம்



07
ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முடியாது



25
இசையும் மருத்துவமும்



27
வரலாற்றின் புனைவுகள்

## இந்துமாமன்ற சிவதொண்டர் மாநாடு நல்லூரில் கோலாகலமாக ஆரம்பம்

### வெளிமாவட்டங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



யாழ்ப்பாணம், மே 29

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டிலான சிவதொண்டர் மாநாடு நேற்று பக்திபூர்வமாக, கோலாகலமாக நல்லூரில் ஆரம்பமானது.

நேற்றுக்காலை 8 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பமானது.

அதைத் தொடர்ந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட சிவதொண்டர்களின் ஊர்வலத்தைத் தொடர்ந்து நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நாவலர் (31ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம்: ஐ.தே.க. எதிர்ப்பு!

கொழும்பு, மே 29

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடியொட்டி இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்கப் போவதாக அரசு தெரிவித்து வரும் நிலையில், 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

“மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் அவற்றை மாகாண நிர்வாகங்கள் தவறாகப் பயன்படுத்தக் கூடும். அத்துடன், வெளிச் சக்திகள் (மூன்றாம் தரப்புகள்) பொலிஸ் நிர்வாகத்தில் ஊடுருவி மீண்டும் கிளர்ச்சிகளை ஏற்படுத்தவும் கூடும்” என்று தெரிவித்துள்ளார் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய. இதனால் பொலிஸ் அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்படுவதைக் கட்சி விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (31ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் செய்தியாளர் மீது நேற்று சரமாரித் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 29

உதயனின் அலுவலகச் செய்தியாளர் செ.கவிதரன் நேற்றுக் காலை 6.30 மணியளவில் யாழ். நகரில் வைத்துத் தாக்கப்பட்டார்.

கஸ்தூரியார் வீதியில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அண்மித்த பகுதியில் நால்வர் கொண்ட குழு ஒன்று இவர் மீது திடீரெனக் கிரிக்கெட் மட்டைகள், விக்கெட்டுக்களால் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியது.

பணிக்காக அலுவலகத்துக்கு வந்து கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் (29ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவும் அதன் செயலாளரும் இலங்கை விடயத்தில் சடுகுடு

வோஷிங்ரன், மே 29

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் அடுத்த நடவடிக்கை என்ன என்பது தொடர்ந்தும் குழப்பமாகவே உள்ளது.

அந்த அறிக்கை தொடர்பில் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் ஐ.நா. பாதுகாப்புச் சபை அல்லது பொதுச் சபை அல்லது மனித உரிமைகள் சபையில் ஏதாவது ஒன்று கேட்டுக்கொண்டால் அன்றி, அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டபடி சர்வதேச விசாரணை ஒன்றுக்குக் கோர முடியாது என்று பொதுச்செயலாளர் பான் கீ-மூன் தெரிவித்திருந்தார். (ஐ)

## அமெரிக்காவுக்கு அழுத்தம்

வோஷிங்டன், மே 29

ஜெனிவாவில் நாளை ஆரம்பமாக உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 17ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் போர்க் குற்ற விவகாரத்தை விவாதப் பொருளாக்குமாறு அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுத் துள்ளன மனித உரிமைகள் அமைப்புகள்.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், நெருக்கடிகளுக்கான அனைத்துலகக் குழு, சர்வதேச ராஜதந்திர உறவுகளுக்கான ஜிம்மி கார்ட்டர் நிலையம் என்பனவே இந்த அழுத்தத்தைக் கொடுத்துள்ளன.

(29ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிகளுக்கான நிதியையும் பஸில் கையகப்படுத்தலாமா?

### ஐ.தே. கட்சியினர் கொதிப்பு

கொழும்பு, மே 29

வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை ஐந்து மாதம் கழிந்தும் வழங்கவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

கடந்த வாரம் நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கொதிப்பை வெளிப்படுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரதேச அபிவிருத்திக்கென தயாரித்து வழங்கும் திட்டங்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது வழமையாகும்.

இந்த வருடத்துக்கான திட்ட முன் மொழிவுகள் வழங்கப்பட்டும் இதுவரை நிதி ஒதுக் (31ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மறுப்பு

புதுடில்லி, மே 29

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை, சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் புலிகள் கொலை செய்ய முயற்சித்திருப்பார்கள் என்று கே.பி தெரிவித்த கருத்தை மறுத்துள்ளது புலிகளின் தலைமைப்பீடம் என்று தெரிவித்தது வெளிநாடு ஒன்றில் இருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை.

அந்த அறிக்கையை கேபியின் செவ்வியை வெளியிட்ட சிஎன்என் ஐபிஎன் (31ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா மௌனம்

புதுடில்லி, மே 29

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் திட்டமிட்டுக் கொலை செய்தார் என்று அந்த அமைப்பின் முன்னாள் ஆயுதத் தரகரும் தற்போது அரசின் விருந்தோம்பல் காவலில் உள்ளவருமான கே.பி. எனப்படும் செல்வராசா பத்மநாதன் தெரிவித்த கருத்து தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் மௌனம் காத்து வருகிறது.

(31ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தமிழர்கள் வென்றெடுத்த வெற்றிக் கிண்ணம்

- டிலீப் -

விஜயின் அதிரடி, அஸ்வினின் சுழல் ஜாலம் இணைந்து வென்று கொடுத்தது கிண்ணம். சென்னையின் கையில் தொடர்ச்சியாக இரண்டாவது வெற்றிக்கிண்ணம். 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூரை வீழ்த்தியது சென்னை. ஏமாற்றினார் கெயில். சோபிக்கவில்லை பெங்களூர் ஆட்டம். சகல துறைகளிலும் ஜொலித்தது சென்னை. மீண்டும் வெற்றியை சொந்த மண்ணில் பெற்றது.

இறுதி ஆட்டம் நடந்தது சென்னையில் நேற்று. மோதிக்கொண்டன சென்னை சூப்ப கிங்ஸ், பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ். வெற்றி நாணயச் சுழற்சியில் கிடைத்தது சென்னைக்கு. துடுப்பெடுத்தாட வந்தது களத்துக்கு.

ஹஸி - முரளி விஜய் முன் வரிசை ஆட்டக்காரர்கள். இவர்களின் முழக்கத்தில் சிக்கி சின்னாபின்னமானது பெங்களூரின் பந்து வீச்சு. இந்தத் தொடரில் அடக்கியே வாசித்தவர் விஜய். வீறு கொண்டெழுந்தார் நேற்று. விளாசித் தள்ளினார் பெங்களூரின் பந்து வீச்சை.

இரண்டாவது ஓவரின் இறுதிப் பந்தில் முதலாவது சிக்ஸர் அடித்தார் விஜய். மூன்றாவது ஓவரின் முதலாவது பந்தில் ஹஸி அடித்தார் சிக்ஸர். இவர்களின் அதிரடிகள் சரவெடியாய் ஆரம்பம். 31 பந்துகளில் பூர்த்தியானது முதலாவது அரைச்சதம். ஆட்டத்தின் பதினொராவது ஓவர் வீசினார் சயிட் மொஹமட். அந்த ஓவரில் தப்பிப் பிழைத்தார் விஜய். தப்பிப் பிழைத்தவர் 29 பந்துகளில் கடந்தார் அரைச்சதம். சென்னையின் சதம் 63 பந்துகளில் பூர்த்தி. ஓவருக்கு தவறாமல் அனுப்பினர் பவுண்டரி, சிக்ஸர். ஏறியது சென்னையின் ஓட்ட வேகம். மறுமுனையில் 40 பந்துகளில் ஹஸியின் அரைச்சதம் பூர்த்தி.

முதலாவது விக்கெட்டுக்காகப் பெறப்பட்டது 159 ஓட்டங்கள் இணைப்பாட்டம். முதலாவது விக்கெட்டாய் சரிந்தார் ஹஸி. 15 ஆவது ஓவர். வீசினார் சயிட் மொஹமட். வீழ்ந்தது ஹஸியின் விக்கெட். 45 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பவுண் டரிகள் அடங்கலாய் பெற்றார் 63 ஓட்டங்கள். மத்தியவரிசையில் களமிறங்கும் டோனி, இறங்கினார் முன் வரிசையில். வந்தவரும் வெளுத்தார் பந்துகளை.

19 ஆவது ஓவர் வீசினார் அரவின்ட். விஜயின் சதம் 5 ஓட்டங்களால் தவறியது. 52 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் பெற்றார் 95 ஓட்டங்கள். அடுத்த பந்திலேயே சரிந்தார் டோனி. 13 பந்துக ளில் 2 சிக்ஸர்களுடன் பெற்றுக் கொடுத்தார் 22 ஓட்டங்கள்.

## மீண்டும் சென்னையின் கைகளில் கிண்ணம்!

ரெய்னா நுழைவு. அடித்தார் சிக்ஸர். பெற்றுக் கொடுத்தார் 8 ஓட்டங்கள். வீழ்ந்தார் கெயிலின் பந்து வீச்சில். மோர்கல் ஆட்டம் 2 ஓட்டங்களுடன் முடிவு. இறுதிப் பந்துக்கு வந்தார் பிராவோ. சந்தித்த முதலாவது பந்திலேயே சென்றது சிக்ஸர். இதுவே ஆட்டத்தின் இறுதிப் பந்து.

இருபது ஓவர்களில் சென்னை பெற்றது 205 ஓட்டங்கள். இழந்தனர் 5 விக்கெட்டுக்களை. பந்து வீச்சில் அரவின்ட், கெயில் சரித்தனர் தலா 2 விக்கெட்டுக்கள்.

கனமான இலக்கை கலைத்தது பெங்களூர். முதலாவது ஓவரில் கலைந்தது பெங்களூரின் கனவு. ஓட்டமெதுவுமின்றி வீழ்ந்தார் கெயில். அஸ்வினின் சுழல் சுருட்டியது பெங்களூரின் வாலை. அகர்வாலின் அதிரடி சிறிது நேரம். மீண்டும் வந்தார் அஸ்வின். வீழ்த்தினார் அகர்வால் விக்கெட்டை. 5 பந்துகளில் பத்து ஓட்டங்களுடன் முடிந்தது ஆட்டம். இணைந்தனர் ஹோக்லி - டீ வில்லியர்ஸ். அதிரடிகள் கொஞ்சம் இவர்களின் இணைப்பில் வெளிப்பாடு. 32 ஓட்டங்கள் பகிர்ந்தனர் மூன்றாவது விக்கெட்டுக்காக. ஜகாத்தியின் சுழலில் மடிந்தார் டீ வில்லியர்ஸ். 12 பந்துகளில் 18 ஓட்டங்களுடன் முடிவடைந்தது அவரது ஆட்டம். 42 பந்துகள் தேவைப்பட்டது அணி 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்ய.

ஹோக்லி வெற்றிக்கான போராட்டம். விடவில்லை சென்னை. வீழ்த்தியது அவரை. ரெய்னாவின் சுழல் வீழ்த்தியது அவர் விக்கெட்டை. 32 பந்துகளில் அணிக்காய் பெற்றுக்கொடுத்தது 35 ஓட்டங்கள். 69 ஓட்டங்களுக்குள் பெங்களூர் இழந்தது 5 விக்கெட்டுக்கள்.

நுழைந்தார் தலைவர் வெற்றோரி. சந்தித்தார் அஸ்வினின் பந்து வீச்சை. முதலாவது பந்திலேயே பிடி கொடுத்தார் அஸ்வினிடம். முடிந்தது பூச்சியதுடன் அவர் ஆட்டம். மறுமுனையில் நிலைத்து நின்றாடினார் திவாரி. சகீர் சிறிது நேரம் துணையாட்டம் அவருக்கு. பகிர்ந்து கொண்டனர் 38 ஓட்டங்கள் இணைப்பாட்டம். சகீர் 21 ஓட்டங்கள் பெற்றுக்கொடுத்தார். இறுதி நேரம் சென்னையின் களத்தடுப்பு மோசம். தவறவிடப்பட்டன பல பிடிகள். இதனால் பெங்களூர் ஆட்டம் தொடர்ந்தது இறுதிப் பந்து வரை. திவாரி 34 பந்துகளில் 3 சிக்ஸர்களுடன் 42 ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பு.

இறுதியில் இருபது ஓவர்களில் போராடிப் பெற்றது 147 ஓட்டங்கள். இழந்தனர் 8 விக்கெட்டுக்கள். பந்து வீச்சில் அஸ்வின் வீசினார் 4 ஓவர்கள். கொடுத்தார் 16 ஓட்டங்கள். சரித்தார் 3 விக்கெட்டுக்கள். ஜகாத்தி வீழ்த்தினார் 2 விக்கெட்டுக்கள்.

58 ஓட்டங்களால் வென்றது சென்னை. வந்தது வெற்றிக் கிண்ணம். ஆட்ட நாயகன் விஜய். கோல்டன் விருது வென்றார் கெயில்.




### அதிகூடிய ஓட்டம்

- கெயில் - பெங்களூர் [12 ஆட்டங்கள் 608 ஓட்டங்கள்]
- ஹோக்லி - பெங்களூர் [16 ஆட்டங்கள் 557 ஓட்டங்கள்]
- சச்சின் - மும்பை [16 ஆட்டங்கள் 553 ஓட்டங்கள்]

### அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க - மும்பை இந்தியன்ஸ் [16 ஆட்டங்கள் 28 விக்கெட்டுக்கள்]
- முனாப் பட்டேல் - மும்பை [15 ஆட்டங்கள் 22 விக்கெட்டுக்கள்]
- அரவின்ட் - பெங்களூர் [13 ஆட்டங்கள் 21 விக்கெட்டுக்கள்]

DLF INDIAN PREMIER LEAGUE







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்சானின் கருத்துக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு



தான் மீண்டும் பாகிஸ்தானில் விளையாட விரும்பவில்லை என்று இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் திலகரட்ன டில்ஷான் கூறியமைக்கு பாகிஸ்தானிலிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

திலகரட்ன டில்ஷானின் கருத்துக்களை சாடிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் லெப். ஜெனரல் தாகிர் ஸியா, அணித்தலைவர் என்ற வகையில் இந்த வகையான கருத்துக்களை வெளியிடுவதை டில்ஷான் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் துறைக்கு எப்போதும் பாகிஸ்தான் ஆதரவாக இருந்துவந்துள்ளது எனவும் தாகிர் ஸியா கூறினார். தாகிர் ஸியா 1999 முதல் 2004 ஆம் ஆண்டுவரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாகிஸ்தானின் புகழ்பெற்ற முன்னாள் வீரரான அப்துல் காதிரும் டில்ஷானை விமர்சித்துள்ளார். டில்ஷானின் கருத்து பொறுப்பற்றதாகும் எனக்கூறிய அப்துல் காதிர், இது கிரிக்கெட் விளையாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் இலங்கை கிரிக்கெட் சபையும் ஐ.சி.சியும் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரியுள்ளார். (15)

# கம்பீர், யுவராஜ்
## அதிரடியாக நீக்கம்!

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடருக்கு சுரேஷ் ரெய்னா புதிய அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக கம்பீர், யுவராஜ் சிங் நீக்கப்பட்டனர். டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியும் அறிவிக்கப்பட்டது.

கம்பீருக்கு சமீபத்தில் நடந்த ஐ.பி.எல் போட்டியின் போது தோள்பட்டை பகுதியில் காயம் ஏற்பட்டதால், மேற்கிந்தியத்தீவுகளுடனான தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இவரை தொடர்ந்து நுரையீரல் பகுதியில் ஏற்பட் டுள்ள நோய்த் தொற்றால், யுவராஜ் சிங்கும் விலகுவதாக தெரிவித்தார். இதனால் ' ரி-20 ' மற்றும் ஒருநாள் தொடரின் புதிய அணித்தலைவராக சுரேஷ் ரெய்னா நியமிக்கப்பட்டார். சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், துணை அணித்தலைவராக அறிவிக்கப்பட்டார்.

ஒருநாள் தொடருக்கான 16 பேர் கொண்ட இந்திய அணி:

சுரேஷ் ரெய்னா (அணித்தலைவர்), ஹர்பஜன் சிங் (துணை அணித்தலைவர்), பார்த்திவ் பட்டேல், விராட் ஹோக்லி, மனோஜ் திவாரி, ஷிகர் தவான், பத்ரிநாத், ரோகித் சர்மா, அஷ்வின், பிரவீன் குமார், இஷாந்த் சர்மா, முனாப் பட்டேல், வினய்க் குமார், யூசுப் பதான், அமித் மிஸ்ரா, சகா.

மேற்கிந்தியத்தீவுகள் தொடருக்கான இந்திய அணி யில் முன்னணி வீரர்கள் இடம் பெற வில்லை.

சேவாக் - தோள் பட்டை காயம்
கம்பீர் - தோள் பட்டை காயம்
யுவராஜ் - நுரையீரல் நோய்த் தொற்று
நெஹ்ரா - கைவிரலில் காயம்
சச்சின் - விருப்ப ஓய்வு
டோனி - விருப்ப ஓய்வு
சகிர் - விருப்ப ஓய்வு

டெஸ்ட் தொடரில் அறிமுக வீரராக இடம் பெற்றுள்ள தமிழக வீரர் அபினவ் முகுந்த், கடந்த 1990 இல் சென்னையில் பிறந்தவர். உள்ளூரில் அசத்திய இவர், இந்தக் காலப்பகுதியில் 12 முதல் தர போட்டிகளில் 5 சதங்கள் உட்பட 1211 ஓட்டங்கள் எ[illegible]த்துள்ளார். இதன் காரணமாக இ[illegible]ய அணியில் வாய்ப்பு தேடி வந்துள்ளது. (15)

# சமந்தா, கரோலின்
## அதிர்ச்சித் தோல்வி!

பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் போட்டியில் பெடரர், பெரர், துல்கோ ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் பெடரர் 6-1, 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் செர்பியாவின் ஜான்கோ டிப்சரேவிச்சையும், ஸ்பெயினின் டேவிட் பெரர் 6-1, 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் உக்ரைனின் செர்ஜியையும், பிரான்ஸின் கேயல் மான்பைல்ஸ் 6-3, 6-4, 7-5 என்ற நேர் செட் கணக்கில் ஸ்பெயினின் அல்பர்ட்டையும் வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினர்.

மகளிர் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் அர்ஜென்டினாவின் துல்கோ 6-4, 1-6, 6-3 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் முன்னணி வீராங்கனையான சமந்தா ஸ்டோசருக்கு அதிர்ச்சித் தோல்வியளித்தார். தரவரிசையில் 28 ஆவது இடத்தில் உள்ள ஸ்லோவேகியாவின் டேனிலா 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் தரவரிசையில் முதல் இடத்தில் உள்ள டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை வீழ்த்தினார்.

நடப்புச் சம்பியனான இத்தாலியின் பிரான்செஸ்கா ஷியாவோனே 6-0, 6-4 என்ற நேர் செட் கணக்கில் கனடாவின் ரெபேக்கா மரினோவையும், செர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச் 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் அமெரிக்காவின் பெத்தனேவையும் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன் னேறினர்.


ஆடவர் இரட்டையர் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா - பாகிஸ் தானின் குரேஷி ஜோடி 6-7, 6-3, 6-4 என்ற செட்களில் அர்ஜென்டினாவின் மேக்ஸிமோ - ஜப்பானின் நிஷி கோரி ஜோடியை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது. மகளிர் இரட்டையர் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா - ரஷியாவின் எலினா வெஸ்னினா ஜோடி 7-6, 6-3 என்ற நேர் செட் கணக்கில் ஜேர்மனியின் கிறிஸ்டினா - ஸ்வீடனின் ஜோகன்னா லார்சன் ஜோடியை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது. (15)

### கையெழுத்திட்ட கார் ரூபா 30 லட்சம்!

ஐ.பி.எல் போட்டியில் பங்கேற்ற 10 அணிகளின் தலைவர்கள் கையெழுத்திட்ட வோல்க்ஸ் வேகன் பேசட்டர் கார் ரூ. 30.13 லட்சத்துக்கு ஏலம் போனது.

ஜெர்மன் நிறுவனத்தின் இந்த சொகுசுக் காரை பெங்களூரைச் சேர்ந்த சைதாஸ் மல்லாடி என்பவர் ஏலத்தில் எடுத்துள்ளார். இந்த கார் ஏலம் மே 3 இல் தொடங்கி 10 நாள்கள் நடைபெற்றது. இந்த ஏலத்தில் இந்தியா முழுவதிலும் இருந்து 26 பேர் பங்கேற்றனர். (15)

# பிரீத்தி - லீ இரகசிய சந்திப்பு







பொலிவுட் நடிகை பிரீத்தி ஸிந்தா - பிரட் லீயை மும்பை ஹோட்டலில் ரகசியமாக சந்தித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.பி.எல் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளராக இருக்கிறார் நடிகை பிரீத்தி ஸிந்தா. இவர், போட்டிகளில் அசத்தும் வீரர்களை கட்டிப் பிடித்து பாராட்டுவார். சமீபத்தில் சதமடித்த பஞ்சாப் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட்டை, தனது இறுக்கமான 'பிடியினால்' திணறடித்தார்.

இதனிடையே இவரையும், கொல்கத்தா அணியில் இடம் பெற்றுள்ள ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீயையும் இணைத்து செய்திகள் வெளியாகின. தாங்கள் நண்பர்கள் தான் என்று இவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மும்பையில் உள்ள ஒலிவ் ஹோட்டலுக்கு கடந்த 24 ஆம் திகதி இரவில் பிரித்தி ஜிந்தாவும், பிரட் லீயும் வந்துள்ளனர். அங்கு சுமார் இரண்டு மணி நேரம் இருந்துள்ளனர். பிறகு வெளியேற முற்பட்ட போது, ஹோட்டலுக்கு வெளியே பத்திரிகை படப்பிடிப்பாளர்கள் காத்திருப்பதாக, நிர்வாகிகள் எச்சரித்[illegible]. அவர்க[illegible]டம் இருந்து தப்பிக்கும் வகையில், பிரட் லீ மட்டும் ஹோட்டலின் முன்வாசல் வழியாக சென்றுள்ளார். பிரீத்தி ஸிந்தா வேக, வேகமாக பின்புற வாசல் வழியே சென்றுள்ளார். நாங்கள் நல்ல நண்பர்கள் தான் என்று தெரிவிக்கும் இவர்கள், ஏன் படப்பிடிப்பாளர்களை கண்டு பயந்து ஓட வேண்டும். இதற்கான பதிலை, பிரீத்தி ஸிந்தா, பிரட் லீ தான் [illegible]ம். (15)

# இலங்கை வீரர்களின் சம்பளம்

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் 2010 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவு விவரங்களை விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே அண்மையில் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

2010 ஆம் ஆண்டில் 126 விளையாட்டு வீரர்களுடன் இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. இதில் மஹேல ஜெயவர்தன, குமார் சங்ககார, முத்தையா முரளிதரன், திலான் சமரவீர, ரி.எம்.டில்ஷான், லசித் மலிங்க ஆகியோருக்கு வருடாந்தக் கொடுப்பனவு 1,20,750 அமெரிக்க டொலர்களாகும்.

நுவான் குலசேகர, சமிந்த வாஸ் ஆகியோருக்கு தலா 71,500 டொலர்கள், அஞ்சலோ மத்தியூஸுக்கு 66,150 டொலர்கள், பிரசன்ன ஜெயவர்தன, அஜந்த மென்டிஸ்,சாமர கப்புகெதர, திலான் துஷார, திலன கண்டம்பி, உப்புல் தரங்க, ரங்கன ஹேரத் ஆகியோருக்கு தலா 49,163 டொலர்கள்.

பர்வேஸ் மஹ்ரூப் மற்றும் மலிந்த வர்ணபுர ஆகியோருக்கு தலா 47250 டொலர்கள், மற்றும் சனத் ஜெயசூரியவுக்கு 44000 டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக தில்ஹார பெர்ணாண்டோ, சானக வலகெதர, தரங்க ரோஹணவிதான ஆகியோருக்கு தலா 33075 டொலர்கள், ஜெஹான் முபாரக்கிற்கு 31500 டொலர்கள், அசேல உடவத்த, மலிங்க பண்டார, சாமர சில்வா, தம்மிக பிரசாத், கவுஷால் சில்வா, புஷ்பகுமார ஆகியோருக்கு தலா 21000 டொலர்களும் வழங்கப்பட்டுள்ளன. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்புக்கள்

நீங்கள் வேலை தேடுபவரா?
உடனடியாக CAPSTONE இல் பதிவு செய்து கொள்ளுங்கள்.

**பதிவு இலவசம்**

CAPSTONE உங்களுக்கேற்ற தொழிலை நாடளாவிய ரீதியில் தேடித் தருகின்றது. வேலை கிடைக்கும்வரை எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
சுயவிபரக்கோவை மற்றும் வர்ணப்புகைப்படத்துடன் வாரநாள்களில் நேரில் வரவும்.

இல.01 (மேல்மாடி), பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 2220727. (4664) (38)

## மரண அறிவித்தல்



பிறப்பு 22 01 1943

இறப்பு 26 05 2011

### திரு. செல்லத்துரை கனகேந்திரம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், அதிபர், உதவிப்பணிப்பாளர் - கிளிநொச்சி)

உரும்பிராய் தெற்கு சிவகுல வீதியை பிறப்பிடமாகவும், பரந்தனை, தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை கனகேந்திரம் அவர்கள் 26.05.2011 வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை, செல்லம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பூபதி, சிவலிங்கம், சரஸ்வதி. ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், கிரியா, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரசாந்தி, யாழினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சதீஸ்குமார், கோடிஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், டவீனா, டனீசன், தனிஸ்க் ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று 29.05.2011 காலை 9.00 மணிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் ஈமைக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*B1-2/4 Soysapura Flats, Moratuwa.*
*Tel : 011 2626110 / 0773030229*

தகவல்
குடும்பத்தினர்

## அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

நெல்லியடி, மே 29

வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும், மதுபோதையிலும் வாகனம் செலுத்திய சந்தேக நபர் வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் வீதி கண்காணிப்பு நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர் பின்னர் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் இவருக்கு 6500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ம-319)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 29

தொண்டமனாறு வெளிக்கள நிறுவனத்தால் உயர்தர உயிரியற் பிரிவு மாணவர்களுக்கு செயலமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் மகளிர் கல்லூரியில் செயலமர்வு இடம்பெறவுள்ளது. கொழும்பில் இருந்து வருகை தரவுள்ள பிரபல ஆசிரியர்கள் புதிய பாடத்திட்டத்துக்கமைய செயல மர்வை நடத்தவுள்ளனர். (ம)

### German Swiss மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. வெளிமாவட்டத்திலிருந்து வருவோர்க்குத் தங்கு மிட வசதி ஏற்படுத்தித் தரப்படும்.
10, Palaly Road, Jaffna.T.P: 0771604823

### கடை வாடகைக்குண்டு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 60 அடி நீளம், 15 அடி அகலம் கொண்ட கடை உடன் வாடகைக்குண்டு
தொடர்புக்கு: 0777283811.

### வீடு வாடகைக்கு

யாழ்.ஆஸ்பத்திரிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு
தொடர்புக்கு: 0773448863.

### தென்னை மரங்கள் விற்பனைக்கு

அரசாங்க அனுமதியுடன் (Permit) 19 தென்னை மரங்கள் விற்பனைக்குள்ளது.
(இடம்- மீசாலை) தொடர்பு:
0770780240

### காணி விற்பனைக்கு

யாழ்/உரும்பிராய் கிழக்கு
23 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. கோப்பாய் வீதி ஞானவைரவர் கோயிலுக்கு அருகாமையில்

தொடர்புகளுக்கு – ராஜா/செல்வா
thaya.raja@yahoo.com
0758377855 / 0113159059

## நியூ மெடி கெயர் மருத்துவமனை

New MediCare Hospital

## NEW MEDI CARE HOSPITAL

(நகரப்பகுதியின் அண்மையில் அமைந்துள்ளது)

### எம்மிடம்....

வெளிநோயாளர் பிரிவு-
உள் நோயாளர் பிரிவு - 24 மணிநேரமும் MBBS டாக்டர்

முன் பதிவுகள் மூலம் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

★ பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை சத்திர சிகிச்சை நிபுணர்
★ பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை, மாலை மகப்பேற்று பெண் நோயியல் நிபுணர்.
★ பிரதி திங்கட்கிழமைகளில் (காலை) கண் சத்திரசிகிச்சை நிபுணர்.
★ பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் (காலை) பொதுவைத்திய நிபுணர்.
★ பிரதி வெள்ளிக்கிழமைகளில் தோல் வைத்திய நிபுணர்.
★ அதி நவீன கணினி மயப்படுத்தப்பட்ட சாதனங்கள்மூலம் இரத்த, சல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது.
★ நவீன கருவிகள் மூலம் ஸ்கானிங், ECG, X-Ray வசதிகள்
★ சலரோகம், இருதயநோய், இரத்த அழுத்தம், மூட்டுநோய்களுக்கான கிளினிக் வசதிகள்.
★ சகல விதமான பற் சிகிச்சைகளும் பல் பிடுங்குதல், கட்டுதல், அடைத்தல், கிளிப்போடுதல்.

(49, 21,25)

இல.32, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே: 021 4920949,
021 3734505.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகாமிப்பிள்ளை சுந்தரமூர்த்தி

[ஓய்வு பெற்ற ஆசிரியை யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்]



வேலம்பிராய் அம்மன் கோலடியைப் பிறப் பிடமாகவும் மறவன் புலோவை வசிப்பிட மாகவும் சுண்டுக்குழியை தற்காலிக வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை சுந்தரமூர்த்தி (26.05.2011) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39/2, விதானையார் வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கார்த்திகேசு நாகம்மா



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தில் வாழ்ந்தவருமாகிய கார்த்தி கேசு நாகம்மா 25.05.2011 புதன்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தை வேலு -இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- நாக முத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, மார்க்கண்டு, இராமநாதபிள்ளை, நாகபூரணம் சின்னம்மா, மகோ தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறிசந்திரன் (கனடா), தவராசா (இத்தாலி) ஆகியோரின் அன் புத் தாயும் பரமேஸ்வரி (கனடா), சகுந்தலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் உஷாந்தினி (கனடா), ஜெயந்தினி (கனடா), மகிதான் (கனடா), காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் அஜந்தினி (கனடா), உதயந்தினி (கனடா), திருவருட்செல்வன் (கனடா), திருக்குமரன் (கனடா), ராஜ்பிரபு (இலங்கை), ராஜ்மேனன் (இலங்கை), ராஜ்சரன் (பிரான்ஸ்),ராஜ்மிதுன் (பிரான்ஸ்), சிந்தியா அனட் (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹரினியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மணல்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சிறிசந்திரன் பரமேஸ்வரி
குடும்பத்தினர்

8 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
*(40)(4659)*

### வீடு வாடகைக்கு

ஓட்டுமடம் வீதியில் 3 ஹோல், 3 அறைகள், குசினி வாகனத்தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு இல. 59, ஓட்டுமடம் வீதி,யாழ்ப்பாணம்.
T.P 0213211911

### தேவை

யாழ்.நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு
1. புடைவை விற்பனை
2. தையல் வேலை செய்வதற்கும்
பெண் பிள்ளைகள் தேவை.
விளம்பர இலக்கம் 4148,
மே/பா. உதயன்

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

நிறைகூடிய புறோயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம். [விலை 20/= குறைக்கப்பட்டுள்ளது] மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்பு:
மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

### காப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் லொட்ஜ் ஒன்றுக்கு காப்பாளர் தேவை. சமையல் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
0729454231, 021 222 7941

### வீடு விற்பனை

கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட்டில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் உள்ள வாமஸ் சந்திக்கு அருகில் 5 அறைகள், 2 பெரிய ஹோல்கள், உள்ளடங்கலாக அமைந்த வீடு விற்பனைக்குண்டு.(2 அறைகள் குளிரூட்டப்பட்டுள்ளது.)அலுவலகங்களுக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு 0778435528

### விற்பனைக்கு

வவுனியா உக்குளாங்குளம் பஸ் தரிப் பிடத்துக்கு அருகில் அமைந்திருக்கும் 1½ பரப்பு 38 Poins காணியுடன் கட்டப்பட்ட புதிய வீடு 3 அறை, Hall, Kitchen, Bathroom கிணறு மற்றும் வாகனத் தரிப்பி வசதியும் உண்டு. தொடர்பு - 0777516973

### நாய்க் குட்டிகள் விற்பனை

30 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பட் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:
மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

நீங்களும் ஒரு இளமாணி/முதுமாணி பட்டதாரியாகலாம்
External Degree-ALAGAPPA UNIVERSITY (INDIA)
**BA,BBA,B.COM,**
**BSc.,MSc.,MA,MCom,MBA**
தமிழ்,ஆங்கிலமொழி மூலம் வெளிவாரி பட்டப்படிப்பை நாடு முழுவதும் தபால் மூலமாகவும் நேரடியாகவும் தொடர ஓர் அரிய சந்தர்ப்பம்
தகைமை: A/L 3 சாதாரண சித்திகள்.
இப்பட்டப்படிப்பை தொடர்வதற்கு பதிவுகளையும், பாடக்குறிப்புக்களையும் எமது கல்வியகத்தினூடாக மேற்கொள்ள முடியும்.
Registered and Approved Study Centre
**GENIUS ACADEMY**
Colombo, Kandy, Puttalam, Vavuniya,Jaffna,Trincomalee
Tel:0779914260,0113134067

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகர்ப்புறத்தில்
அல்லது யாழ்.பிரதான வீதிகளில்
காரியாலயத்துக்கும்
(Office Space) , வசிப்பதற்கும்
இரு இடங்கள்
வாடகைக்குத் தேவை.
தொடர்பு கொள்ளவும்:
0756827682

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கால்நடை வளர்ப்பின் வளர்ச்சிக்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணை யாளர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாய விலை நிர்ணயம் செய் யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட கால் நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வக்ஸலா அமிர்தலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் இந்த மாவட்டத்தில் எதிர்பாராத இக்கட்டான நிலைக்கு ஆளாகி உள்ளனர் என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் விவசாயத்தில் முன்னிலையில் நின்றது போலவே கால்நடை வளர்ப்பிலும் சிறந்து விளங்கியவர்கள். மிகப் பலர் அதனைப் பிரதான தொழிலாகக் கொண்டு வளத்துடன் வாழ்ந்தவர்கள். இரண்டு தொழில் துறைகளுக்கும் தேவையான வசதிகளும் வாய்ப்புகளும் போர் மற்றும் காரணிகளால் நீண்ட காலவெளியில் குன்றியது.

கால்நடைத் தீவனங்கள் போதிய அளவில் கிடைக்காமலும், வயல் நிலங்களில் தொழிலில் ஈடுபடமுடியாமல் தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்ட தாலும் கால்நடை வளர்ப்போரில் மிகப்பெரும்பாலானோர் அதனைக் கைவிடவும் நேர்ந்தது.

எனினும் இப்போது, வழமைநிலை தோன்றியுள்ளதால் விவசாயமும் கால்நடை வளர்ப்பும் மீண்டும் முந்திய நிலைக்குத் திரும்பும் வாய்ப்பு உண்டாகி உள்ளது. அதேவேளை, கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலையும் சந்தை வாய்ப்பும் கிடைக்காத புதிய ஆபத்து உருவெடுத்துள்ளது. அதனால் அவர்கள் தமது உற்பத்தி முயற்சிகளைத் தொடர முடியாத ஆபத்தும் உண்டாகி விட்டது.

குடாநாட்டுக்கான போக்குவரத்து வழமை நிலைக்குத் திரும்பி விட்ட தால், வெளிமாவட்டங்களில் இருந்து கோழி முட்டை, கோழிக்குஞ்சு, இறைச்சிக் கோழி வகைகள் கட்டுப்பாடு எதுவுமின்றி கொண்டுவரப் ட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் எமது பண்ணையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் கால்நடை உற்பத்திகளுக்கு கட்டுப்பாட்டு விலை எதுவும் இல்லை. ஒவ்வொரு வெளி யார் வியாபாரியும் தாம் நிர்ணயிக்கும், விரும்பும் விலைக்கு அவற்றை விற்றுப் பெரும் பணம் ஈட்டிச் செல்கிறார்கள்.

தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்படும் கால்நடைத் தீவனங்களில் கலப்படம் நிறையவே உண்டு. இதனால் இறைச்சி, முட்டை மற்றும் பால் உற்பத்தி வீழ்ச்சி அடையும் அபாயமும், கால்நடைகள் இலகுவாக நோய்களால் பீடிக்கப்படுவது மற்றும் இறக்கும் அபாயமும் உண்டு.

குறிப்பாக, பொருத்தமான முறையில் தடை மருந்து ஏற்றப்படாத கோழிக்குஞ்சுகள் பெரும் எண்ணிக்கையில் விற்பனை செய்யப்படுகின் றன. இதனால் பண்ணையாளர்கள் மட்டுமன்றி, பொது மக்களும் ஏமாற் றப்படுகின்றனர். இதேபோன்று இறைச்சிக்கோழிகளும் விலை எல்லை எதுவுமின்றித் தென்னிலங்கை வியாபாரிகளால் விற்கப்படுகின்றன.

மறுபுறத்தில், தடை மருந்து ஏற்றப்படாத கோழிக்குஞ்சு விற்பனையால் குடா நாட்டில் கோழிகளுக்குத் தொற்று நோய்கள் உண்டாகும் ஆபத்து அதிகரித்து வருகிறது.

ஆகையால் இறைச்சிக்கோழி மற்றும் கோழிக்குஞ்சு வகைகள் குடாநாட்டுக்குள் கொண்டுவரப்படுவது கட்டுப்படுத்தப்பட வேண்டும். அவற்றுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுவதும் அவசியம். அதற்குச் சமாந்தரமாக கோழிக்குஞ்சு மற்றும் இறைச்சிக்கோழி வளர்ப்பை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், ஏற்பாடுகளை வகுத்தாக வேண்டும். அதேவேளை, கோழிப்பண்ணையாளருக்கு நிதி உதவி மற்றும் மானிய விலைகளில் தீவனங்களை வழங்கவும் வசதி செய்யப்படுவது உடனடித் தேவையும் அத்தியாவசியமும் ஆகும்.

இதேபோன்று கால்நடை வளர்ப்போருக்கு வேண்டிய உதவிகளும் வசதிகளும் வலுப்படுத்தப்பட்டு, அதனை குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு பிரதான அங்கமாக, கூறாக மாற்றுவதில் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

கால்நடை வளர்ப்பை, முன்னரைப் போன்று, கூட்டுறவுக் கட்டமைப்புக்குள்ளும் கொண்டு வந்து, அதில் பெரும் எண்ணிக் கையானோர் ஈடுபடக்கூடியதாக வழிசெய்வது காலத்தின் தேவையாகும்.

குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் சமகாலத்துக்கு ஏற்ற வகையில் புதிய மாற்றங்களையும் நவீன தொழில்நுட் பங்களையும் அறிமுகப்படுத்துவது அவசியம். துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களும் பெறப்பட்டால் கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணைத்தொழிலை குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் முக்கிய கூறாக மாற்ற இயலும். அரசாங்கத்தின் பங்களிப்பும் ஊக்குவிப்பும் பக்கத்துணையாக அமைந்தாலே உரிய பயனைப்பெற ஏதுவாகும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளும் தமது கவனத்தைச் செலுத்தட்டும்.

# மின்சாரசபைக்கு 8.5 பில்லியன் ரூபா அரச நிறுவனங்களிடமிருந்து நிலுவையாக

## யாழ். போதனா வைத்தியசாலை மட்டும் 42 மில்லியன் ரூபா

கொழும்பு, மே 29

இராணுவம் மற்றும் கடற்படை உட்பட பல்வேறு அரச நிறுவனங்கள் 8.5 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சாரசபைக்கு மின்சார நிலுவைத் தொகையாகச் செலுத்த வேண்டியிருப்பதாக மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையினர் மின்சாரக் கட்டண நிலுவையாக 110 மில்லியன் ரூபாவைச் செலுத்த வேண்டும். எம்பிலிப்பிட்டியவிலுள்ள தேசிய காகித ஆலைகள் கூட்டுத்தாபனம் 102 மில்லியனையும், வாழைச்சேனையிலுள்ள காகித ஆலைத் தொழிற்சாலை 81 மில்லியனையும் செலுத்த வேண்டும்.

மேலும் செட்டிக்குளம் மெனிக் பண்ணையிலுள்ள இடைத்தங்கல் முகாம் 17 மில்லியனையும் அநுராதபுரம் போதனா வைத்திய சாலை 19 மில்லியனையும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 42 மில்லியனையும் செலுத்த வேண்டும். இதை விட பலாலியிலுள்ள இராணுவ தலைமையலுவலகம் 19 மில்லியனைச் செலுத்த வேண்டியுள்ளது.

இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எரிபொருள் கொள்வனவு செய்த வகையில் 51 மில்லியன் ரூபாவைச் செலுத்த வேண்டும். ஆனால் திறைசேரி இதனைச் செலுத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. ஆகவே, நாம் இதனை எமது கணக்குகளில் இருந்து பதிவழிக்கவுள்ளோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மின்சார இழப்புகளை மீளாய்வு செய்து அவற்றைக்குறைப்பனவு செய்வதற்கு சர்வதேச நாணய நிதியம் எவ்வித நிபந்தனையும் விதிக்கவில்லையெனவும் அமைச்சர் கேள்வி யொன்றுக்குப் பதலளித்தார்.

தற்போதைய அதிகரித்த மின்கட்டணத்துக்கு 1995 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டுவரும் அனல் மின்சாரத்திட்டங்களே காரண மெனவும் அமைச்சர் மேலும் கூறினார். (க)

# 1000 பாடசாலைகளுக்கு அதிபர்களாக கல்வி நிர்வாக சேவையில் உள்ளோர்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

அச்சுவேலி, மே 29

தெரிவுசெய்யப்பட்ட 1000 பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றுவதற்கு கல்வி நிர்வாக சேவை தரத்தில் உள்ளவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கல்வி வலய ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளை உள்ளடக்கி நாடளாவிய ரீதியில் 1000 பாடசாலைகள் விசேட முன்னெடுப்புக்கள் மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட ஆயிரம் பாடசாலைகளையும் ஆரம்ப பிரிவைத் தவிர்த்து தரம் 6 - 13 வகுப்புக்களை உள்ளடக்கி அபிவிருத்தி செய்வது,பாடசாலையின் தரக்கட்டுப்பாட்டை உயர்நிலையில் பேணுவதற்கு வசதியாக இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களைக் குறித்த பாடசாலைகளின் அதிபர்களாக நியமிப்பது போன்ற நடைமுறைகளைப் பின்பற்றுவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

1000 பாடசாலைகளுக்கு கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களை அதிபர்களாக நியமித்தல் என்ற வகையில் பாடசாலைகளில் தற்பொழுது கடமையில் இருப்பவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐ சேர்ந்தவர்களாக இருந்தால் சேவை மூப்பு, திறமை அடிப்படையில் கணிசமான எண்ணிக்கையானோருக்குப் பதவி உயர்வு வழங்குவது, அண்மையில் நடைபெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 3 ஆள்சேர்ப்பு பரீட்சை மூலம் பதவி உயர்வு வழங்கி அவர்களை பாடசாலை அதிபர்களாக நியமிப்பது போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (த-11)

# யாழ். ஆஸ்பத்திரி கன்ரினில் சுகாதாரமற்ற உணவுகள்

## சுகாதாரப் பரிசோதகரால் அழிப்பு

யாழ்ப்பாணம்,மே 29

யாழ்.போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையில் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்த வடைகள் பொதியுடன் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

கடந்த சில காலமாக இந்தச் சிற்றுண் டிச்சாலையில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள்கள் இருந்தமை குறித்து வைத்தியசாலை சுகாதார பரிசோதகர் எச்சரிக்கை செய்திருந்தார்.

உணவு உற்பத்தி செய்யும் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதி அட்டையை ஒரு வாரத்தினுள் சமர்ப்பிக்கும்படியும் அவர் கூறியிருந்தார். இது வரை அவர்கள் அதைச் சமர்ப்பிக்கவில்லை.

இந்த நிலையில் சுகாதார முறைப்படியான பாதுகாப்பற்று அசுத்தமான முறையில் பையினூடாக எண்ணெய் ஊறிய நிலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் சிற்றுண்டிச்சாலைக்கு விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட வடைகள் அனைத் தையும் யாழ். போதனா வைத்தியசாலைச் சுகாதாரப் பரி சோதகர் முரளிதரன் கைப்பற்றி அழித்துள்ளார்.

ஏற்கனவே சிற்றுண்டிச்சாலை உணவுகளில் சுகாதாரக் குறைபாடுகள் இருப்பதாக மக்கள் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-149)

# அவசரகாலச் சட்டத்தை அரசு ஜூலையில் நீக்கும் சாத்தியம்

கொழும்பு,மே 29

அவசரகாலச் சட்டம் எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து நீக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளதாகத் தெரியவருகிறது.

அரசின் முக்கிய தலைவர்கள், சட்டமா அதிபர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகளின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது.

எனவே ஜூலை மாதத்துக்குப் பின்னர் அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்தும் நீடிப்பது அவசியமற்றது என அரசு கருதுவதாகத் தகவலறிய முடிகிறது.

இந்தியா உள்ளிட்ட இலங்கைக்கு ஆதரவான நாடுகள் பலவும் அவசரகாலச் சட்டம் இலங்கையில் தொடர்வது அவசியம் தானா எனவும் அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளன.

இதற்கமைய நாட்டின் பாதுகாப்பு நிலைப்பாடுகளை ஆராய்ந்து கணிப்பீடுகளை மேற்கொண்டதன் பின்னரே அவசரகாலச் சட்டத்தை நீக்கிவிடும் தீர்மானத்தை அரசு எடுத்ததாகத் தகவலறிய முடிகிறது.

அவசரகாலச் சட்டம் நீங்கப்பட்டாலும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் பதவிகளைத் தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கு மாற்று முறை கட்டமைக்கப்படவுள்ளதாகவும் அறிய முடிகிறது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது மண்டபம் அமைப்பதற்கு சாவற் கட்டில் காணி அன்பளிப்பு

நவாலி, மே 29

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் சாவற்கட்டு கிராமத்தில் பொது மண்டபம், சுகாதார நிலையம், சமுர்த்தி அலுவலகம் என்பவற்றை அமைப்பதற்கு அந்தப் பிரிவு கிராம சேவையாளர் வை. சந்தராசாவின் தீவிர முயற்சியினால் காணியொன்றினை அன்பளிப்பு செய்வதற்கு இப்பகுதி இளைஞர்கள் முன்வந்துள்ளனர். இவற்றை அமைப்பதற்குச் சாவற்கட்டு அந்திக்குழி வைரவர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள காணியையே வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். இவர்களது முன் மாதிரியை இந்தப் பகுதி மக்கள் பலரும் பாராட்டியுள்ளனர். (த-100)

# STUDY & WORK IN
## Newzeland / Australia / Italy UK / Canada / Switzer land
## (Study + Work + PR(Permanant Residency)

✓ அரச மற்றும் Embassy சட்ட திட்டங்களுக்கு அமைவாக சிறந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் WORK PERMIT VISA/ TOURIST VISA / MIGRATION VISA செய்துதரப்படும்.

✓ **100% Visa Gurantee for Genune Students**

✓ **100% Accomodation and Part Time Work Gurantee**

Courses :-
Business Management
- Computing
- Information Technology
- Hotel Management
- Beauty Culture

- Intake in Progress
Admissions From Reputed Colleges

**No Need IELTS**

Minimum Qualification :- O/L நிபந்தனைகளுக்குட்பட்டது

## Study MBBS/MD in UKRINE - East Europe

**Lugansk State Medical University**
SLMC Appoved
➡ **Admission in Progress**
UKRAINE
Entry Qualification : A/L 3 Passes (Biology,Chemistry,Physics)

## Study in INDIA (Bangalore,Tamilnadu)

Admissions From Reputed Colleges
- Engineering
- Medicine (MBBS)
- Business Management
- Computing Etc......

Note:-
Free Laptop
Free International Tour
✻ Condition Apply

- **Minimum Qualification A/L or Equivalent**

**SIEC College**
169 , George R De Silva Mawatha,
Kotahena , Colombo-13. Tel :- 011-2434767
**Mobile :- 077 3 502 612**

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 03 1943



இறப்பு 01 06 2009

## கணபதிப்பிள்ளை மகாதேவா (மகா)

ஆழ்ந்த அன்புடன்
நினைத்து துயருறும்
உங்கள் அன்பு மனைவி, மகள்,
உறவினர்

இல. 71, பீட்டர்சன் ஒழுங்கை.
கொழும்பு 06

## காணி விற்பனைக்குண்டு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் வீடு, தொழிற்சாலை கட்டுவதற்கு உகந்த 9¾ பரப்புக்காணி கிணற்றுடனும் பனைமரங்களுடனும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
0774951983.

## உயிரூட்டுகின்றோம்

உங்களிடம் உள்ள முற்றும் பழுதடைந்து, பாவிக்க முடியாத நிலையில் உள்ள எந்தவகையிலான தொழில்சார் மின்சாரக் கருவிகளையும், சிறப்பான முறையில் இயங்கக்கூடிய வகையில் உத்தரவாதத்துடன் திருத்தித்தரப்படும்.



தொழில்சார் இயந்திர மற்றும் மின்சார கருவிகளை சிறந்த உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

**GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.**

இல. 05, கருவப்புலம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி)
(விவசாய பீடத்திற்கு முன்பாக) . 021 2226459.

# Vacancies

**சாவகச்சேரியில் கடமையாற்றக் கூடிய**

I. காசாளர் (ஆண், இளைப்பாறிய அரசசேவையாளர் விரும்பத்தக்கது)
II. விற்பனையாளர் (பெண்கள், பழகவிரும்புபவர்களும்)
III. கணக்குப்பதிபுநர் (பெண்) உடன் தேவை.

திங்கள் (30.05.2011) மு.ப. 10 மணிக்கு முன்னர் நேரில் வரவும். யாழ். ரெக்ஸ் இல, 13 A, நவீனசந்தை (வெளிப்புறம்), சாவகச்சேரி (சி/249)

## வட இலங்கை சுதேச மருத்துவசபையின் பொதுக் கூட்டம் பிற்போடப் பட்டுள்ளது

இன்று (29.05.2011) ஞாயிற்றுக்கிழமை யாழ்/இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவிருந்த வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் விசேட பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளது.

தலைவர்,
வட இலங்கை
சுதேச மருத்துவ சேவை

செயலாளர்,
வட இலங்கை
சுதேச மருத்துவசபை

(460)22)

## கோயில் தேவைகளுக்குரிய

### குடை, கொடி, ஆலவட்டம், திரைச்சேலை, வாகைமாலை

விற்பனையாளர், உற்பத்தியாளர்
இப்பொருள்கள் திறமையாக
திருத்தம் செய்து கொடுப்பவர்கள்

# அஜந்தாஸ்

**66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2899**
(c/520)-22-43)

# BBS பாடசாலைகளின் ஆங்கில மொழி பாடநெறிகள்.

## BRITISH COUNCIL IELTS

அங்கிகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்

Academic, General
IELTS பரீட்சைக்கு தோற்ற விரும்பும்
யாழ்குடாநாட்டு மாணவர்கள்,
BBS, நல்லூர் வளாகத்திற்கு நேரில்
வருகை தந்து, பரீட்சைக்கட்டணத்தைக்கட்டி
பதிவு செய்யலாம்.

## Certificate in English, Diploma in English, Advanced Diploma in English

O/L, A/L கற்ற மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்.
தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்.
வசதிக்கேற்ப நேர அட்டவணை.
பரீட்சைக்குப் பதிவு செய்பவர்களுக்கு இலவச கையேடுகள்.
பரீட்சை வழிநடத்தல் வகுப்புக்கள்.
இலக்கண வகுப்புக்கள்.

## ENGLISH COURSES FOR CHILDREN
### சிறுவர்களுக்கான ஆங்கில பாடநெறிகள்

Pre-Foundation, Foundation - Level 1,2,3,4
School Syllabus Covered

வாரத்தின் எல்லா நாட்களிலும் BBS இன் அனைத்து வளாகங்களிலும் நடாத்தப்படும்

*Dr. Maria Montessori & Canadian Early Learning Method* ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்.

### பாலர் பிரிவுகள்

✸ **Play Group (2+சிறார்களுக்கு)**
Sensorial Activities
விளையாட்டுகளுடன் கூடிய அதிநவீனகற்கை நெறிகள்
Song, Poems, Nursery Rhumes, Drama & Dialogue

✸ **Montessori (3+சிறார்களுக்கு)**
மொழி அறிமுகம் - ஆங்கிலம்
(Speech Skills)- தமிழ்
எழுத்து அறிமுகம் - ஆங்கிலம்
(Writing Skills)- தமிழ்
எண்பயிற்சிகள் (Arithmetical Operations)
Sensorial Activities
Song, Poems, Drama & Dialogue

✸ **Pre School (4+சிறார்களுக்கு)**
எண், எழுத்து கருதுகோள்
ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
Sensorial Activities
Song, Poems, Nursery Rhumes, Drama & Dialogue
அடுத்த கல்வியாண்டுக்கான முழுத் தகுதி நிலை

### பாலர் பாடவிதானம்

பாடசாலை ஆரம்பம் காலை 7.30
பாடசாலை முடிவு மதியம் 12.30

**வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச்செயற்பாடுகள்**

| | | |
|---|---|---|
| Language Skils - | English | - 5 hrs |
| Language Skils - | Tamil | - 4 hrs |
| | Maths | - 4 hrs |
| Sensorial Activities | | - 2 hrs |
| Songs, Poem, Drama, Dialog | | - 2 hrs |
| Art and Craft | | - 2 hrs |
| Play Activities | | - 3 hrs |
| Baratha Natyam | | - 1.5 hrs |
| Computing | | - 1.5 hrs |

**எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்**

**English Day & Concert** - ஆங்கில தின கலைவிழா
**Sport Day** - விளையாட்டு விழா
**Bharatham Festival** - பரதநாட்டிய விழா
**Art & Craft Exhibition** - சித்திர கைவேலைக் கண்காட்சி
**Muthamilzh Vizhla** - முத்தமிழ் விழா
**Pre School Graduation and Carol Ceremony**

### BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர் | 140, கோவில் வீதி, நல்லூர். 021 222 5796 |
| கோப்பாய் | பருத்தித்துறைவீதி, கோப்பாய் மத்தி. |
| நீர்வேலி | 1ம்கட்டை, இராசவீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி | சாவகச்சேரி இந்துஆரம்பபாடசாலை அருகாமை. |
| மானிப்பாய்1 | 252, ஆலடிசந்தி, யாழ்வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய்2 | சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுண்ணாகம் | Lakshmi (புதியநீதிமன்ற அருகாமை K.K.S வீதி,மல்லாகம் |
| புலோலி | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை. |
| சங்கானை | நிகர வைரவர் கோவிலடி, AGA Office அருகாமை. |

British BUSINESS SCHOOL
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

140, கோவில் வீதி, நல்லூர். Contact: 021 222 5796, 077 3627055, 077 6646357

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவுக்குள் கடல் வழி மூலம் இனி எவரும் நுழைய முடியாது!



**தூதர் பேட்டி**

ஆஸ்திரேலியாவுக்கு அகதிகளாகப் படகுகள் மூலம் செல்வோரை மலேசியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கான உடன்படிக்கை ஒன்றில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. தமிழர் கள் உட்பட அகதி அந்தஸ்துக் கோரி ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவோரைத் தடுத்து நிறுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம்.

இந்த உடன்படிக்கையை அடுத்து இனிவரும் காலங்களில் ஆஸ்திரேலியக் கடல் எல்லைக்குள் நுழையும் எவரும் கிறிஸ்மஸ் தீவில் அடைத்து வைக்கப்படமாட்டார்கள். இதுபற்றி விளக்குகிறார் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் குலுமன் காதி. உதயனுக்கு அவர் வழங்கிய செவ்வி வருமாறு:

கே: வேறு நாடுகளில் இருந்து பொதுமக்கள் ஆஸ்திரேலியாவுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க உங்கள் நாடு மலேசியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. அதுபற்றி விளக்க முடியுமா?

ப: ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் சட்ட விரோதமாக வந்து சேரும் புகலிடம் கோருவோரை இந்த ஒப்பந்தத்தின் கீழ் மலேசியாவுக்குத் திருப்பி அனுப்பி வைப்பதற்கு இரு நாடுகளும் உடன்பட்டுள்ளன. ஆள்களைக் கடத்துவோரின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு ஆஸ்திரேலியா இதன் மூலம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இலங்கையர்கள் உட்பட கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா வரும் எவரும் இனி மலேசியாவுக்கே அனுப்பி வைக்கப்படுவார்கள்.

அப்பாவி மக்களின் உயிரைப் பணயம் வைப்பதன் மூலம் இலாபத்தைப் பெறும் மிக மோசமான நடவடிக்கையான ஆள்களைக் கடத்துவதை நிறுத்துவதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.

கே: கிறிஸ்மஸ் தீவில் தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும் மலேசியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்களா? அல்லது எதிர்காலத்தில் கைது செய்யப்படுவோர் மாத்திரமே மலேசியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்களா?

ப: இப்போது தொடக்கம் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியாவுக்கு வந்து சேர்பவர்களுக்கே புதிய ஒழுங்குமுறை பொருந்தும்.

கே: புதிய ஒப்பந்தத்தின்படி இனி மேல் மலேசியாதான் அகதிகளுக்கான இடைத்தங்கல் முகாமாக (கிறிஸ்மஸ் தீவுக்குப் பதிலாக) செயற்படுமா?

ப: புகலிடம் கோருவோரின் விண்ணப்பங்கள் தொடர்பாகவும் அவர்களது அகதி நிலை அறிந்தும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகமே முடிவுகளை எடுக்கும். ஆனால் ஏற்கனவே மலேசியாவில் தங்கியிருந்து புகலிடம் கோருவோரின் விண்ணப்பங்களே முதலில் பரிசீலிக்கப்படும். ஆஸ்திரேலியாவில் இருந்து அனுப்பப்படுவோருக்கு எந்த முன்னுரிமையும் வழங்கப்படாது. உண்மையில் இவர்கள் அனைவரும் வரிசைக்கிரமத்தில் கடைசியில் சேர்த்துக்கொள்ளப்படுவர். விண்ணப்பங்கள் தரப்படுத்தப்பட்டதும் அகதி அந்தஸ்து பெறத் தகுதியானவர்கள் மட்டுமே ஆஸ்திரேலியாவுக்குள் உள்வாங்கப்படுவார்கள். ஆஸ்திரேலியாவில் இருந்து மலேசியாவுக்கு அனுப்பப்படும் எல்லோருக்கும் அகதி அந்தஸ்து வழங்கப்படும் என்று சொல்ல முடியாது.

புகலிடக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட அனைவரும் தங்களது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

**கே:** இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல் குறித்த ஆஸ்திரேலியாவின் நிலைப்பாடு என்ன?

ப: இலங்கையில் உண்மையான நல்லிணக்கமும் நிலையான சமாதானமும் ஏற்பட வேண்டும் என்பதில் ஆஸ்திரேலியா தீவிர அக்கறை கொண்டுள்ளது. நாட்டின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைமை என்பன சம்பந்தமாக இலங்கை அரசுடன் ஒழுங்கான அடிப்படையில் நான் பேச்சுக்களை நடத்தி வருகின்றேன். இன அடிப்படையிலான சிறுபான்மையினர் உட்பட சகல இலங்கை மக்களதும் சட்டபூர்வமான நலன்களைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை ஆஸ்திரேலியா பெரிதும் விரும்பும்.

### புனர்வாழ்வு நடவடிக்கைகள்

**கே:** யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு நீங்களும் உங்களது அரசும் ஆதரவு வழங்கி வந்திருக்கின்றீர்கள். இருந்தபோதிலும் திட்டவட்டமான சிவில் நிர்வாகம் இல்லாதமையால் புனர்வாழ்வு நடவடிக்கைகளை உங்களால் மேற்கொள்ள முடிந்துள்ளதா?

ப: யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது ஏற்பட்ட மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென 2009 ஆம் ஆண்டில் இலங்கைக்கான உதவியை ஆஸ்திரேலியா குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்திருந்தது. 2010- 2011 ஆகிய ஆண்டுகளுக்கான நிதியுதவி 46 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்களாகும். இந்தத் தொகையில் பெரும்பாலான பகுதி இலங்கையின் வடபகுதியிலுள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கே செலவிடப்படுகிறது.

பாடசாலைகளை மீண்டும் அமைத்தல், இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளைப் புனரமைத்தல், கண்ணிவெடி அகற்றல், விவசாயிகள் தங்களது நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவென விதைகள் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்குதல் என்பவற்றுக்கு நாம் நிதியுதவி வழங்குகின்றோம்.

**கே:** மீளக்குடியேற்றம் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் ஒரு லட்சம் மக்கள் இன்னும் சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை என்கிறது ஐ.நா. அவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்று தமது சொந்தக் காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கும் தடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையை நீங்கள் நேரடியாகவே அவதானித்துள்ளீர்கள். இதுபற்றி உங்களது கருத்துக்கள் என்ன?

ப: யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து தற்போது சொந்த வீட்டுக்குத் திரும்புவோர் பலதரப்பட்ட கஷ்டமான நாளாந்த சவால்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை நான் அறிந்திருக்கின்றேன். தாக்குதல் காரணமாகச் சேதமடைந்த வீடுகள் மற்றும் ஏனைய கட்டடங்களைப் புனரமைத்தல், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையை மீண்டும் உருவாக்குதல், வெடிக்காத கண்ணிவெடிகள் மற்றும் ஏனைய சாதனங்கள் என்பனவற்றை அகற்றுதல் என்பனவும் இதில் அடங்கும்.

வடபகுதி மக்களுக்கு எங்களால் இயன்ற உதவிகளை நாம் வழங்கி வருகின்றோம். கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கையின் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஆஸ்திரேலியா 20 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்களை வழங்கியுள்ளது.

ஐயாயிரம் வீடுகளை திருத்துவதற்கும் புனரமைப்பதற்குமென ஐ.நா. மூலம் நாம் நிதியுதவி வழங்கியுள்ளோம். விவசாயிகள் தங்கள் வாழ்க்கை நிலையை மீண்டும் ஆரம்பிக்கவும் சுயபூர்த்தியை மீண்டும் அடையவுமென உணவு விவசாய ஸ்தாபனத்துடன் விதை நெல் உட்பட விவசாய உபகரணங்களை வழங்குவ தில் நாம் இணைந்துள்ளோம்.

உணவு விவசாய ஸ்தாபனத்தின் ஊடாக நாம் வழங்கிய உதவி 30,000 குடும்பங்களைச் சென்றடைந்துள்ளது. இவர்கள் 70,000 ஏக்கர் நிலத்தில் பயிர்ச்செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

யுனிசெவ் ஊடாகப் பளையிலுள்ள பாடசாலை உட்பட யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்பதற்கென நாம் நிதியுதவி வழங்குகின்றோம். 30,400 குடும்பங்களைக் கொண்ட 120,000 மக்களுக்கு ரொக்கப்பண நிதியுதவியாக 20 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர் வழங்கப்பட்டுள்ளது. அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி என்பனவற்றுக்கு ஊடாக இவை வழங்க''

*

**இலங்கையில் உண்மையான நல்லிணக்கமும் நிலையான சமாதானமும் ஏற்பட வேண்டும் என்பதில் ஆஸ்திரேலியா தீவிர அக்கறை கொண்டுள்ளது. நாட்டின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைமை என்பன சம்பந்தமாக இலங்கை அரசுடன் ஒழுங்கான அடிப்படையில் நான் பேச்சுக்களை நடத்தி வருகின்றேன். இன அடிப்படையிலான சிறுபான்மையினர் உட்பட சகல இலங்கை மக்களதும் சட்டபூர்வமான நலன்களைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதை ஆஸ்திரேலியா பெரிதும் விரும்பும்.**

நேர்காணல்:
**புத்திரசிகாமணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப்படுத்தல் உதவியாளர்கள்

நாட்டின் சகல பகுதிகளிலும் நிதித்துறைச் சேவைகளை வழங்கும் பிரபல நிறுவனமான சென்றல் பினான்ஸ் கம்பனி, கீழ்க்காணும் பிரதேசங்களில் நடவடிக்கைகளை மேம்படுத்தவென சந்தைப்படுத்தல் உதவியாளர்களின் சேவையைக் கோருகின்றது.

- சாவகச்சேரி
- கிளிநொச்சி
- நெல்லியடி
- சுன்னாகம்
- முல்லைத்தீவு
- மன்னார்

இந்த சந்தைப்படுத்தல் உதவியாளர்கள், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா கிளைகளிலிருந்தே செயற்படுவார்கள். நிறுவனத்தினால் வழங்கப்படும் நிதித்துறைச் சேவைகளைப் பெறவிரும்பும் வாடிக்கையாளர்களை இனங்கண்டு, அவர்களுக்கான சேவைகளை வழங்குவதே அவர்களின் கடமையாகும்.

விண்ணப்பதாரிகள் சக்திவாய்ந்தவர்களாக இருப்பதோடு, மேன்மையடைய நாட்டம் கொண்டவர்களாகவும் இருத்தல் அவசியமாகும். நியாயமான கல்வித்தகைமைகளைக் கொண்டிருப்பதுடன், விற்பனைத் திறனையும், சந்தைப்படுத்தல் அனுபவத்தையும் அவர்கள் கொண்டிருக்க வேண்டும். நிதித்துறைச் சேவைகள் பிரிவில் முன் அனுபவம் பெரிதும் விரும்பத்தக்கது. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இத்தகைய நியமனங்கள், சந்தையில் உள்ள ஏனைய தரங்களுக்கு சமமான வகையில் கவர்ச்சிகரமான சம்பளப் பொதியை கொண்டிருக்கும்.

நீங்கள் விரும்பும் பிரதேசத்தை காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் உறவினர் அல்லாத இரண்டு சான்று பகர்வோரின் பெயர்கள் என்பனவற்றுடன் 7 நாட்களுக்குள் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

CF
பொது முகாமையாளர் (HR&D)
**சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி**
நகர அலுவலகம் 270, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2


## கூரைத் தகடுகள் வழங்கப்பட்டன

நவாலி, மே 29

வலி.தென் மேற்கு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரி வில் மாரீசன்கூடல், மாதகல் கிழக்கு ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்வதற்காக காணிகளைத் துப்புரவாக்கிக் கொண்டிருக்கும் 112 குடும்பங்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட கூரைத்தகடுகள் நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இவர்களுக்குரிய ஏனைய பொருள்கள் இங்கு வந்து சேர்ந்ததும் விரைவில் வழங்கப்படுமென்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.(த-100)


**விற்பனைக்கு**
Printing Machine, for Sale A3, அமாடா 700 CDX A4, Ricco, Table Top.
0723365323, 0779298583.
(c238)

**மணமகள் தேவை**
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 ஆம் ஆண்டு ஒன்றில் செவ்வாய், புனர்பூசம் கிரக பாவம் 13 உடைய அரச உயர்பதவி வகிக்கும் முதுமாணி பட்டதாரி மணமகனுக்கு அழகிய பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
T.P-0714578793
(4647)

**வீடு விற்பனைக்குண்டு**
யாழ்.மாநகர சபைக்கு மிக அண்மையில் கச்சேரி நல்லூர் வீதியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் 3 பரப்பும் 3.15 குளியும் கொண்ட வீடும், காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778697120, 0728952951
(4646)

**காணி விற்பனைக்கு**
கோப்பாய் வடக்கு, பருத்தித்துறை வீதியில் A.G.A. அலுவலகம், மக்கள் வங்கிக்கும் அருகில் 9 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (துண்டாகவோ முழுமையாகவோ பிரித்துத் தரப்படும்.)
தொடர்பு:- 0776513673, 0112559503
(4642)


## 13ஆவது ஆண்டு நினைவு

### சுப்பையா ஆறுமுகராசா



பிறப்பு: 08.08.1932 இறப்பு: 23.05.1998

திதி: தேய்பிறை வைகாசி துவாதசி

நீ கனவில் வந்து என்னை எழுப்புகின்றாய்
கண் விழித்துப் பார்த்தேன்
உன்னைக் காணவில்லை எங்கே சென்றாய்?

நாம் பிறக்கப் போவதும் யாருக்கும் தெரியாது
நாம் இறக்கப் போவதும் யாருக்கும் தெரியாது
எல்லாம் அவன் செயல்


எத்தனை வருடம் சென்றாலும் உங்களை
மறக்க முடியவில்லை என்னை எப்போது அழைப்பாய்.

மனைவி-ஆறுமுகராசா சறோஜினிதேவி.
72/12, பிரம்படி லேன், கொக்குவில்.

(4645) (38-19-25)

## மரண அறிவித்தல்

### குமாரவேலு காசிப்பிள்ளை (கலாபூஷணம்)



தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு காசிப்பிள்ளை (27.05.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு-ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காங்கேசு- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் நாகபூரணத்தின் அன்புக் கணவரும் முத்துக்குமாரசாமி (கனடா), ஆனந்தி, கெங்காதேவி, சிவராணி (ஆசிரியை-நவீல்ட் பாடசாலை, கைதடி), ருக்மணிதேவி, சிவநேசகுமார் (SPHI, சு.வை.அ.பணிமனை, உடுவில்), ஐங்கரமூர்த்தி (லண்டன்), சாந்தினிதேவி (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), பத்மாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் றதி (கனடா), சற்குணராசா, மனோகரன், சச்சிதானந்தன், விஜயாவதி (ஆசிரியை, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), லலிதாறஞ்சினி (லண்டன்), கருணாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் சோபிநார்த், நிதர்ஷன் (கனடா), கோவர்த்தன், கீர்த்திகா, சாரங்கன், தாரணி (கனடா), சாருஜன், ரூபிகா, சாம்பவி, சங்கவி, அபிநயா, அபர்ணா, வர்ஷவி, கஜானன், கஜானவி, மதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாவற்குழி கிழக்கு பிணமுருங்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன் கோயில் வீதி,
தச்சன்தோப்பு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்

(4644) (38-19-25)


**யாழ்நகரில் City and Guilds (UK) EC(UK) பொறியியல் வகுப்புக்கள்**

O/L அல்லது A/L தகுதியோடு நீங்களும் A BRITISH QUALIFIED CHARTERED ENGINEER / QUANTITY SURVEYOR ஆகலாம்.



**Congratulation**
**Medal of Excellence 2010-2011**
Advanced Diploma in Construction Industry (Civil Engineering)
**City and Guilds (UK) Programme**
**செல்வி. நிதர்சனா நீதிராஜா**

City & Guilds UK Dec. 2011

**Diploma /Ad.Diploma in**
- *Telecommunication
- *Electrical & Electronic
- *Civil Engineering
- *Quantity Surveying

நுழைவுத்தகுதி :-
Certificate - O/L, Diploma - O/L, A/L
Ad. Diploma - HNDE/NDT/NDES/NCT/Diploma

COMPUTER CLASSES
- Diploma in Computer Studies
- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Information Technology

ENGLISH CLASSES
- IELTS
- Spoken English

**Application Closing Date: 05/06/2011**

Course Director: Prof. கதிரவேலு சந்திரபோஸ்

APSS ENGINEERING (Pvt) Limited
Anna Vasa
Dr. Subramanium Road
Chunnakam, Jaffna
Tel: 0214923045
Hotline: 077 2306642, 077 3867695, 077 2418804


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தில் அரசின் வீட்டுத்திட்டம் பெற்றிருந்தால் யாழ்ப்பாணத்தில் மீண்டும் அதை வழங்க முடியாது

## முஸ்லிம்கள் தொடர்பாக யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தங்கியிருந்த முஸ்லிம்கள் அங்கு அரசின் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற்றிருந்தால் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் மீண்டும் வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கப்படமாட்டாது.

புத்தளத்தில் வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறியிருந்தால் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் தமக்கு வழங்கப்படவிருந்த வீட்டுத்திட்ட உதவிகள் பிரதேச செயலகத்தால் தடுத்து நிறுத்தப்படுவதாக உதயனுக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து சென்ற இந்த முஸ்லிம்களில் அநேகமானோர் புத்தளம் மாவட்டத்தில் தங்கியிருந்துள்ளனர். அங்கு இருந்த காலப்பகுதியில் அவர்களுக்கு அரசினாலும் உலக வங்கியினாலும் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது இவர்கள் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறியுள்ளார்கள். இங்கு அவர்களுக்கு வீட்டுத்திட்ட உதவிகள் உட்படப் பல உதவிகள் வழங்கப்படும் என அறிவித்திருந்தோம். அதற்கான முன்னேற்பாடாக அவர்களுக்குப் பதிவு அட்டையும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் புத்தளத்தில் சட்ட ரீதியாக வீட்டுத் திட்டங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரங்களைப் புத்தளம் மாவட்ட அரச அதிபர் எமக்குத் தற்போதுதான் அனுப்பி வைத்துள்ளார். அதன்படி புத்தளத்தில் வீட்டுத்திட்டங்களைப் பெற்றவர்களுக்கு இங்கு மீண்டும் வீட்டுத்திட்டங்கள் வழங்கமுடியாது. அவர்கள் இங்கு தமது செலவிலேயே தமக்கான தங்குமிடங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

புத்தளத்தில் வீட்டுத்திட்டங்களைப் பெற்றுக் கொள்ளாமல் உள்ள முஸ்லிம்களுக்கு யாழ்ப்பாணத்தில் வீட்டுத்திட்டங்கள் பெற்றுக் கொடுக்கப்படும். அடுத்த வாரத்தில் அவர்களுக்கு தற்காலிக தங்குமிடங்களை அமைப்பதற்கான முதற்கட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். பிரதேச செயலாளர் முன்னெடுத்து வருகிறார். வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படாத முஸ்லிம் மக்களுக்கு அதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தி கடிதங்களை அனுப்பி வைக்குமாறு நான் அவரைப் பணித்துள்ளேன் - என்றார். (த-4)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கூரைத் தகரங்கள்

தென்மராட்சி, மே 29

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக்கான தகரங்கள் நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டன.

எழுதுமட்டுவாழ் வடக்கு (ஒட்டுவெளி) கரம்பகம், கைதடி - நாவற்குழி பிரிவுகளில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா 12 தகரங்கள் வீதம் கையளிக்கப்பட்டன.

யாழ். செயலகத்தால் வழங்கப்பட்ட தகரங்களே நேற்று கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# பிணை நிற்க எவரும் முன்வரவில்லை சந்தேகநபர் தொடர்ந்தும் சிறையில்

தென்மராட்சி, மே 29

யாழ்.மேல் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்ட போதிலும் பிணை நிபந்தனைகளை மேற்கொள்ள எவரும் முன்வராததால் தொடர்ந்தும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் வழக்கின் எதிரி.

கடந்த 2008 நவம்பர் 27 ஆம் திகதி கர்ப்பிணியான மனைவியைக் கொலை செய்ததாக நாவற்குழி தெற்கைச் சேர்ந்த ரவீந்திரன் சுரேஷ் என்பவர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு அண்மையில் சாவகச்சேரி நீதிமன்றால் யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப் படுத்தப்பட்டது. கடந்த 19 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த நபரை 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்ல மேல் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. அத்துடன் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடப் படல் வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில் இவரைப் பிணையில் எடுக்க எவரும் முன்வராததால் தொடர்ந்தும் அவர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-207)

## தரமான கல்விக்கு...




வழிகாட்டல்கள்: யாழ்.வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு உப தலைவர் ரி.டபிள்யூ. விமல்ராஜன் தலைமையில் இடம்பெற்றது. இதில் சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகர் திருமதி எ.ஜெ.புத்திசிகாமணி விரிவுரை வழங்குகிறார். (த-302)

# ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் சங்கானைக் கிளை திறப்பு



யாழ்ப்பாணம், மே 29

'ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ்' நிறுவனத்தின் கிளை நேற்று பொன்னாலை வீதி, சங்கானையில் திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்தக் கிளையைத் திறந்து வைத்தார்.

நாடளாவிய ரீதியாக 126 ஆவது கிளையாகவும், வடமாகாணத்தில் 5 ஆவது கிளையாகவும் இந்தக் கிளை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மோகன் டி அல்விஸ், தேசிய விற்பனைப் பிரிவின் உதவிப் பொது முகாமையாளர் நிலங்க விக்கிரமசிங்க, வடமாகாணத்துக்கான ஆலோசகர் திருமதி ரஜனி அரியநாயகம், வடபிராந்திய விற்பனை முகாமையாளர் எஸ். சத்தியன், சங்கானை உதவிப் பிரதேச செயலர் திருமதி ஆனந்தி சிவதட்சணாமூர்த்தி உள்ளிட்டவர்கள் இதில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் ஓர் அங்கமாக நிறுவனம் சங்கானைப் பகுதிப் பாடசாலை மட்டத்தில் நடத்திய சித்திரப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

கிளைத் திறப்பு விழா நிகழ்வுக்கு முன்னர் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். தேசியக் கொடி, நிறுவனக் கொடிகள் விருந்தினர்களால் ஏற்றி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினரால் நாடா வெட்டி உத்தியோக பூர்வமாகக் கிளை திறந்து வைக்கப்பட்டது. (த-14)

# அச்சுவேலி மாவடி கிராமத்துக்கு குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை

அச்சுவேலி, மே 29

அச்சுவேலி தெற்கு மாவடிக் கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்ய பிரதேச செயலர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அச்சுவேலிதெற்கு மாவடி கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்யுமாறு கிராமத்து மக்கள் மகஜர் மூலம் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரதேச செயலர் நிறுவனங்களின் உதவியுடன் குடிதண்ணீரை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நிலாவரையில் அமைந்துள்ள குழாய் கிணற்றில் இருந்து அச்சுவேலி வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளுக்கு நிலத்தடிக் குழாய்கள் மூலம் குடிதண்ணீரை விநியோகித்து வருகிறது.

இந்த நிலையில் மாவடிக் கிராமத்துக்கு இதுவரை குடிதண்ணீர் வழங்கப்படவில்லை.

இந்தக் கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கு 6 லட்சம் ரூபா வரை செலவு ஏற்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாவடிக் கிராமத்தில் தண்ணீர்த் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு அதன்மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க வசதிகள் செய்யப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-11)

# பளையில் இறால் கறி உண்ட நால்வர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, மே 29

இறால் கறியினை இரவு உண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பளை, வண்ணான்கேணி வடக்கைச் சேர்ந்த தவராசா மல்லிகாதேவி (வயது-43), இவரது பிள்ளைகளான தவராசா நெல்சன் (வயது 20), தவராசா றெஜித்தன் (வயது18), தவராசா திபீகா (வயது 2) ஆகியோரே விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உணவில் நஞ்சுத்தன்மை ஏற்பட்டதால் இவர்கள் பாதிக்கப்பட்டதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டம்; கொழும்பு பல்கலை வென்று கிண்ணம் சுவீகரித்தது

யாழ்ப்பாணம், மே 29

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வந்த - 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கொழும்பு பல்கலைக் கழக அணி சம்பியன் ஆனது.

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணியும் கொழும்பு பல்கலைக்கழக அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்துக்களம் இறங்கி 28.4 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து



122 ஓட்டங்களைப் பெற்றது.

கருணரட்ண 28 ஓட்டங்களையும், டெற்றிக்டேனியா 20 ஓட்டங்களையும், புகாறி 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் கொழும்பு பல்கலைக்கழக அணிவீரர்களான சனக விஜயவர்த்தன 7 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், அனுரரெட்ண 5.4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், திஸார மதுசன் 9 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், சந்துரூபன் 4 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

123 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென களமிறங்கிய ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி 34.2 ஓவர்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

ராஜபக்ஷ 50 ஓட்டங்களையும், விஜகுணவர்த்தன 32 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றுக்கொடுத்தனர்.

உதிரிகளாக 12 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி வீரர்களான கனுறரட்ன 10 ஓவர்கள் பந்து வீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று இலக்குகளையும் அத்தபத்து 10 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளையும் பெரேரா 7 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளையும் வீழ்த்தினர்.

சிறந்த ஆட்டநாயகன், துடுப்பாட்ட வீரனாக கொழும்பு பல்கலைக்கழக அணித் தலைவர் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த பந்து வீச்சாளராக கொழும்பு பல்கலைக்கழக வீரர் சனக விஜயவர்த்தன தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த களத்தடுப்பாளராக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக அணி வீரன் பீரிஸ் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதம விருந்தினராக யாழ்பல்கலைக் கழக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு ஆலோசகர் சபைத் தலைவருமான டாக்டர் என். எஸ். சுரேந்திரன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

(ஐ-23)

## சதுரங்கத்தில் வென்றது பருத்தித்துறை மெதடிஸ்

வலி.வடக்கு மே 29

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டியில் வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை யாழ். மாவட்டச் சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல் லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:

பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை (முதலாம் இடம்), அளவெட்டி அருணோதயாக் கல்லூரி (இரண்டாம் இடம்), பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்).

(த-86)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு வவுனியாவில் நடைபெற்றது. இதில் விளையாட்டு வீரர் ஒருவர் மங்கள விளக்கேற்றுகின்றார். வடமாகாணக் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் ஆர்.ரவீந்திரன் , வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, வவுனியா மேலதிக அரச அதிபர் ஆகியோர் உள்ளனர். (த-26)

## தடகளப் போட்டிகள் ஒத்திவைப்பு

வலி.வடக்கு, மே 29

யாழ். மாவட்ட செயலக விளை யாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் நடத்த விருந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் மூன்றாம் வாரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மெய்வன்மைச் சங்கம் அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் கனிஷ்ட பிரிவு வீரர்கள், வீராங்கனைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது. இதில் யாழ். மாவட்ட வீரர்கள், வீராங்கனைகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனைக் கருத்திற் கொண்டே தடகளப் போட்டிகள் மூன்றாம் வாரத்துக்கும் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-86)

## வெற்றிக் கிண்ணம் ஞான முருகனுக்கு

யாழ்ப்பாணம், மே 29

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் சம்பினாகியது.

கடந்த வியாழக்கிழமை பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

போட்டி ஆரம்பமாகியது முதல் விறுவிறுப்பான ஆட்டத்தை இரு அணிகளும் வெளிப்படுத்தின.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது இரண்டு அணிகளும் கோல் எதனையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் இருந்தது.



இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் மீண்டும் ஆரம்பமான போது இரண்டு அணிகளும் கோல் போடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டன.

இந்த வேளையில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மூன்று கோல்களைப் போட்டது.

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணிகோல்களைப் பெறுவதற்கு முயற்சி எடுத்தபோதும் அது கைகூடவில்லை.

ஆட்ட நிறைவில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனானது.

(த-23)

## உதைபந்தாட்டத்தில் கரவெட்டி சம்பியன்

வலி.வடக்கு, மே 29

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலக அணி யாழ். மாவட்ட சம்பியனாகியது.

வடமராட்சி திக்கம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி நிறைவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன. எனினும் கரவெட்டிப் பிரதேச செயலக அணி முந்திக் கொண்டது. அது இரண்டு கோல்களைப் பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் கரவெட்டி பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல் கணக்கில் கோப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றிகொண்டு யாழ்.மாவட்ட சம்பியனாகியது. (த-86)

## எல்லே போட்டிகள் இன்று

வலி.வடக்கு, மே 29

யாழ்.மாவட்டச் செயலகவிளையாட்டுப் பிரிவு வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கிடையே நடத்தும் பெண்களுக்கான எல்லேப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் யாழ்ப்பாணம், வேலணை, நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி பிரதேச செயலக அணிகளும், நெடுந்தீவு, மருதங்கேணி ஊர்காவற்றுறை, காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு அணிகளும் கலந்து கொள்ளவுள்ளன. (த-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவ பிரிவின் முக்கியமான பதவிகள் வெற்றிடமாக

முல்லைத்தீவு, மே 29

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர், உதவி இணைப்பாளர் பதவிகள் நிரப்பப்படாமல் மிக நீண்ட காலமாகவே வெற்றிடமாக உள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கும் மாவட்ட இணைப்பாளராக கே. வைரமுத்து கடமையாற்றுகின்றார். கடந்த காலங்களில் இயற்கை, யுத்த அனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்த மாவட்டத்துக்கெனத் தனியான இணைப்பாளர் நியமிக்கப்பட வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமாகாணத்தின் ஏனைய நான்கு மாவட்டங்களின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கெனத் தனியான வாகன வசதி உள்ளது. ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கென அவ்வாறு இதுவரை செய்யப்படவில்லை. பெரிய நிலப் பரப்பை உடைய இந்த மாவட்டத்தின் அனர்த்த நடவடிக்கைகளில் ஈடுபடவென தனியான வாகனம் ஒன்று விரைவில் வழங்கப்பட வேண்டுமெனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-121)

# மூன்று நாள் வதிவிடக் கருத்தரங்கு

வவுனியா, மே 29

வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 30 அரச அதிகாரிகளுக்கு அனர்த்த இடர் முகாமைத்துவ மூன்று நாள் வதிவிடக் கருத்தரங்கு மிக அண்மையில் நடைபெற்றுள்ளது.

வவுனியா, தவசிக்குளத்திலுள்ள சேவாலங்கா பண்ணை மண்டபத்தில் ஒக்ஸ்பாம் - பிரிட்டன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக வெளிநாடுகளில் சிறப்புப் பயிற்சிகள் பெற்ற நிபுணத்துவ ஆலோசகர் எஸ்.மரியதாசன் தமிழ் மூலம் பயிற்சிகளை வழங்கினார். கொழும்பிலுள்ள அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகள் இந்த நிகழ்வுக்கான ஒழுங்கமைப்பை மேற்கொண்டனர்.

அனர்த்தங்களை இனம் காண்பது, அவற்றைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் காண்பது தொடர்பான விடயங்கள் தற்போது ஆராயப்பட்டன. (க-121)

# கண் சிகிச்சை வைத்தியர் இல்லை; நோயாளர்கள் ஏமாற்றத்துடன்

மன்னார், மே 29

மன்னார் பொது வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவின் வைத்தியர் நேற்றைய தினம் சனிக்கிழமை கடமையில் ஈடுபடாததன் காரணமாகத் தாம் அனைவரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதாக சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒரு வாரத்தில் திங்கள் மற்றும் சனி ஆகிய இரண்டு தினங்களில் மட்டுமே கண் சிகிச்சை இடம்பெறுவது வழமை. இந்த நிலையில் நேற்றைய தினம் சனிக்கிழமை நூற்றுக்கணக்கான மக்கள் கண் சிகிச்சைக்கு வந்திருந்த போதும் வைத்தியர் இல்லாததன் காரணமாக அனைவரும் திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படித் தாம் பல தடவைகள் ஏமாற்றமடைந்து திரும்பிச் சென்றதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மன்னார் பொது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் நேற்று சனிக்கிழமை நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் வைத்திய பரிசோதனைகளுக்காகக் காத்திருந்த போதும் இரண்டு வைத்தியர்கள் மட்டுமே ஆரம்பத்தில் கடமையில் இருந்தனர்.

இதனால் நோயாளர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்தனர்.

காலை 9 மணிக்குப்பின் மேலதிகமாக இரண்டு வைத்தியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட பின் நோயாளர்கள் எவ்வித சிரமமும் இன்றி வைத்திய சேவையினைப் பெற்றுக் கொண்டனர். (க-601)

இளைஞர் தினம்...



ஆர்வத்துக்குக் குறைவில்லை: மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இளைஞர் தின நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர். (601)

# மன்னாரில் சிறப்பான இளைஞர் தின நிகழ்வுகள்

மன்னாரில் இளைஞர் தின நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது. மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் என்.எம். முனவ்பர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இளைஞர் கொடி வாரத்தை அமைச்சர் றிஸாட் பதியுதீன் ஆரம்பித்து வைத்தார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் என்.எம். முனவ்பர் உரையாற்றினார். இந்த நிகழ்வின் போது கலை நிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-601)

# பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் முல்லைத்தீவில் மீள்குடியமர்ந்த மக்கள்

கொழும்பு, மே 29

போக்குவரத்து வசதிகள் மற்றும் மனிதவளப் பற்றாக் குறையால் முல்லைத்தீவு மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக இந்த மாவட்டத்தின் மேலதிக அரச அதிபரான சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

வடபகுதியின் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடும் போது முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி என்பது மெதுவாகவே நடைபெற்று வருகின்றது. இதற்கு முக்கிய காரணங்களாக பேருந்துகள் இல்லாமையையும் மோசமாகக் காணப்படும் வீதிகளையும் கூறலாம்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் வேண்டுகோள்களை விடுத்தபோதிலும் அவை இன்னமும் அங்கீகாரமளிக்காத நிலையிலேயே உள்ளன. மேலும் வீதிகள் உடனடியாகவே அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். இந்தப் பகுதியில் இரண்டு வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

ஆனால் முல்லைத்தீவு தள வைத்தியசாலை மட்டுமே சத்திர சிகிச்சை மற்றும் ஆபத்துக் கால வைத்திய வசதிகளைக் கொண்டுள்ளது. கர்ப்பிணிகள் எம்மிடம் வரும்போது அவர்களை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றோம். ஏனென்றால் இங்கு போதிய வசதிகள் இல்லை.

மேலும் பயிற்சிபெற்ற தொழிலாளர்களுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. நாம் மேலதிகமாக வைத்தியர்கள், ஆசிரியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்காக வேண்டுகோள் விடுத்து வருகின்றோம். இவர்களின் உதவியில்லாது மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்று மேலும் தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் மோகன்றாஸ். (க)

# முறைப்பாடு தெரிவிக்கச் செல்வோர் அலைந்து திரிகின்றனர்

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு தெரிவிக்கச் செல்லும் மக்கள் அலைக்கழிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைத் தமிழில் ஏற்க மறுத்தால் இது தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வருமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளப் பொலிஸார் மறுத்தால் அதற்கான காரணத்தை எழுத்து மூலம் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

அதனையும் அவர்கள் செய்வதற்கு மறுத்தால் பொலிஸாரின் பதிவிலக் கத்தைப் பெற்று நீதிமன்றப் பதிவாளருக்கூடாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் நீதிமன்றம் கேட்டுள்ளது. (க)

# மன்னாரில் கல்விக் கண்காட்சி



மன்னார், மே 29

மன்னாரில் ''நீரும் மனிதனும்'' என்னும் தொனிப் பொருளில் கல்விக் கண்காட்சியொன்று நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலகம் மற்றும் மன்னார் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் இந்தக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிஸாட் பதியுதீன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. ஆபேல் றெவல், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல், மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் கொடித்துவக்கு, அமைச்சரின் இணைப்பாளர் என்.எம்.முனவ்பர் மற்றும் பாடசாலை அதிபர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மேற்படி கண்காட்சி இன்று மாலை 5 மணிவரை இடம்பெறும். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MEDECINS SANS FRONTIERES

## பதவி வெற்றிடம்

### கள உதவியாளர்கள்

எல்லையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து (எம்.எஸ்.எவ் ஹொலண்ட்) ஒரு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம். இந்த நிறுவனமானது மனிதனால் அல்லது இயற்கை அனர்த்தங்களினால் துன்புற்ற மக்களுக்கும் மற்றும் ஆயுத வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியை சாதி மத இன மற்றும் அரசியல் இணக்கப்பாடின்றி வழங்கிவருகின்றது. எமது கிளிநொச்சி நிகழ்ச்சித்திட்டத்துக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பதவி நிலைக்கான பொருத்தமானவர்களை எதிர் பார்க்கின்றோம்.

**கள உதவியாளர்கள் - கிளிநொச்சி**

பொறுப்புக்கள்:-

-உளபாதிப்பு, உளநல பராமரிப்பு தேவைப்படுகின்ற சிறுவர்களையும் வளர்ந்தவர்களையும் இனங்காணுதலும் அவர்களைச் சுகாதார அமைச்சின் உளநலசிகிச்சைப்பிரிவுக்கும் எம்.எஸ்.எவ் - ஹொலண்ட் சேவைக்கும் அனுப்புதல்

- உளநல ஆதரவும் உளவளத்துணைத் தேவையும் உடைய உள நோய்க்குட்பட்டவர்களையும் அவர்களுடைய குடும்பங்களினதும் தொடர்பைத் தொடர்ந்து பேணல்

- பல்வேறுபட்ட உளநல விடயங்களையும் எம்.எஸ்.எவ் - ஹொலண்ட் மற்றும் சுகாதார அமைச்சின் நிகழ்ச்சிகளை கிளிநொச்சி மாவட்டத்தினூடாக நடத்தக் கூடிய வகையில் உளக்கல்வித் திட்டங்கள் மற்றும் விழிப் புணர்வை மேம்படுத்தல்

- இலங்கை சமூக சேவை மற்றும் ஏனைய உள்நாட்டு அல்லது சர்வதேச நிறுவனங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் துணை நாடிகளுக்குரிய நடைமுறை சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தல்

**தேவையானவைகள்**

-சிறந்த தொடர்பாடல் மற்றும் சமூகத்துடன் இணைவதற்குரிய சமூக திறன் கள்

- பொருத்தமான எண்ணப்பாடும் அதிகளவான ஈடுபாடும்

- பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காணக்கூடிய திறன்கள்

- பல்வேறுபட்ட கலாசார மற்றும் பல்வேறுபட்ட ஒழுக்காற்றுக் குழுக்களுடன் நன்றாக வேலை செய்யக்கூடிய ஆற்றல்

- எம்.எஸ்.எவ் - ஹொலண்ட் நிறுவனத்தின் கொள்கைகள் இலக்குகளுக்கு ஏற்ப மருத்துவ கோட்பாடுகளை மதித்து நடத்தல்.

- முன்னர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் அல்லது எம். எஸ்.எவ் - ஹொலண்ட் நிறுவனத்தில் குறித்த பதவியில் பணியாற்றியமை விரும்பத்தக்கது

-சுகாதார சமூக சேவை அல்லது கல்வி சார்ந்த தொண்டராகப் பணியாற்றிய அனுபவம்

- கிளிநொச்சி மாவட்டத்தில் வசித்தல் அவசியமானது

கரைச்சிப் பிரதேச சபை அல்லது கீழ்க்குறிப்பிடப்படும் கிராம சேவகர் பிரிவுகளை அண்மித்த பிரதேசத்தில் வசிக்கும் ஆர்வமுடையோர் விண் ணப்பிக்கவும்.

கரைச்சிப் பிரதேச சபை:- அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், கோணாவில், உருத்திரபுரம் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கு, புதுமுறிப்பு, சிவிக்சென்ரர், வட்டக்கச்சி, இராமநாதபுரம், மாயவனூர், சாந்தபுரம், கிளிநகரம், பரந்தன், பெரியபரந்தன், பன்னங் கண்டி, செல்வா நகர்.

பூநகரிப் பிரதேச சபை:-கிராஞ்சி, பொன்னாவெளி

இந்தப் பதவியில் ஆர்வமுடையோர், தயவுசெய்து உங்களுடைய சுருக்கமான சுயவிவரக் கோவையையும் இந்தப் பதவியை தெரிவு செய்ததற்கான காரணத்தை உள்ளடக்கிய கடிதத்தினையும் இணைத்து 10/06/2011ஆம் திகதியோ அதற்கு முன்னதாகவோ அனுப்பிவைக்கவும்.

நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்,
எம்.எஸ்.எவ் - ஹொலண்ட்
இல: 188, துர்க்கை அம்மன் வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

தொலைபேசி இல:-
024-324-8030/021-222-5490
ஈ-மெயில்:msfh-kilinochchi-ns@field.amsterdam.msf.org

தகுதியான விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்விற்குத் தொடர்பு கொள்ளப்படுவர்.

## காணி விற்பனைக்கு

சப்பல் வீதியில் 10 குளி அளவுடைய வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. இடைத்தரகர்கள் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0778192190 (கார்த்திக்)

## வீடு வாடகைக்கு

யாழ்.சப்பல் வீதியில் 8 அறைகள் கொண்ட வீடு (கார் தரிப்பிட வசதி கொண்ட) வாடகைக் குண்டு. தனியார் நிறுவனம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
0778192190 (கார்த்திக்)

## கடைகள் விற்பனைக்கு/வாடகைக்கு

யாழ். நகரின் மையப்பகுதியில் இல.60, ஜும்மா பள்ளிவாசல் வீதியில் புதிதாகக் கட்டப்படும் 7கடைகள் கொண்ட கடைத் தொகுதியில் கடைகள் விற்பனைக்கு அல்லது வாடகைக்குண்டு.
தொடர்பு: 0778995431, 0750434277.

## காணி விற்பனைக்கு

3 பரப்பு விசாலமுள்ள காணி நல்லூர் வலயக்கல்வி அலுவலகத்துக்கும் மாநகர சபை அலுவலகத்துக்கும் அருகில் விற்பனைக்குண்டு.தரகர்தேவையில்லை.
தொடர்பு:- 0772363537.

## வேலையாள்கள் தேவை

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு சகலவிதமான வேலைகளுக்கும் பணியாளர்கள் தேவை.
தொடர்பு:
சிற்றி ஹாட்வெயர் & ஸ்ரோர்ஸ்
55,57, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், சைவ போசனம், தொழில் அதிபருக்கு 40 வயதுக்குட்பட்ட சைவபோசன மணமகள் தேவை.
தொடர்பு:
0212227217, 0779598644.

## காணி விற்பனைக்கு

4 பரப்புக்காணி, 2 ½ பக்க மதிலுடன், றக்கா லேனில் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0712123710

## இலங்கை மின்சார சபை
### வட்டுக்கோட்டை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்கு வாடகைக்கு வீடு தேவை

இலங்கை மின்சார சபை வட்டுக்கோட்டை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்கு சுழிபுரம் சந்தியிலிருந்து சித்தங்கேணி சந்திவரையான யாழ்.காரைநகர் பிரதான வீதிக்கு மிக அண்டிய பிரதேசத்தில் இரண்டு வாகனங்கள் தரிக்கக் கூடியதாகவும் மின்கம்பங்கள் இறக்கி வைக்கக் கூடிய இடவசதியும் உள்ள வீடு வாடகைக்குத் தேவை. தங்களின் விண்ணப்பங்களை 06.06.2011 ஆம் திகதிக்கு முன்பதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இலங்கை மின்சார சபை,
பிரதேச அலுவலகம், சுன்னாகம். மின்பொறியியலாளர்.

RanHomes

**SALES EXECUTIVES - VACANCIES IN JAFFNA**
**"RANHOMES"**
**Looking for you...**
**Join a winning team**

Home is the one place in this entire world where hearts are of each other.

"RANHOMES" is a well recognized market leader in the housing construction industry in Sri Lanka which caters to customers who look for residences with aesthetically designed and constructed to high quality standards.

The company invites Sales professinoals with sound intellect profound inspiration and innovative.

* With a good command of Tamil and fair knowledge of English and be computer literate.

* With sales experience in Real Estate development projects and Housing projects would be an added advantage.


*Must possess valid motor - bike riding license.

An attractive and negotiable remuneration package including sales commission commensurate with qualifications and experience await the right candidates. If you are confident that you are the right person for the above position please apply within seven days with contact details of two non - related referees:

**RanHomes (PVT) Ltd.,**
**No:841, Hospital Road, Chundikuli, Jaffna.**
**Tel: 0773936769 - 021 222 0400**
**Email: haron @ranhomes.com**
**wep:www.ranhomes.com.**

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் கனகரத்தினம்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகரத்தினம் 24.05.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், தேவராசா, ராசாத்தி, யோகரத்தினம் மற்றும் தியாகராசா (கனடா), பஞ்சாட்சரம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர் களான சுப்பிரமணியம், செல்வராசா, துரைராசா, செல்லம், இராசமணி, கனகரத்தினம், நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் இரத்தினசிங்கம் (கனடா), இராசசிங்கம் (கனடா), துரைசிங்கம் (கனடா), த...பாலசிங்கம் (கொழும்பு), குணசிங்கம் (கனடா), கோபாலசிங்கம் (கனடா) ஸ்ரீகாந்தினி (கனடா) அமரசிங்கம் (கனடா) குலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறிரஞ்சினி, வசந்தமலர், சாந்ததேவி, சித்திரா, செல்வராணி, இந்துமதி, இரவிச்சந்திரன், கலைச்செல்வி, சசிகலா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனபாலசிங்கம் சஜீவ்
(பேரன்)
மற்றும் குடும்பத்தினர்.

32,லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(4638)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர்



மலர்வு 25.03.1953
உதிர்வு: 30.04.2011

**தாரமாய் தாயாய் அரவணைத்த அன்புருவே**
**கனவுகள் பலவோடு நாம் காத்திருந்த வேளையில்**
**காலனோடு விடைபெற்று போனதேனம்மா**
**பாசமழை பொழிந்து எமைப்பேணி- இன்று**
**பாவிகளாய் மீளாத்துயரில் பரிதவிக்க விட்டதேனோ...**

எமது இல்லத்தலைவி அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து உடன் வந்து எம் துயரில் பங்கெடுத்தும் பலவழிகளில் உதவிகள் புரிந்தும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியும் இது நாள்வரை எமக்கு ஆறுதலாய் இருக்கின்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நாளை (30.05.2011) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(40)(சி/235)

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கியச் சோலையில் இனிய மலர்கள்

ஒட்டக்கூத்தர் குலோத்துங்க சோழன் அவையில் பெருமதிப்புடன் வீற்றிருந்த காலம். இலக்கிய உலகுக்குச் சிறந்த காலம். அதே காலத்தில்தான் கம்பர், புகழேந்தி, ஔவையார் ஆகிய புலவர்களும் வாழ்ந் தார்கள். இத்தகைய சிறந்த புலவர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்து எங்கள் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்த்த னர். ஒட்டக்கூத்தர் சிற்றின்பப் பாடல் பாடுவதிலும் வல்லவர். பேரின்பப் பாடல் பாடுவதிலும் வல்லவர். அவருடைய பாடல்களுள் ஒன்று.

*''இவ்வளவு கண்ணினாள் இவ்வளவு சிற்றிடையாள்*
*இவ்வளவு போன்ற இளமுலையாள் - இவ்வளவாய்*
*நைந்த உடலாள் நலமேவ மன்மதன் தன்*
*ஐந்து கணையால் வாடினாள்''*

சிற்பம் செய்யும் சிற்பக்கலை வல்லார் கண் இந்த அளவு, காது இந்த அளவு, தோள் இந்த அளவு, தனம் இந்த அளவு, இடை இந்த அளவு என அளவுகளை வைத்துக்கொண்டு சிற்பத்தை வடிவமைப்பார்கள்.

இந்த அளவுகள் ஓவியக்கலைக்கும் அவசியம். அழகு சார் கலைகள் அனைத்துக்கும் அவசியம்.

சோழ நாட்டில் கலைவல்லான் ஆகிய இறைவன் ஓர் அழகிய பெண்ணைப் படைத்தான். இறைவன் எந்த அளவு கோலும் வைத்துக் கொள்ளாது ஒரு பெண்ணைப் படைத்தான். ஆனால் எல்லாம் அளவாக அமைந்த அழகியாக அந்தப் பெண் விளங்கினாள் என்கிறார் ஒட்டக்கூத்தர்.

அந்தப் பெண் இவ்வளவு என்று சிறப்பித்துக் கூறக் கூடிய அளவான கண்ணினாள் என்றார்.

விசாலமானது கண். இடை எப்படியானது? இடை விசாலமானதன்று மிகச் சிறியது. அதனால் இவ்வளவு என்னும் சிற்றி டையாள். இவ்வளவு சிற்றிடை கொண் டவள் அவ்வளவு தனபாரத்தைத் தாங்குமா? தாங்கும். ஏனென்றால் அவள் அதிசயப் பெண்ணாயிற்றே.

**இலக்கியக் காட்சி - 87**

இவள் தேவ மகளோ அல்லது மயில்களுக்குள் சிறந்த மயிலோ என்று பிறர் வியக்க விளங்கிய அவள் இப்போது மன்மதன் அம்புகளால் நைந்துவிட்டாள். அவளைக் காப்பாற்றத் தலைவனால்தான் முடியும்.

மொழி அறிவும் கவித்துவமும் வாய்க்கப் பெற்றவர் ஔவையார். அவர் பாடல்கள் முடியரசரையும் கவர்ந்தன. குடிமக்களையும் கவர்ந்தன. தமிழ் அறிந்தோர் எல்லோரையும் கவர்ந்தன.

மனத்தை எந்தப் பொருள் கவர்கிறதோ அந்தப் பொருளின் சிறப்பைப் பாடுவது புலவர் இயல்பு.

நீராடிச் சென்ற ஓர் இளம்பெண்ணைத் தலைவன் கண்டான். அவளுடைய செம்பொன் மேனியில் நீர்த்துளிகள் முத்துப் போல் ஒளி செய் தன. இந்தக் காட்சி யைக் கண்ட தலை வனின் மன நிலையை ஔவை யார் புரிந்து கொண்டால் உடனே இனிய பாடல் ஒன்று

*''ஆறாயிரம் கொண்ட*
*வைவேலநதி அகன்கிரியில்*
*நீராடப் போகும்நெறி தனிலே அந்தி நேரத்தில்*
*சீரான குங்குமக் கொங்கையைக் காட்டிச் சிரித்தொரு பெண்*
*போருள் பிடிபிடி என்றே நிலவும் புறப்பட்டதே?''*

ஆத்திமரங்கள் ஆயிரம் விளங்கும் மலைச்சாரலிலே பெண்கள் நீராடப் போகும் வழியிலே இளம்பெண் ஒருத்தி குங்குமச் சிமிழ் போன்ற மார்பகங்கள் பொலிந்து விளங்கச் சிரித்தபடி போகிறாள். நிலவு உதிக்கும் நேரமாதலால் மக்கள் அவளை நிலவென்று மயங்கி நிற்கிறார்கள். இந்த மண்ணக நிலவு செல்வதை விண்ணக நிலவு கண்டுவிட்டது. விண்ணக நிலவு வானில் புறப்பட்டது. ''நான்தான் உண்மை நிலவு அவள் போலி, அவள் மக்களை ஏமாற்றப் போகிறாள் பிடியுங்கள் பிடியுங்கள்'' என்றது.

தமிழ்ச் சொல்லின் அருமையைக் காண விரும்பினால் நாலடியாரையும் திருக்குறளையும் படியுங்கள் என்றார் ஔவையார்.

''சொல்லருமை நாலிரண்டில்'' என்றார், அவை களுடன் ஔவையார் பாடல்களிலும் சொல்லருமை யைக் காணலாம்.

அறம் எது, பொருள் எது, இன்பம் எது, வீடு எது என ஔவையாரிடத்தில் மதிப்புள்ள வள்ளல் ஒருவர் கேட்டார்.


அதற்கு ஔவையார் சற்றும் தாமதியாது ஒரு வெண்பாவில் நான்கையும் கூறினார்.

ஈதல்தான் அறம். தீவினைகளை நீக்கிவிட்டுத் தன் முயற்சியில் தேடிக் கொள்வதுதான் பொருள். காதலில் இருவர் தம்முடைய கருத்துக்களிலே இணைந்தவராக ஆதரவற்ற நிலையில் வாழ்ந்து வருதலே இன்பம், அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் நுகர்ந்து பின் விடுபடுதலே வீடு என்றார்.

பிள்ளைகளின் வாழ்வு சிறப்பாக அமைய வேண் டும் என்று அலையும் பெற்றோர் பிள்ளைகளின் விருப்பு, வெறுப்புக்களை நன்கு ஆராயவேண்டும்.

பணத்துக்காகவும் பதவிக்காகவும் திருமணம் செய்யும் நிலைமாறி கருத்து ஒருமித்தவர்களுக்குத் திருமணம் செய்யவே பெற்றோர் முன்வரவேண்டும். இதைத்தான் ஔவையார் காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்றார்.

இலக்கியச் சோலையில் நாம் காணும் இனிய மலர்கள் வண்ணங்களால் வேறு படலாம். வடிவங்களால் வேறுபடலாம். ஆனால் எல்லாமே தேன் உடை யவைகளாக அதாவது கருத்துடைய வைகளாக விளங்க வேண்டும்.



**புலவர் ம.பார்வதிநாதசிவம்**

---



# குலையாத மனங்கள்

**சிறுகதை**

பஸ்களின் இரைச்சலும் தமது பொதிகளைச் சுமந்தபடி... தாம் செல்ல வேண்டிய பஸ்ஸைத் தேடி அறக்கப் பறக்க புறப்படும் பஸ்ஸை எட்டிப் பிடிக்க ஓடினர் பயணிகள்.

உதயன், சுடர்ஒளி, தினக்குரல், வலம்புரி எனப் பத்தி ரிகைகளைக் கூவி விற்போர் செல்வதும், கண்ணாடிப் பெட்டியில் வடைகளை இட்டு ''வடை வடை'' எனக் கூவி விற்கும் வியாபாரிகளுமாக யாழ். மத்திய பஸ் நிலையம் அமர்க்களப்பட்டது.

தான் செல்ல வேண்டிய பஸ்ஸின் வரவுக்காக அங்கே காத்து நின்றார் பேரம்பலம் மாஸ்ரர். அடிக்கடி பொக்கெற்றிலிருந்து சிறிய கடதாசித் துண்டு ஒன்றை எடுத்துப் பார்ப்பதும் வைப்பதுமாக இருந்தார்.

பத்திரிகை ஒன்றில் மணப்பந்தல் சேவை என்னும் பகுதியில் மிகவும் கவர்ச்சியாகக் கட்டமிட்டு வந்த 'மணமகள் தேவை' என்ற விளம் பரத்தின் பால் ஈர்க்கப்பட்டு அந்த விளம்பரத்தைக் கொடுத்த புரோக்கரைத் தேடிப் பிடித்து மணமகனின் முகவரியை அறிந்து இன்று பருத்தித்துறைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்.

விளம்பரத்தில் கொடுக்கப்பட்ட மணமகனின் நாடு, தகுதி, உத்தியோகம், சம்பளம், வதிவிட உரிமை ஆகியவையே மாஸ்டரைக் கூடுதலாகக் கவர்ந்தன.

அதைவிட இன்னுமொரு காரணம் மாஸ்ரரின் மகள் காவேரிக்கும் பக்கத்து வீட்டுப் பெடியன் கண் ணனுக்கும் இடையில் ஏற்பட்ட காதலே. இருவரும் அன்பாகப் பழகுவது மாஸ்ரருக்கும் மனைவிக்கும் அறவே பிடிக்கவில்லை. இவர்களின் வீட்டுக்கு எதிர்வீட்டு மணியண்ணையின் மகள் வெளிநாடு போய் ஒன்பது மாதம் தான். போனதன் பிறகு என்ன காமாட்சி அடிக்கடி மாஸ் டரிடம் மணியண்ணைக்கு வந்திருக்கும் அதிஷ்ரம் பற்றிச் சொல்லு வாள். அப்படி ஒரு நாளைக்கு ஒன்றாவது கூறாவிட்டால் அவளுக்கு மண்டை வெடித்துவிடும்.

''கேட்டியளே! சைக்கிளே இல்லாத மணியண்ணை இப்ப மோட்டச் சைக்கிளில எல்லே முறுக்கிக் கொண்டு திரியிறார். அவற்றை மனுசி இப்ப ஒழுங்காகக் கோயிலுக்கு வாறா. பெட்டை அனுப்பின நகை நட்டைக் காட்ட எல்லே வேணும்....''

''இப்ப அவை வெளிநாட்டுக்கும் எல்லே ரூறிஸ்ற் விசாவில் போகப் போயினமாம்''

''ம்.... எங்கடை பிள்ளைக்கும் எப்படியும் வெளி நாட்டில்தான் செய்து வைக்கணும்....''

''உவன் பியோன் பெடியனுக்கு என்ன துணிவு எங்கடை பிள்ளை யில் ஆசைப்பட....'' முறுகினார் மாஸ்ரர்.

தினமும் காமாட்சியின் வெளிநாட்டுப் புராணத்தி லும், மணியண்ணையின் வீட்டு பொருளாதார வளர்ச்சியிலும் ஆசை கொண்டதினால் பேரம்பலம் மாஸ்ரர் தனது மகள் காவேரிக்கு மாப்பிள்ளை தேடும் படலத்தைத் தொடங்கி இருந்தார். அதுவும் வெளிநாட்டு மாப்பிள்ளை. அவர் தேடிச் சென்ற மாப்பிள்ளைக்கு லண்டனிலும் பெரியவீடு சொந்தமாக இருக்காம். இங்கையும் பெரிய வீடு தானாம். இவர்தான் கடைசிப் பிள்ளையாம். அதுவும் டாக்குத்தர் வேலை, கை நிறையைச் சம்பளம். பெரிதாக மாஸ்ரரிடம் சீதனமும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எனவே இந்த மாப்பிள்ளை கசக்கவா போகிறார்.

மாஸ்ரர் காவேரியின் சம்மதத்தை எதிர்பார்க்க வில்லை. கண்ணன் என்ன பெரிய உத்தியோகமே. வடிவும் குணமும் மட்டும் இருந் தால் போதுமே. எங்கடை தகு திக்கு ஏத்த வனா? நீ இந்த வெளிநாட்டுச் சம்மந்தத்தைச் செய்யாட்டி எங் களை உயிராடு பார்க்கமாட்டாய் எனக் காவேரியை வெருட்டியதன் பயன் அவள் அந்தத் திருமணத்துக்குச் சம்மதித்தாள். மாஸ்ரரும் மனைவியும் காவேரியும் எல்லா ஏற்பாடுகளுடனும் இந்தியா சென்று திருமணத்தை இனிதே முடித்தார்கள். தமது ஆசைக்கு ஏற்றவாறு இந்தியாவையும் சுற்றிப் பார்த்தனர். பேரம்பலம் மாஸ் ரரின் பென்சன் பணமும் இந்தியாவைச் சுற்றிப் பார்த்துக் கரைந்தது.



தங்கடை மகளுக்குக் கிடைத்த டாக்குத்தர் மாப்பிள்ளையை வேறு எவருடன் ஒப்பிட்டபோதும் அவர்கள் எல்லோருமே தகுதி குறைந்த அழகற்ற தொழுநோய்க்காரரைப் போன்றே தோன்றினர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

**திருமதி வரதலோஜன் கஜநந்தினி**
**காரைநகர் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Learn & Earn in UK

BCMS in Jaffna



8 Years

With or Without IELTS

Fees after visa

Morthen 300 Courses are Available in highly Trusted "A" Rated Colleeges

O/L Qualification
Part time job guaranty
Reasonable rate
Airport pickup
Free IELTS Class
24 Months Work permit
Accommodation arrangement

Financial Sponsorship

100% VISA GUARANTEED

BCMS

291/2, Gall Road, Wellawatta, Colombo - 06
TP - 011 318 3 318
BCMS Northern Campus
466/9, Muthuthambi Lane, Navalar Road, Jaffna.

Sham : 075 682 7 682
Tharshini : 077 112 8 428
Ramesh : 077 318 3 999

Agents wanted In Jaffna

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு, வெள்ளை, பேட்டுக் குஞ்சுகள் 01.06.2011 விநியோகிக்கப்படும்.

- ★ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை,
- ★ ஜெனசி பாம் - பருத்தித்துறை, (0773541771)
- ★ துர்க்கா பாம் - சுன்னாகம், (0779346599)

T.P: 0776090926, 021 222 2867. (4584)

## J.C.B. BACKHOE இயந்திரம் வாடகைக்கு



பழைய கட்டடங்களை இடித்துத் துப்புரவு செய்யவும், காணிகளைத் துப்புரவாக்கி மட்டப்படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776035633, 0776452019
0777279151

## கார் விற்பனைக்குண்டு

நல்லநிலையிலுள்ள Toyota Corsa 300-xxxx இலக்கமும் 1300cc யும் கொண்ட கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777635926.

## வாடகைக்குண்டு

ஊரெழு அம்மன் கோயிலுக்கும், உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கும் இடையில் அமைந்துள்ள கடைக் கட்டடத்தில் 4 கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0779499823

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் ஆஸ்பத்திரிக்கு முன் கந்தையா வீதியில், 100m தூரத்தில் 3பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0112635608, 0775144704.

## வீடு காணி விற்பனைக்கு

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் $1\frac{3}{4}$ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: சி.சி.நாதன்,
16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 0776146434

## தேவை

பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றுக்கு கணக்காய்வுப் பயிலுநர்கள் (Audit Trainees) தேவைப்படுகின்றார்கள். இதற்கான விண்ணப்பங்கள் Chartered Accountancy, HNDA, AAT பயிலும் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. பயில விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

| W.S. கிருபரட்ணம் அன்கோ | 96, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். |
|---|---|

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

# மனைப் பொருளியல் திட்டத்துக்கு பயனாளிகள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மனைப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்துக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 338 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிராமங்களை மேம்படுத்தும் இந்தச் செயற்றிட்டத்தில் சிறுகைத்தொழில் விவசாயம், கடற்றொழில், கால்நடை போன்ற தொழில்களை மேற்கொள்வதற்கான கடனுதவிகள் வழங்கப்படும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 28 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்தும் அந்தந்தக் கிராம சேவகர்கள் ஊடாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தச் செயற்றிட்டத்துக்காக 338 பயனாளிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று ஒதுக்கப்பட்ட போதும் அதிகமான பயனாளிகள் விண்ணப்பித்திருந்தனர். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 338 பேருக்கும் முன்னிரிமை அடிப்படையில் முதற்கட்டமாக மனைப் பொருளாதார மேம்பாட்டுக் கடன் திட்டம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

## ஆலய உதவி முகாமையாளர் தேவை

- ★ ஸ்ரீ கந்தசுவாமி கோயில், பாணந்துறை
- ★ ஸ்ரீ திருமுறிகண்டிப் பிள்ளையார் கோயில், திருமுறிகண்டி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் மேற்குறித்த இரு ஆலயங்களுக்கும், உதவி முகாமையாளர் பணிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இந்துசமய ஆலயச் செயற்பாடுகளில் போதிய அறிவும், அனுபவமும் மிக்கவர்களாகவும், அர்ப்பணிப்புடன் பணியாற்றத்தக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும். குறித்த பிரதேசங்களுக்கு அண்மையில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பள விவரம் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வமுள்ளோர், தமது பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கல்வித்தகைமை, தொழில் அனுபவம் ஆகிய விவரங்களுடன் உறவினரல்லாத இருவரது சிபார்சுடன் தமது விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு 05.06.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248-1/1, காலி வீதி, கொழும்பு-04.

(49,22,24)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

## சிறீகாந்தன் நிமலன்



தோற்றம்
02.03.1997

மறைவு
15.04.2011

நிமலா ! நிமலனே ! மண்ணுலகை விட்டு
விண்ணுலகை நீ தேடிச் சென்றது ஏனோ ?
கடலை தாய் என்றுதானே அழைக்கிறார்கள்
ஆனால் உனக்கு மட்டும் கோரதீவு கடல் தாய்
இயமன் ஆனது ஏனோ ?
கடமைகள் பல இங்கே உனக்காய் காத்திருக்க
கடமை மறந்து கடலில் மறைந்து நீ போனது ஏனோ ?
உந்தன் குடும்பத்தின் குல விளக்காய் வாழ வேண்டியவனே
இன்று தீயிலே வெந்தது ஏனோ ?
பள்ளி சென்று பாடங்கள் படிக்க வேண்டியவனே
சுற்றுலா சென்று நீ நிரந்தரமாய் தூங்கியது ஏனோ ?
நிமலா நீ மீண்டும் மீண்டு வந்துவிடு உந்தன் தாய்க்கு
பிள்ளையாய் தந்தைக்கு மகனாய் சகோதரிகளுக்கு சகோதரனாய்
நீ ஆற்ற வேண்டிய கடமைகள் இங்கே காத்திருக்கடா ....
உந்தன் இறப்பை கேட்டு ஏங்கிய உறவுகளின் மனங்கள்
இன்னும் மீளவில்லையடா உந்தன் இழப்பில் இருந்து ...
பங்குனியில் வந்து உதித்து சித்திரைப் புத்தாண்டில்
மறைந்தவனே இனி வரும் ஒவ்வொரு புத்தாண்டும்
உந்தன் உறவுகளுக்கு துயருற்ற ஆண்டடா......
நாள்கள் நாற்பத்தைந்து அல்ல ஆண்டுகள் நாற்பத்தைந்து ஆனாலும்
நிழலாடும் உந்தன் நினைவுகள் !

உறவினர்கள்.

(49,20,22)- (4585)

## காணி விற்பனைக்குண்டு

யாழ்.நகரில் சுபாஸ் Hotel இற்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் 2பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்க: 0777556244

## NEW LAPTOP FOR SALE - ACER ASPIRE 47382

Processor:- Intel Pentium P6 200 @ 2.13 GHz 2 GB DDR3 Memory, 14" HD LED LCD, 320 GB HDD

Contact T /P : 0776167190

## காணி விற்பனைக்கு

யாழ்.ஐந்து சந்தியில் $\frac{3}{4}$ பரப்பில் கிணற்றுடன் கூடிய 2 பழைய மாடிக் கடைகள் (புதிய இரண்டு மாடிக்கட்டடம் கட்டுவதற்கான மாநகர சபை /ந.அ. சபை போன்றவற்றால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்துடன் உடனடி விற்பனைக்குண்டு.

தயவுசெய்து தரகர் தேவையில்லை.

இ.கிருஷ்ணசாமி, தொலைபேசி.இல: 4921785

## மேல்மாடி வீடு விற்பனைக்கு

யாழ்.மின்சார நிலைய வீதியில் 14 பேர்ச் காணியில் திருத்த வேலை செய்ய வேண்டிய நிலையில் உள்ள மேல்மாடி வீடு (இரட்டை வீடு) உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு:- திருமதி டானியல்.
0773614456

## காணி விற்பனைக்கு

மல்லாகம் சந்தி, K.K.S. வீதியில் மக்கள் வங்கிக்கு முன்பாக இரண்டு பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774050918

## வீடு விற்பனைக்கு

நல்லூர், செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.

தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 0772267191.

# ஹீரோ, கென்டன் காட்சியறை



HERO CYCLES

KENTON

சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (Recharchable) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும்



ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# என் அன்னையே...!

பத்து மாதம் உன் கருவிலே என்னைச்
சுமந்து இப் பார் போற்ற வேண்டுமென்று
என்னைப் பக்குவமாய்ப் பெற்றாள்
என் அன்னை

பாலூட்டிச் சீராட்டி என்னை
வளர்த்தெடுத்த என் தெய்வமே
உன் இமைகள் விழித்து என்னைக் காத்த
என் அன்னையே

கோடிப் பூக்களால் உன்னை
வாழ்த்தவில்லை - என்
இதயப் பூக்களால் கண்ணீர் மல்க
வாழ்த்துகிறேன் என் அன்னையே



ரி.தனுஷா,
தரம் 9,
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.

# பெருமைக்குத் தேவையானவை

★ உயிர்போக நேர்ந்தாலும் நீ பேச வேண்டியது உண்மை.
★ மற்றவருடன் பேசும் போது உன்னிடம் கலந்திருக்க வேண்டியது உண்மை.
★ வெற்றி பெற என்றும் நீ ஒழுக வேண்டியது ஒற்றுமை.
★ கனவிலும் நனவிலும் நீ செய்ய வேண்டியது நன்மை.
★ இறுதி மூச்சு வரை நீ மீறாதே உன் கடமையை.
★ வெற்றிக்கும் முயற்சிக்கும் என்றும் உன்னில் வேண்டும் வல்லமை.
★ உன்னையே நீ சிந்தித்தறிய நீ அடிக்கடி தேட வேண்டும் தனிமை.
★ காலமெல்லாம் சிறப்புடன் வாழ நீ அணிய வேண்டியது பொறுமை.
இவ்வாறு நீ ஒழுகிவிட்டால் நாளை நீ பெறுவது பெருமை.

ஜெ.கனிஸ்ரா,
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.

# பொது அறிவு

1. தென்அமெரிக்காவின் தேசியப் பறவை எது?
   நீலக்கொக்கு
2. இங்கிலாந்தின் தலைநகரம் எது?
   லண்டன்
3. இலங்கையில் வெள்ளரசம் கிளை நாட்டப்பட்ட இடம் எது?
   மகாமேகவனம்
4. நீண்ட காலம் வாழக்கூடிய பிராணி எது?
   ஆமை
5. அமெரிக்காவின் தேசியப் பறவை எது?
   கழுகு

யா.யாதுஷன்,
தரம் 8 ெ,
யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

## விடை தெரியுமா? 109

1) ஆர்ஜென்டீனாவின் தலைநகரம் எது?
2) பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
3) தமிழகச் சட்டப் பேரவையின் தற்காலிக சபாநாயகராகப் பதவி ஏற்றுள்ளவர் யார்?
4) பின்புறமாகப் பறக்கக் கூடிய பறவை எது?
5) ஈழத்தின் முதற்பெண் கவிஞர் யார்?

### விடைகள் 107

1) பகீரா கிப்லிங்கி.
2) ஒசாமா பின்லேடன்.
3) ஜேக்கபசுமா.
4) மே 08.
5) அபிசிட் வெஜாஜிவா.

### வெற்றி பெற்றவர் விவரம்

1. சி.சிறிரமணன்,
   தரம்7 எப்,
   யாழ்.மத்திய கல்லூரி.
2. அம்பிகா ஸ்ரீகாந்தன்,
   யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 04.06.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

உங்களுக்கும் பரிசில்கள்



இ.விதுசன்
தரம் 8பி,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.



அ.சோபிகன்,
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.



கே.ஹரிஸ்
தரம் 1 பி,
யா/ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்.



அ.சோபி
சாவகச்சேரி.



அ.டிலானி,
தரம் 1,
யா/உடுவில் மகளீர் கல்லூரி.



ஜெ.றொ.அன்சன்,
தரம் 2 ,
யா/உசன் இராமநாதன் ம.வி.







## தமிழுக்கு ஆங்கிலம் (16)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

தொகுப்பு:ரம்யன்

**'ய' வரிசையில்**
யதார்த்தம்: Realism
யந்திரம்: Machine
யமன்: God of death
**'யா' வரிசையில்**
யாது: What
யாத்திரை: Pilgrimage
யாப்பு: Constitution
யாமம்: Midnight
யார்: Who
யானை: Elephant
யாழ்: Harp
**'யு' வரிசையில்**
யுத்தம்: War
யுவதி: Young girl
யுத்தி: Wit
**'யூ' வரிசையில்**
யூகி: Guess
யூதர்: Jews
**'யோ' வரிசையில்**
யோகம்: Luck
யோசனை: Idea
யோசி: Think
**'ர' வரிசையில்**
ரகசியம்: Secret
ரசம்: Pepper soup
**'ரா' வரிசையில்**
ராட்சதன்: Giant
ராஜா: King
ராணி: Queen
ராகம்: Tune
**'ரு' வரிசையில்**
ருசி: Taste
**'ரூ' வரிசையில்**
ரூபம்: Figure
**'வ' வரிசையில்**
வரிசை: Row
வட்டம்: Round,Circle
வள்ளம்: Boat
வக்கீல்: Lawyer
வசதி: Convenience
வசந்தம்: Spring time
வசனம்: Sentence
வஞ்சகம்: Deception
வடக்கு: North
வடம்: Rope
வடி: Filter
வடிவு: Beautiful
வட்டி: Interest
வணங்கு: Respect, Worship
வண்டில்: Cart
வண்டு: Beetle
வதனம்: Face
வலி: Pain
வலை: Net
வணிகர்: Merchant
**'வா' வரிசையில்**
வாளி: Bucket
வாழை: Plantain
வானம்: Sky
வாதம்: Rheumatism, Dispute
வாசம்: Smell
வாரம்: Week
வாத்து: Duck
வாள்: Sword
வால்: Tail
வாழ்: Live
**'வி' வரிசையில்**
வில்: Bow
விதி: Fate
விரி: Unfold
விட்டில்: Grass hopper
விதை: Seed, Sow
விளக்கு: Lamp
விலங்கு: Animal
விக்கல்: Hicup
விரல்: Finger
விறகு: Firewood
விளையாட்டு: Sports

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயன்
29 மே 2011 ஞாயிற்றுக்கிழமை

## தொட்டில் ...ளின் நாற்றங்கால் தொலை...து போகுமா..?

வணக்கத்துக்குரிய
வனத்துறை அதிகாரிக்கு...
வணக்கம்!
வன்னியிலிருந்து - ஒரு
வனமரக் குரல்

நானும் ஆண்ட பரம்பரை தான்
அரச பரம்பரை தான்
இப்போ துவண்டு போய்...
ஆனாலும்
வெகுண்டு விட்டால் மீண்டெழ
அதிக நாளியொன்றும் ஆகாது!

உயிர் தந்து உரம் போட்டவன்
உலக மூலையில் எங்கே ஓர் சுடுகாட்டில்...
உழுதுண்டு பயிர் செய்தவன்
வழியற்ற வனக்காட்டில்...
இங்கோ
என் தொட்டில்,
வெசாக் கூண்டுகளும்
வெள்ளைக் கடதாசிகளும்
சலசலத்துச் சிரித்தபடி
சந்திதோறும் விருந்துகள்...
விழா உபசாரங்கள்...



எவளோ ஒரு தமிழிச்சி
தன் சேலைத் துணியெடுத்து
தொட்டில் போட்ட
என் கரத்தில் - இப்போ
குட்டி போட்ட
வெசாக் கூண்டுகள்.

வேப்பமரக் கட்டில் போட்டு
வீசி வரும் தென்றல் பட்டு
தமிழன் பாட்டன் முப்பாட்டன்
ஆனந்த சயனம் கொண்ட
அதே இடத்தில் - இப்போ
பேராசைகள் பல கொண்டு
பேச்சுகள் ஏதுமற்று வந்து
நீட்டி நிமிர்ந்து இருந்து விட்டார்
மதிப்புக்குரிய கௌதம புத்தர்.

குந்த ஒரு குடிலில்லை
குடியிருக்க வீடில்லை
சொந்த மண்ணில் புதல்வன் என
சொத்துரிமை ஏதுமில்லை
ஆனால் - இங்கெல்லாம்
சந்திக்குச் சந்தி
சந்தடிகள் ஏதுமற்று- வந்து
குந்தி விடுகிறார் புத்தர்.

உங்களிலும் தப்பில்லை.
நீங்கள் உத்தமர்
அதனால் தான் அரச வாழ்வையே
அடியோடு மறந்தீர்கள்.
ஆனால் உங்கள் அடியவர்கள் தான்
அரசிற்காக அடிப்படையையே
மறைக்கிறார்கள்.

ஆனால் ஒன்று மட்டும்
அருளும் புத்தரே...!
வருங்காலம்
வெசாக் கூண்டுகளுக்குள்
தமிழன் தொட்டில்களாய்
ஆகிவிடாதிருக்க அருள் புரியும்!!!
சிங்கமுகத்துள் தமிழன் முகம்
ஒன்றாகிப் போகாது அருள்புரியும்!!!

உயிரோடை

## ஏன் தெரியவில்லை



இரவின் மடி மீது
இதமாய்த் தலை சாய்த்து
இதயங்கள் தூங்கும்
இனிய வேளை...
என் இதயம் மட்டும்
அமைதியிழந்து.
தவித்து...
ஏனோ - உன் ஞாபகங்கள்
என்நெஞ்சில்..
அலை மோதுகின்றன.
உன் அசைவுகள்.
ஒவ்வொன்றும் எனக்குள்
அசைபோட்டபடி...
உள்ளத்தில்
உன்..
உருவம் பதிந்து
உன் நினைவுகளை
சுமந்தபடி உனக்காக..
உயிர் வாழ்ந்த
காலங்கள் கண்முன்
வந்து கலங்க வைக்கின்றன.
புன்னகை தெரிந்த
உன் உள்ளத்துக்கு
என் நெஞ்சத்தைப் புரிந்து
கொள்ள மட்டும்
ஏன்? தெரிவில்லை.

பொ.கோகுலன்
மீசாலை

## காணாமல் போன (அ)வர்கள்!

உம்மைத்
தேடித் தேடியே
களைத்துப் போய் விட்டோம்
நாம் தேடாத இடமில்லை
வரும் போது வழியில்
அந்தக் குரூர இருளில்
எதிரியின் கால்கள் முன்னே
உம்மைத் ...
தொலைத்து விட்டு வந்தோம்;
எந்தத் துணையுமின்றி
இப்போ எங்கெங்கோ
தேடி அலைகின்றோம்
உம்மைக் கண்டதாய்க் கூட
யாரும் சொல்வாரில்லை
காணாமல் போவதற்கு
நீர் வெறும் கனவுமல்ல
கானல் நீருமல்ல
எம் அடி தொடர்ந்து வந்த
" உயிர்நிழல்" அல்லவா நீங்கள்
நேர்த்தி வைத்து
நாள் பலவாய் நோன்பிருந்து
நொந்து நூலாகிப் போனதே
உம்மைப்
பார்த்து விட்டுச் சாகவும் பலனின்றி!
காணாமல் போனவர்கள்
பெயர்ப் பட்டியலில்
இன்னமும் வாழ்கின்றீர்கள்
எம்மோடு கூடவே
சேர்ந்து வாழக்
கொடுத்து வைக்காத நீங்கள் !

தேனாள் சுரேஷ்,
மன்னார்

## பாவம் பெண்கள்



பெண் என்ற காரணத்தால்
சீதை தீக்குளித்தாள்
இராமன் மானம் காத்திட
கணவனே தெய்வம்
என்றதால் - இந்திரனிடம்
ஏமாந்த அகலிகை கல்லானாள்

கண்ணகியின்- சிலம்பால்
கொலையுண்டான்
கோவலன் - மதுரையே
எரிந்து சாம்பலானது

பாஞ்சாலியினால் தானே
பாரதம் போர் மூண்டது
பாவம் பெண்கள்

ரமணன்


## எதுகை

மகரந்தக் கூடு என்று
குளவிக்கூட்டையே
உடைத்தேன்
நந்தவனம் என்று
நெருஞ்சி முள் மீது
நடந்தேன்
தாகத்தோடு திரிந்து
கண்ணீரையே
குடித்தேன்
வேதனையை சொல்லப்போய்
வேலையாள்
ஆக்கப்பட்டேன்
ஆறுதல் தேடி
அமிலத்தால்
கழுவப்பட்டேன்
இன்னும் ஏன் நான்
உயிரோடு இருக்கிறேன்.

க.யோகேஸ்வரன்
நெருந்தீவு -13

## அதிசயப் பிறவி

எல்லை மீறிய
வலிகளைச் சுமந்தும்
இயல்பு வாழ்க்கை
உயிர் வாழதல் பற்றிய
எதிர்பார்ப்புக்கள்
அதிக மிருந்தும்
எப்போதும் போல்



இப்போதும்
நின்ற இடத்தில்
நிமிர்ந்து நின்று
சிறிதும் நகராமல்
அதி வேகமாய் ஓடும்
'அதிசயப் பிறவி'
அதிகாரப் பரவலாக்கம்.

சாரங்கன்
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்துவோம்



ஞாயிறு காரம்

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழு வெளியிட்ட போரின் இறுதி நாள்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை சம்பந்தமாகச் சீனா இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் தமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளும் தகுதியும் வலிமையும் இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் உண்டு எனச் சீனா நம்புவதாகவும் இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தையும் மீள்கட்டு மானத்தையும் தொடரச் சீனா எல்லா விதமான உதவிகளையும் செய்யும் எனவும் சீன வெளிவிவகார அமைச்சர் ஜவ் ஜிச்சி தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் சீனப் பயணத்தை மேற்கொண்டு சீன வெளிவிவகார அமைச்சருடன் நடத்திய கலந்துரையாடலின்போதே இந்தக் கருத்துக்கள் வெளியிடப் பட்டிருந்தன.

கடந்த காலங்களில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக, அது ஓர் உள்நாட்டு விவகாரம் என்ற பார்வையின் அடிப்படையிலேயே சீனா செயற்பட்டு வருகிறது. எனவே சீனா இப்படி ஒரு கருத்தை வெளியிட்டிருப்பது அப்படியொன்றும் ஆச்சரியப்படவேண்டிய விடயமல்ல. அது மட்டுமன்றி நீண்ட காலமாகவே சீனாவுக்கும் இலங்கைக்குமிடையே நிலவிவரும் நெருக்கமான நட்புறவும் தென்னாசியக் கடற்பிராந்தியத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவமும் சீனா இப்படியான நிலைப்பாடுகளை எடுப்பதற்கு அடிப்படையாக உள்ளன என்பதையும் எவரும் மறுத்துவிட முடியாது.

### சீனாவின் அழைப்பை நிராகரித்த கூட்டமைப்பு

அதேநேரத்தில் சீனா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்புவிட்டதாகவும் இந்தியாவைத் திருப்திப்படுத்தும் வகையில் இந்த அழைப்பை த.தே.கூட்டமைப்பு நிராகரித்துவிட்டதாகவும் ஒரு செய்தி மெல்லக் கசிந்துள்ளது. இதில் எவ்வளவு தூரம் உண்மை, பொய் இருக்கிறது என்பதற்கு அப்பால் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் இருவர் சீன அரசின் பேரால் சீனா சென்று வந்தனர் என்பதை நினைவுகூர வேண்டும். அதுமட்டுமன்றி இனப்பிரச்சினை தொடர்பாகச் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெளிவுபடுத்தவுள்ளதாக அதன் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அண்மையில் தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் தமிழ் மக்கள் தொடர்பான நியாயங்கள் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுக்குச் சென்றடைவதைச் சில சக்திகள் விரும்பவில்லையென்றும் அதற்குச் சில வெளிநாட்டுத் தமிழ் இணையத்தளங்கள் துணைபோகின்றன போலவும் தெரிகிறது.

கடந்த காலங்களில் நாம் ஒரு சிறிய பலவீனமான இனம் என்பதையும் நாம் எமது உரிமைப் போராட்டத்தில் ஐக்கியப்படக்கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்த வேண்டும் என்பதையும் உணரத் தவறியமையாலேயே பல மீளமுடியாத தோல்விகளுக்குள் தள்ளப்பட்டோம் என்பதும் எமது அனுபவமாகும். எந்த ஒரு சக்தியுடனும் எமக்குச் சாதகமான அம்சங்களில் ஐக்கியப்பட்டுநின்று பாதகமான அம்சங்களைக் களைந்து முன்செல்லும் வழிமுறையை நிராகரித்து எதையுமே முற்றிலும் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ பார்க்கும் ஒரு வழிப்பாதையைப் பின்பற்றினோம்.

### எமது தரப்பு நியாயங்கள் தெளிவுபடுத்தப்படவேண்டும்

இது கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் எம்மை நாமே தனிமைப்படுத்தும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. எனவே, நாம் கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு முன்செல்ல வேண்டியது உடனடித் தேவையாக எழுந்து நிற்கிறது.

எனவே இன்றைய சூழ்நிலையில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளுடன் மட்டுமன்றி சீனா, ரஷ்யா, வியட்நாம், கியூபா போன்ற நாடுகளுடனும் எமது உறவுகளைப் பேணுவதும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எமது தரப்பு நியாயங்களை அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதும் மிக முக்கியமானது. இது அவர்கள் எமக்கு நேரடியாக ஆதரவு தரும் நிலையை உருவாக்கத் தவறினாலும்கூட எதிர்க்காமல் இருக்கவோ, எதிர்ப்பைக் குறைக்கவோ உதவும்.

அதைவிடுத்து ஒரு நாட்டின் நடவடிக்கைகளில் மட்டும் தங்கியிருப்பதும் அதன் பார்வையாலேயே நடவடிக்கைகளைக் கையாள்வதும் ஆரோக்கியமான வழிமுறையாக அமைந்துவிட முடியாது.

**சந்திரசேகர ஆசாத்**

அந்த வகையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் பேசப் போவதாகத் தெரி வித்திருப்பது காலத்தின் தேவையறிந்து மேற் கொள்ளப்படும் ஒரு முக்கியமான முடிவாகும். இது எமக் குச் சில அனுகூலமான நிலை மைகளை ஏற்படுத்தக்கூடும்.

இது சில வெளிநாட்டு இணையத்தளங்களை ஆக்கிரமித்திருக்கும் கடதாசிப் புரட்சியாளர்களுக்கு, அந்நிய உளவு நிறுவனங்களின் கையாள்களுக்கும் கசப்பான செய்தியாக இருக்கலாம்.

ஆனால் குருதி சிந்தி, உயிர்ப்பலிகள் கொடுத்து, இழப்புக்கள் மேல் இழப்புக்களை சந்தித்து நின்ற போதும் உரிமைகளுக்காக உறுதி குலையாது நிற்கும் தமிழ் மக்களுக்கு இது தவிர்க்க முடியாத தேவையாகும். எமக்குச் சாதகமாக ஒரு சிறு துரும்புகூடப் பயன்படுத்தப்பட வேண்டும்.

### விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க சதிமுயற்சிகள்

2002 ஆம் ஆண்டு போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த காலம் தொட்டு 2009 மே 19 ஆம் திகதி போர் முடிவுக்குக் கொண்டு வரப்படும்வரை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதற்குப் பெரும் சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விடு தலைப்புலிகள் அமைப்பைப் பிளவுபடுத்தியும் ஏனைய சில முக்கியஸ்தர்களை விலைக்கு வாங்கியும் போராட்டம் பலவீனப் படுத்தப்பட்டது. அது மட்டு மன்றி இலங்கை அரசுக்குப் புலனாய்வுத் தகவல்கள், போர்ப்பயிற்சிகள், போர்த் தளபாடங்கள், தொழில்நுட்ப உதவிகள் என்பனவும் தாராளமாக வழங்கப்பட்டன. அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்ததன் மூலம் புலிகளின் சர்வதேசச் செயற்பாடுகளுக்குப் பெரும் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

ஒருபுறம் சமாதானம் விரும்பிகளாகக் காட்டிக் கொண்டு மறுபுறத்தில் விடுதலைப் போராட் டத்தைப் பலவீனப்படுத்தித் தோற்கடிக்கும் நயவஞ்சக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சதி முயற்சியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் சிலரும் ஆட்கொள்ளப்பட்டனர். இதில் மேற்குலகமும் இந்தியாவும் இணைந்தும் தனித் தனியாகவும் பெரும் பங்களிப்பை வழங்கின. அதேவேளையில் சீனா இலங்கைக்கு ஆயுத உதவிகளையும் பொருளாதார உதவிகளையும் மட்டுமே வழங்கியது. அதேவேளையில் இலங்கை யில் தன் பிடியை இறுக்கும் வகையில் ஒவ்வொரு காய் நகர்த்தல்களையும் மேற்கொண்டது.

அந்தக் காலப்பகுதியில்கூட சில தமிழ் ஊடகங்கள் மேற்குலகின் செல்லப்பிள்ளையான இஸ்ரேல் விடு தலைப் போராட்டத்தின் ஆதர்ஷ சக்தி எனவும் அதனிடமிருந்து நாம் நிறையக் கற்றுக் கொள்ளவேண்டும் எனவும் பிரசாரம் செய்தன. அந்த நாள்களில்கூட இஸ்ரேலிய கிபீர் விமானங்கள் தமிழ் மக்கள் மீது குண்டு களைப் பொழிந்து கொண்டி ருந்தன. அதேவேளையில் அவ்வூடகங்கள் சீனா மீது மோசமான முறையில் வசைபாடத் தயங்கவில்லை.

இப்படியாக எமது போராட்டத்தைத் தனிமைப் படுத்துவதிலும் எதிரிகளை நண்பர்களாகக் காட்டித் தேவை யற்ற விதத்தில் எமக்கு எதிரிகளை அதிகரிப் பதிலும் சில ஊடகங்கள் முன்நின்று செயற்பட்டன.

இன்று இலங்கை முற்றுமுழுதாகச் சீனாவின் பக்கம் விழுந்துவிடாமல் தடுக்க வேண்டிய தேவை மேற்கு வல்லரசுகளுக்கும் இந்தியாவுக்கும் உண்டு. அதை நிறைவேற்ற இன்று அவைகள் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பனவற்றைக் கையில் எடுத்துள்ளன. இது நிச்சயமாகத் தமிழ் மக்களுக்கு ஒரு சாதகமான அம்சம் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் அவர்கள் தேவைக்குப் பயன்படும் கருவிகளாகவும் தேவை முடிந்தபின் கைவிடப்படும் கருவிகளாகவும் நாம் பயன்பட வேண்டுமா? அல்லது இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து தந்திரோபாய ரீதியாக எமது உரிமைகளைப் பெறும் வகையில் முன்செல்வதா? என்பதுதான் கேள்வி. முதலாவது வழிமுறை எம்மளவில் அர்த்த மற்றதும் நிராகரிக்கப்பட வேண்டியதுமாகும். இதே வழிமுறையில் நாம் மீண்டும் மீண்டும் தோல்விகளையே சந்திக்கிறோம்.

இரண்டாவது வழிமுறை சற்றுக் கடினமானதும் சிக்கல் நிறைந்ததும் மிக அவதானமாகக் கையாள வேண்டியதுமாகும். இதற்கு எந்தவித அழுத்தங்களுக்கும் வளைந்து போகாத மன உறுதியும் உரிமை வேட்கையுமே பிரதான அம்சங்களாகும். அதில் உறுதியாகக் காலூன்றி நின்று ஏனைய விடயங்களை லாவகமாகக் கையாளவேண்டும்.

### கூட்டமைப்பின் தீர்மானம் வரவேற்கத்தக்கது

இப்படியான ஒரு நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதன் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் மூலமாக ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் பேசப் போவதாக விடுத்த அறிக்கை வரவேற்கத்தக்கதும் அவசியமானதுமாகும். இந்த நடவடிக்கை ஐக்கியப் படக் கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்துவது என்ற அடிப்படையில் மிகவும் பயனுள்ள பலன்களைத் தரும் என நம்பலாம். அது மட்டுமன்றி ஏனைய மூன்றாம் உலக நாடுகளுடனும் இப்படியான தொடர்புகளை ஏற்படுத்துவது மேலும் பயனுள்ளதாக அமையும்.

இப்படியான சீனா, ரஷ்யா உட்பட்ட நாடுகள் இப்போ எப்படியான நிலைப்பாட்டை எடுக்கின்றன என்பதை விட முரண்பாடுகளைத் தேவைகளின் அடிப்படையில் எப்படியான நடவடிக்கைகளை எடுக்கத் தூண்ட முடியும் என்பதே இன்று முக்கியமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பாதையில் இறங்கியமைக்கான ஆரம்ப அறிகுறிகள் தென்படுவது ஒரு ஆரோக்கியமான நிலைமையாகும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தர வாதத்துடன் நியாயமான விலையில் (80/=) சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் 02.06.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

- ★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்ரர்**

19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். தொ.பே இல:- 021 222 6944.

(4605) (38)

## ENGINEERING CONSULTANCY SERVICES

Chartered Consulting Engineer provides the services of Structural & Architectural Design, Cost Estimation, Contract Administration & Construction Supervision for Civil Engineering Projects including Building Services works and Technical & Contractual Consultation to Construction Contractors

**Contact T.P No: 0212220602.**

## மணமகள்கள் தேவை

1964 கனடா (டிவோஸ்), 1973 டென்மார்க் (டிவோஸ்), 1979 சுவிஸ், 1983 கனடா, 1978 லண்டன், 1964 ஜேர்மனி, 1978 பிரான்ஸ், 1980 அமெரிக்கா (கொம்பியூட்டர் இஞ்சினியர்) ஆகிய யாழ் இந்து ஆண் மணமகன்களுக்கு மணப்பெண்கள் தேவை.

**தொடர்பு: 0770824139**

Ponnkumar78@yahoo.com

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 02.03.1997

மறைவு: 15.04.2011




### சிறீகாந்தன் நிமலன்

( தரம் 9 மாணவன், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் )

எமது செல்வப் புதல்வன் 15.04.2011 அன்று சங்குப்பிட்டிப்பால கடலில் திடீரென காலமான செய்தியை அறிந்து ஓடோடி வந்து உதவிபுரிந்ததுடன் அஞ்சலி ஆறுதல் தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்களுக்கும் அவரது சகோதரராகிய மாணிக்கசோதி அவர்களுக்கும் மற்றும் சகல வகையிலும் உதவி புரிந்த மீனவர்கள், இராணுவத்தினர், பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர், நண்பர்கள் ஆகியோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், ஊர்மக்கள் அனைவருக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு-இன்று (29.05.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரந்தன், நீர்வேலி மேற்கு. குடும்பத்தினர்.

(48,19,50)

## வாடகைக்கு

**யாழ்.பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் (எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மேற்குப்புறமாக)**

**அரச/ அரச சார்பற்ற, தனியார் வர்த்தகத்துறையினருக்கும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்ட புதிய மாடிக் கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு.**

**தொடர்புகளுக்கு: 0777207539**

## Kalaimagal International College

ஆங்கில மொழி மூலமான கல்வி இன்றைய உலகமயமாக்கல் கொள்கையின் மிக அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றாகத் திகழ்வதால் எமது கற்கை நெறிகளை பாடசாலைக் கல்வியை ஆங்கில மொழிமூலம் மேற்கொள்வது சாலச்சிறந்தது. அதேநேரம் எமது தாய் மொழியையும் சமயக் கல்வியையும் தமிழ் மொழியிலேயே மேற்கொள்வதும் அவசியமாகும். இந்த நியதிகளை உள்வாங்கி எமது கல்லூரி கீழ்வரும் உயர் செயற்பாடுகளுடன் இயங்கி வருகின்றது.

- ★ முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த)வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை. (English Medium).
- ★ Play Group முதல் Grade-05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade-6 முதல் G.C.E. (A/L) வரை இலங்கைப் பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை.
- ★ ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம் ★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- ★ பிரத்தியேக சீருடை ★ சிறார்களுக்கான சிறுவர் பூங்கா ★ கணினி ஆய்வுகூடம் ★ விஞ்ஞான ஆய்வுகூடம்
- ★ நூலகம் ★ சாதாரண மக்களும் முகம்கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த கட்டண வசதி
- ★ தமிழ்,சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
- ★ அரச பாடசாலைகளின் நேரசூசியை பின்பற்றும் கல்விக்கொள்கை.
- ★ கலை, கலாசாரம், விளையாட்டு நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் அமைப்பு.
- ★ மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா,கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.
- ★ போக்குவரத்து வசதி
- ★ இன்னும் பல அரிய செயற்திட்டங்களுடன் இயங்கும் எமது கல்லூரிக்கு 2011, 2012 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எமது கல்லூரியின் பிரதான கிளைகளான கொக்குவில், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த) வரையான வகுப்புகளும் ஏனைய பகுதிகளில் Play Group LKG, U.K.G ஆகிய வகுப்புக்களும் நடைபெறுகின்றன. பிரதான கிளைகள் தவிர்ந்த ஏனைய கிளைகளில் கல்வி கற்பவர்கள் மேலதிக கல்வியைத் தொடரக் கிட்டிய பிரதான கிளைகளில் இணைய முடியும்.

**எமது கிளைகள்:**

★கொக்குவில் (வலிகாமம் பிரதான கிளை)
*சேச் லேன், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.*

★ சாவகச்சேரி (தென்மராட்சி பிரதான கிளை)
*நுணாவில் கிழக்கு, கண்டி வீதி, சாவகச்சேரி*

★ பருத்தித்துறை (வடமராட்சி பிரதான கிளை)
*இல.210, செந்தூர் , தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.*

**மேலதிக விவரங்களுக்கு:**
**0778834592, 0774904286.**



உபகிளைகள்:

| | |
|---|---|
| உடுப்பிட்டி | : துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. |
| நெல்லியடி | : எம்.எம்.வீதி, முருகன் கோயிலடி லேன், நெல்லியடி. |
| நல்லூர் | : கன்னார வீதி, கோயில் பற்று, நல்லூர். |
| சாவகச்சேரி | : டச்சு றோட், சாவகச்சேரி. |

மற்றும் வேலணை, அச்சுவேலி:



(48,21,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமனித அபிவிருத்தியில் தொலைத் தொடர்பூட்டல்

**கடந்த 17ஆம் திகதி சர்வதேச தொலைத் தொடர்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.**

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் 2000 ஆம் ஆண்டு 189 அங்கத்துவ நாடுகளின் தலைவர்களால் ஏகமனதாக வெளியிடப்பட்ட பிரகடனமாக மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்கள் அல்லது பத்தாயிரம் ஆண்டுக்கான அபிவிருத்திக் குறிக்கோள்கள் காணப்படுகின்றன.

பிரதான எட்டுக் குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டு 2000-2015 இல் அடையப்பட வேண்டியவையாக எதிர்பார்க்கப்படுகின்றன. அபிவிருத்திக் குறிக்கோள்களில் எட்டாவதாக ''அபிவிருத்திக்கான உலகளாவிய பங்குபற்றலை அபிவிருத்தி செய்தல்'' என்ற பகுதியின் பிரதான இலக்குகளாக ''புதிய தொழில் நுட்பங்களின் விசேடமாக தகவல் தொலைத் தொடர்புத் தொழில் நுட்பங்களின் பயன்களை கிடைக்கச் செய்தல்'' குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியில் நின்று தொடர்பூட்டல், அதன்வழி இயங்கும் ஊடகங்களின் பணி தொடர்பான நிலைமைகளை ஆராய்வது நோக்கமாக அமைகிறது.

நாட்டின் தேசிய அபிவிருத்திப் பண்புச் சுட்டிகளின் பிரதான வகுதியாக தொடர்பூட்டல் உள்ளடக்கப்பட்டுள்ளது. தனி நபரினதும் சமூகத்தினதும் அபிவிருத்தியுடன் அதாவது மாற்றங்களுடன் தொடர்புபட்டதாக தொடர்பூடகம் நோக்கப்படுகிறது. சமூக மாற்றத்துக்கான குறிகாட்டியாகவும், மனிதவள மேம்பாட்டின் முதன்மைச் சுட்டியாகவும் கணிப்புக்குள்ளாகியுள்ளன. தொடர்பூடகங்களின் விரிவாக்க செயலாற்றுகைகளுக்கும், தரமான சேவை வழங்குவதற்கும், தொலைத்தொடர்பு சேவைக் கட்டுமானங்களின் வளங்களும் சாத்தியப்பாடுகளும் முதன்மையாகின்றன.

நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிகளால் தொலைத் தொடர்பு சேவையின் விரிவாக்கம் பல்வேறு அடிப்படைகளில் துரித வளர்ச்சி கண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. கோபுர வழி மூலமும், செய்மதி வழி மூலமா, செய்மதி துணை மூலமும் தொடர்பூட்டல் சேவை கள் அபார வளர்ச்சி கண்டுவருகின்றன. கம்பி மூல மான தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து இன்று கம்பியில்லாத தொலைத்தொடர்பு இணைப்புக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக CDMA ஐ (Call Division Multiple Access) குறிப்பிடலாம். செல்லிடத் தொலைபேசிகள், இணையமும், மின்னஞ்சல் பாவனைகளும் கிராம நகர வேறுபா டின்றி அதன் பயன்பாடுகளும் விரிவாக்கங்களும் உயர்வடைந்துள்ளன.

உலகம் ஒரு கிராமம் என்ற நிலையை இணைய வலைப்பின்னல்கள் சாத்தியமாக்கியுள்ளன. செல்லிடத் தொலைபேசிகள், குறுஞ்செய்திச் சேவை, மின்னஞ்சல், அழைப்பைத் திருப்பி விடுதல் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் ஒரே நேரத்தில் கலந்துரையாடுதல், ஒரு முன்னோடி எண் ஊடாக ஒரு தொகுதி எண்களுடன் தொடர்புகொள்ளல் போன்ற வசதிகளைக் கொண்டு தகவல் தொலைத் தொடர்பு சேவைகளை விரிவுபடுத்தியுள்ளன. சர்வதேச நேரடி அழைப்புச் சேவையையும் இவை இலகுவாக்கியுள்ளன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் தொடர்பூட்டல் பணி விரிவாக்கங்கள், வலையமைப்புப் பரப்பெல்லையின் விரிவாக்கம் என்பன உயர் தொழில்நுட்ப அறிமுகம், அதிகரித்த போட்டித்தன்மை, பேரளவு முதலீடுகளினால் 2006இல் 38 சதவீத வளர்ச்சி கண்ட தொலைத் தொடர்புத்துறையின் வாடிக்கையாளர்கள் வலையமைப்பு 2007 இல் 47 சதவீத வளர்ச்சி கண்டது என மத் திய வங்கி அறிக்கை குறிப்பிடுகின்றது. தொலைத் தொடர்பூட்டல் துறையைப் பொறுத்தமட்டில் 2009 இல் செல்லிடத் தொலைபேசிகளின் இணைப்புக்கள் 25.9 சதவீதத்தினால் 13.9 மில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை நிலையாக பொருத்தப்பட்ட தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 0.5 சதவீதத்தினால் 3.4 மில்லியனுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட விரிவாக்க வசதிகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், அழைப்பு மற்றும் இணைப்புக் கட்டணக் குறைப்புக்கள், செல்லிடத் தொலைபேசிப் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்தன. 2008இல் 54.8 சதவீதத்திலிருந்து 2009 இல் 68.2 சதவீதமாக அதிகரிப்பதற்கு செல்லிடத் தொலைபேசியின் 4ஜி தொழில்நுட்ப அறிமுகம் முக்கிய காரணமாகியது.

2009 இறுதியில் தொலைத் தொடர்பூட்டல் துறையானது 4 நிலையான இணைப்பு உட்பட 5 செல்லிடத் தொலைபேசி தொழிற்பாட்டாளர்களையும், 33 வெளிச் செல்லும் நுழைவாயில் தொழிற்பாட்டாளர்களையும், 22 இணையத்தளப் பணி வழங்குநர்களையும் உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடத்தளவு போட்டித் தன்மையை உருவாக்கக் காரணமாகியது.

தொடர்பூட்டல் துறையின் பிரதான இலக்காகத் தேசிய தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப அபிவிருத்தி இலக்கை அடைவதற்கான செயலாற்றங்களை முதன்மைப்படுத்தியதாகவுள்ளன.

மிலேனியம் அபிவிருத்திக் குறிகாட்டிகளில் 48 ஆவது குறிகாட்டியாக 100 பேருக்கு இணையத்தளத்தை எவ்வளவு பேர் பயன்படுத்துகிறார்கள் என்பதை மதிப்பீடு செய்வதாக அமைகின்றது. இலங்கையை பொறுத்தமட்டில் 2004இல் 100 பேருக்கு 2.87 இணையத்தள பயன்பாடு காணப்பட்டதாக தொலைத்தொடர்பு ஆணைக் குழு சுட்டிக்காட்டுகின்றது.

தொடர்பூட்டல் பணிகளுடன் தொடர்புபட்டதாக இலங்கையின் நுகர்வோரில் 60% பயன்படுத்துவதாக செல்பேசிகள் காணப்படுகின்றன. மேற்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் 65% வீதத்தினர் செல்பேசிகள் பயன்படுத்துவதாகவும் நகர, கிராம சனத்தொகையில் 50% வீதத்தினரும் தோட்டத் துறையில் 20% வீதத்தினர் பயன்படுத்துவதாகவும் ஆங்கில அறிவுள்ள தொகுதியினர் 80.2% வீதம் பயன்படுத்துவதாக மதிப்பீட்டு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

சமூக ஆளிடைத் தொடர்பு நிலைகளதும், சமூக வலையமைப்புத் தொடர்பு நிலைகளின் அனைத்துத் துறைகளின் தேவைகளுடனும் பின்னிப்பிணைந்ததாக தொடர்பூட்டல் வலு இணைவு பெற்றுள்ளது. தரவுகளைப் பெறுதல், தரவுகளை மற்றும் தகவலைப் பரிமாற்றுதல், தக வலுக்கு ஏற்ப ஒழுங்குபடுத் தல்களை திட்டமிடல், பகுப் பாய்வுகளை விரிவுபடுத்தித் தனி நபர்களுக்கும் சமூகத்துக்கும் அபிவிருத்திக்கும் பொருத் தமான தீர்மானங்களை நடைமுறைச் சாத்தியப்பாடான வகையில் மேற் கொள்வதற்கு உதவியளிப்பதாக உள் ளது.

**ப. இராஜேஸ்வரன்,**
ஆசிரியர்- கொக்குவில் இந்துக் கல்லூரி,
வளவாளர்-தொடர்பாடல் ஊடகக் கல்வி
(தேசிய கல்வி நிறுவகம்).

தகவலை முகாமை செய்தல், தகவலை பரிமாற்றுதல், தகவலை அறிவூட்டுதல், தகவலை அறிவித்தல், தகவலைக் களஞ்சியப்படுத்தல், தகவலைப் பயன்படுத்துதல் போன்ற செயன்முறைகள் இன்றைய தகவல் உலகின் உள்ளடக்கங்களாகி உள்ளன. தொடர்பூட்டல் பணிகள் இவற்றுக்கு வலுவூட்டுவனவாக அமைகின்றன. அறிவுசார் பொருளாதாரமாகத் தகவல்அறிவு மாற்றம் பெற்றுள்ளது. ஒருவன் எவ்வளவு தகவல்களை உள் வாங்கி வைத்திருக்கின்றானோ அதனை அடிப்படையாகக் கொண்டே அறிவு மற்றும் பொருளாதார வளம் தீர்மானிக்கப்படுகின்றது. அந்த வகையில் தனிநபரினதும் சமூகத்தினதும் தேசிய அபிவிருத்தியிலும் முதன்மைக் காரணியாக தொலைத்தொடர்பூட்டல் செயற்பாடுகள் உணரப்படுகின்றன. அதனைத் தரமானதாகவும் சமநிலையாகவும் யாவருக்கும் பயன்படுத்தக் கூடியதாக அடையச்செய்தல் தகவல் சமூக கட்டுமானத்துக்கு உந்து சக்தியாக அமையும்.

# மூட்டு வீக்கத்துக்கு விராலி இலை சிறந்த நிவாரணி


## வள்ளல் கீரை

வேறுபெயர் - வள்ளைக் கீரை, நாளிகம், கங்குன் கீரை.
தாவரவியற் பெயர் - Ipomoea aquatica
(ஐப்போமியா அக்குவேற்றிக்கா)
குடும்பம் - Convolvulaceae
(கொன்வொல்வு லேசியே)
சிங்களப் பெயர் - கங்குன்
சமஸ்கிருதப் பெயர் - கலம்பி
ஆங்கிலப் பெயர் - Swamp Cabbage

இது ஒரு நன்னீரில் படர்ந்து வளரும் கொடி. மழைக்காலத்தில் வயல் வெளிகள், குளம், வாய்க்கால்களில் காணப்படும். தனி இலைகள், ஈட்டிவடிவம், பூக்கள் ஊதா அல்லது வெள்ளை நிறம்.

இதன் இலையைக் கறியாகச் சமைத்து உண்டுவர தாய்ப்பால் அதிகம் சுரக்கும். எனவே, பாலூட்டும் தாய்மாருக்கு விசேடமான உணவு 'வள்ளல் தாய்போல் பிள்ளையை வளர்க்கும்' என்பது மருத்துவப் பழமொழி.

நீரிழிவு நோயாளருக்கும் இது நல்லுணவு. உணவுக் கட்டுப்பாட்டு மூலம் நீரிழிவைக்கட்டுப்பாட்டில் வைத்திருப்போர் வள்ளல் கீரையைத் தினமும் தமது உணவில் சேர்த்து வருவது நன்மை பயக்கும்.



## வலம்புரி, இடம் புரி

வேறுபெயர் - திருகுபவை, முறுக்குத்திப்பலி
தாவரவியற் பெயர் - Helicteres Isora
(ஹெலிக்ரேரஸ் ஸ்சோரா)
குடும்பம் - Sterculiaceae (ஸ்ரேகுலியேசியே)
சிங்களப் பெயர் - லீனியா
சமஸ்கிருதப் பெயர் - அவதாரிணி
ஆங்கிலப் பெயர் - East Indian Screw Tree

இது சிறு மரம், தனி இலைகள், நீள்வட்டம் அல்லது முட்டையுருவானவை. நுனி கூராக இருக்கும். பூக்கள் சிவப்பு நிறம் காய் நீளமாகவும் முறுக்குப்பட்டு மிருக்கும். வலது புறம் முறுக்கப்பட்டது. இடம் புரிக்காய் என்றும் அழைக்கப்படும். இரண்டும் ஒரே மரத்திலேயே உண்டாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இடம்புரிக்காயை எண்ணெயிலிட்டுக் காய்ச்சிய தைலத்தை இடது காதில் ஏற்படும் நோய்களுக்கும் வலம்புரிக்காயை நல்லெண்ணெயிலிட்டுக்காய்ச்சிய தைலத்தை வலது காதில் ஏற்படும் காதுக்குத்து, காதடைப்பு போன்ற நோய்களுக்கும் 2-3 துளிவீதம் விட்டுவர மாறும்.

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

வலப்புக்காயைப் பொடித்து 500 மி.கி- 1கி.அளவில் தேன் சேர்த்துச் சாப்பிட்டு வர இருமல், விக்கல் மாறும்.

இப்பொடியைத் தணலிலிட்டு வரும் புகையை வேதுவிட மூக்கடைப்பு நீங்கும்.



## விராலி

தாவரவியற் பெயர் - Dodonaea Viscosa
(டொடோனியா விஸ்கோசா)
குடும்பம் - Sapindaceae( சபின்டேசியே)
சமஸ்கிருதப் பெயர் - சணட்ட

விராலி என்றதும் விராலி மலை முருகன் கோவில் நினைவிற்குவரும். இது மலைப்பாங்கான இடங்களில் பெரும்பாலும் காணப்படும். செடி வகுப்புக்குரியது. இதன் இலையை மஞ்சளுடன் சேர்த்தரைத்து மூட்டு வீக்கங்களுக்கு வைத்துக்கட்டி வர வீக்கம் வற்றும்.

இலையை ஆமணக்கெண்ணையில் வதக்கிக் கட்டி வந்தாலும் வீக்கம், மூட்டு வலி, தசைப்பிடிப்பு என்பன விரைவில் தணிவடையும். மேலும் துடைவாழை, விற்புருதி, விரணங்கள் என்பனவும் மாறும்.



(தொடரும்...)

Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 164

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | | 8 | | |
| 9 | | | 10 | 11 | | | |
| | | 12 | | | | 13 | 14 |
| | 15 | | | | 16 | | |
| 17 | | | | 18 | | | |
| 19 | | | 20 | | | | 21 |
| 22 | | | | | 23 | | |

அனுப்புபவர் பெயர்:........................................................

விலாசம்:........................................................

........................................................

கையொப்பம்:........................................................

### இடமிருந்து வலம்

1. அநேக ரகம்
5.பாரம்
7.துணிவெட்ட உதவும்
8.குட்டிப் பையன்
9.வழக்குத் தொடுப்பவன்
10.தடுமாற்றம் தரும் புத்தி
12.நெருப்பு
13.பிரி
15.பரம்பரையைக் குறிப்பது
16.தவறான வதந்தி
17. பெண்ணின் பருவங்களில் ஒன்று
18.புண்ணிய இடம்
19.மூக்கு
20.கடுமையான
22.ஒரு தாளக் குறிப்பு
23.ஒரு கிழமை

### மேலிருந்து கீழ்

1.கடவுள்
2.யானையின் சாணம்
3.தலையில் எழுதப்பட்டது
4.காட்சி தரல்
5.முற்காலத்தில் மகளிர் தம் மணாளனை இந்த விதத்தில்தான் தேர்ந்தெடுப்பாளாம்.
6.தூர அளவீடு, முன்னர் வழக்கிலிருந்தது.
8.அநேகம்
11.இது போனால் சொல்லுப் போகும்.
12.பல கலந்து வருவது
14.ஸ்நானம் செய்.
15.பெருமை மிக்கோன்
16.அரற்று
17.புராதனம்
18.மறி
20.நித்திரையில் காண்பது
21. சுயத்தைக் குறிக்கும் சொல்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 162 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)அபிமன்யு(5) கவி. (7)வந்தி. (8) வகு (10)மது. (11)பதித்தல். (13)ஏடு (14)தூண். (15)யாசனை (17)வசி (19) தைரியசாலி (21)தர (22)பதுமை (24)ரம்பம் (25)தாகம்

### மேலிருந்து கீழ்

(1) அவமரியாதை (2)பிந்து. (3)மதி. (4)யுவதி (6)விரல் (9)குத்தூசி (11)படு (12)தண் (13)ஏனைய (16)சரிதம் (17)வலிது. (18)விரதம் (20)சாபம் (23)மைதா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 162 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** இ.விக்னேஸ்வரி, திருப்புகலி, கைதடி கிழக்கு, கைதடி.

**2 ஆம் பரிசு** குலசிங்கம் அர்ச்சனா, இல.146, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** எஸ்.எஸ்.முருகநேசன், இல.54 6/6 சென்.லோறன்ஸ் வீதி, கொழும்பு- 6

**4 ஆம் பரிசு** திருமதி ம.உமா, கந்த உடையார் லேன், பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு** க.இரத்தினேஸ்வரன், செம்பாடு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை.

### பாராட்டுப் பெறுவோர்

ர.பிரிதா,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்

பு.மாதவி,
இல.21/1, பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

செல்வி இ.லக்சுமி,
கடற்கரை வீதி, கொழும்புத்துறை

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 164**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,**
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 08.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7.சொற்சிலம்பம்போட்டி இல.164 இல்வெற்றிபெறுவோர்களது விவரம் 12.06.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

# குலையாத...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம் நல்ல படியாக முடிந்தது. கொழும்பில் சிலகாலம் தங்கியிருந்து மகளை அனுப்பிய பிற்பாடே மாஸ்ரரும் மனைவியும் ஆறுதலனார்கள். மாஸ்ரரின் மனைவியோ கோயில், குளம் எங்கும் தான் சந்திக்கும் உறவினர், நண்பர், அறிந்தவர், தெரிந்தவர் எல்லோரிடமும் மருமகனின் மாண்பியங்களையே பாடத் தொடங்கினாள். ''அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரி யில் குடை பிடிப்பான்'' என்பார்களே. மாஸ்ரர் வீட்டிலும் அதுவே நிலைப்பாடு.

''ஒரு நாள் காவேரியை விரும்பியிருந்த கண்ணணையும் அவன் தாயாரையும் கோயிலில் கண்டனர். கண்ணன் இவர்கள் மீது கொண்டிருந்த மதிப்பை வெளிப்படுத்திச் சிரித்தபோதும் மாஸ்ரரின் மனைவியோ முகத்தைச் சுளித்தாள். ஒரு சிரிப்புச் சிரிக்கக் கூட அவர்களது பெருமை விடவில்லை.

மாதங்கள் பல சென்றன. காவேரியிடம் இருந்து எந்த ஒரு கடிதமோ தொலைபேசி அழைப்போ வரவில்லை. இந்தக் கவலை அவர்களை வாட்டத் தொடங்கியது. கோயில், குளம் என அலையத் தொடங்கினர்.

ஒருநாள் அவர்களது முற்றத்தில் நின்ற வேப்பமரத்தில் இருந்து காகம் ஒன்று கரைந்து கொண்டிருந்தது. ''இண்டைக்கு ஆரு வரப் போயினம் காயிதம் கீயிதம் ஏதும் வரப்போகுதோ தெரியேல்லை. இந்தக் காகம் ஒரே கத்துது'' எனக் கூறினார் மாஸ்ரரின் மனைவி.

அவர்களது மூடநம்பிக்கை வீண்போகவில்லை. காயிதக் காரனின் மணி கேட்டதும் ஓடிப்போய் கடிதத்தை வாங்கிவந்தார் மாஸ்ரர். மனைவிக்கோ தலை, கால் புரியவில்லை.

''ஆற்ரை பிள்ளையின்ரையா? கடிதம் கெதியா வாசியுங்கோவன்''

காமாட்சி ஓடிச்சென்று கண்ணாடியை எடுத்து வந்து கொடுத்தாள். மாஸ்ரரும் நெஞ்சில் ஓர் இனம் புரியா மகிழ்ச்சியுடன் கடிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினார்.

''அன்பின் அம்மா அப்பாவுக்கு மகள் காவேரி கண்ணீருடன் எழுதிக் கொள்வது...... நீங்கள் நலமா? அப்பா நான் நீண்டகாலம் உங்களுக்குக் கடிதம் எழுதவில்லை. ஏனெனில், எனது கவலையை உங்களுக்குச் சொல்லக் கூடாது. உங்களைக் கவலைப் படுத்தக் கூடாது என்றுதான்.

''ஐயோ இதென்னங்க இப்பிடி எழுதி இருக்கிறாள். மிச்சத்தையும் வாசியுங்க'' மாஸ்ரர் நடுங்கும் கையுடன் மிகுதியைத் தொடர்ந்தார்.

''நாங்க நல்லா ஏமாந்திட்டம்.

அவர் இங்கு டொக்டர் இல்லை. ஆஸ்பத்திரியில் ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளி. அவ்வாறு இருந்தாக் கூடப் பரவாயில்லை. கீதையில் கண்ணன் சொன்ன மாதிரி வைத்தியனின் தொழிலும் தோட்டியின் தொழிலும் ஒன்றுதான். வைத்தியன் நோயை நீக்குகிறான். தோட்டி அழுக்கை நீக்குகிறான். தொழிலில் விட்டுக் கொடுத்துப் போனாலும் எனக்கு எனது வாழ்க்கையை விட்டுக் கொடுக்க முடியவில்லை.

இவருக்கு பல பெண்களோடு தொடர்பு. எல்லா வகையான போதைப் பொரு ளுக்கும் அடிமை. எனக்கு கொடுமை தாங்க முடி யாது. எனது உடல் கூட உங்கள் கைக்குக் கிடைக் குமோ தெரியாது.

''என்ரை வேலா! இது என்ன கொடுமை, நம்பி வெளிநாட்டு ஆசையால் ஏமாந்திட்டமே..... '' கூவினாள் மாஸ்ரரின் மனைவி.

அப்பா உங்கள் கண்முன்னாலேயே கண்ணனைத் திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்ந்திருப்பேன். எங்கும் சுவாசிக்கும் காற்றும் உண்ணும் உணவின் அளவும் ஒன்றுதான். ஆனால் வரட்டு வெளிநாட்டு ஆசைதான் வாழ்க்கைகளை அலங்கோலமாக்குகிறது.

எனக்கு ஏதாவது விபரீதம் நடந்தாலும் அதுவும் மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாக இருக்கும். இத்துடன் முடிக்கிறேன். மகள் காவேரி என்று எழுதிய கடிதத்தைப் படித்து முடிக்க இருவருக்குமே கண்ணீர் ஆறாகப் பெருகியது.

''ஐயோ! வெளிநாட்டு ஆசை இப்படியொரு விபரீதத்தைத் தந்திட்டுதே. என்ரை பிள்ளையின்ர வாழ்க்கையை நாங்களே அழிச்சிட்டமே. இப்ப நியாயம் கேட்கக் கூடக் கிட்ட இல்லையே... எனப் புலம்பினாள் மாஸ்ரரின் மனைவி.

அப்போது பக்கத்திலிருந்த கொமினிகேசன் பெடியன் அவசர அவசரமாக ஓடிவந்தான் ''சேர்....சேர்... நாளைக்கு பகல் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் காவேரி அக்கா வந்திறங்குவாவாம். யாராவது ஒருத்தரை ஏயாப் போட்டுக்கு வரச் சொல்லட்டாம்'' என்றான்.

உள்ளம் குலைந்து ஒடுங்கிக் கலங்கிய பேரம்பலம் மாஸ்ரர் முகத்தில் ஒரு மகிழ்ச்சி. எங்க எங்களைப் பார்க்காமலே அவள் அங்க ஏதாவது செய்து தன்னை மாய்த்துக் கொள்வாளோ என்று பயந்தவர், ஊர் திரும்ப எண்ணிய காவேரியின் துணிவான செயலால் உளம் மகிழ்ந்தார்.

பெற்றோர் நிச்சயிக்கும் இத்தகைய திருமணங்களினால் சோகமுறும் வாழ்க்கையிலும் உறுதி குலையாத காவேரியின் ஊருக்கான பயணம் வெற்றிகரமாக நிறைவெய்தியது.

இப்பொழுது பேரம்பலம் மாஸ்ரரும் மனைவியும் காவேரியின் விருப்பங்களுக்குத் தடை செய்யும் ஒரு தலைப்பட்சமான எண்ணங்களைத் தொலைத்து விட்டார்கள்.

எனவே காவேரிக்குப் பொருத்தமான விருப்பமான கணவராகக் கண்ணனே சிலவேளை வரக்கூடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 21

## உயிர்களைக் கொள்ளையிடும் புகையிலை

இன்று உலக அரங்கில் வருடாந்தம் 60 லட்சம் மக்களின் உயிரைக் கொள்ளை கொண்டு பலகோடிக் கணக்கான மக்களை நோயாளிகள் ஆக்குகின்ற புகையிலையின் பிறப்பிடம் அமெரிக்கா. 15ஆம் நூற்றாண்டில் அங்கு வாழ்ந்த பழங்குடி மக்கள் குளிர், பனி போன்ற விசேட காலங்களில் பாவித்து வந்தனர்.

இதனை புதிய உலகைக் கண்டு பிடிக்கப் புறப்பட்ட கொலம்பஸும், மாலுமிகளும் வியப்புடனும் ஆச்சரியத்துடனும் அவதானித்ததாக வரலாறு கூறுகிறது. பின்பு அங்கிருந்து ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளுக்குப் பரவி 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகமாகி, 17ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முகலாயப் பேரரசர் ஆட்சிக் காலத்தில் பயிரிடப்பட்டுப் பின் ஆசிய நாடுகளில் எல்லாம் மிக வேகமாகப் பரவியது. தற்போது இது இல்லாத நாடு எதுவும் இல்லை எனும் அளவுக்கு ஊடுருவி, மனித சமுதாயத்தில் பல்கிப் பெருகிச் சர்வ சாதாரணமாக இருக்கும் புகைப்பிடிப் பழக்கம் எல்லோரையும் தன்வயமாக்கிப் பழக்கமானதொரு வழக்கமாகிவிட்டது. வாழ்க்கையில் எதை இழந்தாலும் தன்மீது மட்டும் பற்று இருக்குமாறு இப்புகைக்குடி செய்து விடுகிறது.

பலவிதமான நச்சுப்பொருள்களைக் கொண்ட புகையிலையில் உள்ள நிகோட்டின் எனும் நஞ்சானது மூளையையும் அதன் நரம்பு மண்டலங்களையும் தூண்டி விடுகிறது. இதனால் தற்காலிகப் புத்துணர்ச்சி பெறுவது போன்ற இன்பம் அடைகின்றான். இருதயத்தையும் அதிவேக மாகத் துடிக்க வைக்கிறது. குருதிக் குழாய்களையும் குறுக்கி விடுவதால் குருதி அமுக்கம் தற்காலிகமாக அதிகரிக்கிறது.

இப்புத்துணர்ச்சிக்குப் பின் மனிதன் மிகச் சோர்வுள்ளவனாக ஆகிவிடுகிறான். எனவே மீண்டும் புத்துணர்ச்சிபெற விரும்புகிறான்.

அதனால் மீண்டும் புகையை நாடுகிறான். இவ்வாறு புகைக்குடிக்கு அடிமை ஆகிறான். ஒருமுறை புகை குடிக்கும்போது உடலில் சென்ற நிகோட்டின் ஆனது நான்கு மணித்தியாலத்துக்கு உடலில் அதன் தாக்கம் இருக்கும். மக்கள் புகையிலையைச் சுருட்டு, பீடி, வாய்ப் புகையிலை, சிகரெட், மூக்குத்தூள் போன்ற வடிவங்களில் பயன்படுத்துகின்றனர்.

நடுத்தர வர்க்கத்தினரும், உயர் வர்க்கத்தினரும் கூடுதலாகச் சிகரெட் பாவிக்கிறார்கள். இதில் புகையை வடிகட்டும் பில்டர் உண்டு. ஏழைகளும், தொழிலாளர்களும் கூடுதலாகப் பீடி பாவிக்கிறார்கள். இது மலிவானது. எனினும் சிகரெட்டை விட ஆபத்தானது. பீடியில் உள் எடுக்கப்படும் புகையில் காபன் மொனக்சைட், நிகோடின், வைற்ட்ரஜன் சயனைடு, பொன் சோபைரீன் மற்றும் அமோனியா போன்றவை சிகரெட்டில் உள்ளதைவிடக் கூடுதலாக உள்ளெடுக்கப்படுவதால் அதிக ஆபத்தைக் கொடுக்கும். அத்துடன் இதில் வடிகட்டுவதற்கு பில்டர் இல்லை. வாய்மூலம் மெல்லப்படும் உமிழ்நீர் கலந்த புகையிலைச்சாறு ஆனது வாய்ப்பகுதி, உணவுக் குழாய்ப் பகுதி, தொண்டைப்பகுதி, சுவாசப்பை, வயிற்றுப் பகுதிகளில் புற்றுநோயை ஏற்படுத்துகிறது என்பதை ஆய்வுகள் உறுதிசெய்கின்றன.

ஒருவர் சிகரெட் குடிக்கும்போது அதில் 1/3 பகுதி நிகோடின் புகைமூலம் உடலினுள் உள்வாங்கப் படுகிறது. அத்துடன் விரைவாகக் குடிக்கும் போதும் சிகரெட் எரிந்து குறுகும்போதும் கூடுதல் அளவு நிகோடின் உள்வாங்கப்படுகிறது. மீதி நிகோடின் ஆனது காற்றின்மூலம் வீட்டுச் சுவர்கள், கட்டில்கள், தரை, தரை விரிப்புகள், மேசை, நாற்காலிகள் போன்ற மரப்பொருள்களிலும் அவர் அணிந்திருக்கின்ற உடை, அவரது தோல் பகுதிகளிலும் படிகின்றன. பின்பு இந்த நிகோடின் ஆனது காற்றில் உள்ள நைட்டஸ் அமிலத்துடன் (Nitrous acid) கலந்து புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய (TSNAS) Tobacco Specific Niro samines எனும் நச்சுப் பொருளை உண்டாக்குகின்றது. இது வீட்டில் தவழும் குழந்தைகள், ஓடி விளையாடும் பிள்ளைகளின், தோல், சுவாச மூலம் உடலினுள் சென்று ஏதும் அறி யாதவர்களும், புகை பிடிக்காதவர்களும் இதனால் பாதிக்கப்படுவதற்குக் காரணமாகின்றது.

சாதாரண சிகரெட் புகையில் நிகோடின், பைரிடைன், அமோனியா மெதிலைமன், பிரஸ்ஸிக் அசிட், கார்பன் மொனசைட், சல்பரிட் ஹட்ரஜன், கார்பாலிக் அசிட், காவிடிக் இதுபோன்ற 19 வகையான உடலுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய நச்சுத்தன்மையைக் கொண்டுள்ளது.

ஒருவருக்கு ஏற்படும் இந்தப் புகைத்தல் பழக்கத்தால் பணவிரயம், கால விரயம், சக்தி விரயம், உதடைக் கருகச் செய்தல், பற்களின் நிறமாற்றம், பல் ஈறுகளில் காவிபடிதல், வாய் துர்நாற்றம், இதய நோய்கள், சுவாசப்பை நோய்கள், இரத்த அழுத்தம் , கண்பார்வை மங்குதல், உஷ்ண இருமல், சீரண சக்தி குறைவு, பசியின்மை, தூக்கமின்மை, மூச்சுத்திணறல், ஆஸ்துமா, இரத்தக்குழாய்கள் சுருக்கம், இரத்த நாளங்களில் சுழற்சி, கசரோகம், சரீர வளர்ச்சி குறைவு, உடலின் மென்மையான உறுப்புகள் பாதிக்கப்படுதல், சிசு மரணம், குறைப் பிரசவம், பாரிச வாதம், மலட்டுத்தன்மை, வாய், தொண்டை, உணவு குழாய், சுவாசப்பை போன்ற பகுதிகளில் புற்றுநோய்கள், நாவு சுவை அற்று இருத்தல், இப்படியே தொடர்ந்து எழுதிக்கொண்டு இருக்கலாம். இப்படிப் புகையிலை பாவிக்கும் பழக்கத்தில் இருந்து ஒருவர் மீள்வதற்கு ஆரம்பம் ஆயின், முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்.

புகைத்தலை முற்றாகத் தவிர்த்தல், பல நாள்களாகவே இப்பழக்கம் இருப்பின் நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். கூடுமானவரை புகைப் பிடிப்பவர்களோடு இருத்தலைத் தவிர்த்தல், தண்ணீர் அல்லது சீனி சேர்க்காத பழரசங்களை அதிக அளவில் அருந்துதல், கிளர்ச்சியூட்டக்கூடிய எல்லாப் பானங்களையும், உணவுகளையும் தவிர்த்தல், சுத்தமான காற்றோட்டம் உள்ள இடத்தில் உடற்பயிற்சி செய்தல், உலாவுதல், உங்கள் புகை குடியோடு சம்பந்தப்பட்ட இடங்களைத் தவிர்த்தல், செயல்க ளைத் தவிர்த்தல், அதிகம் புகைகுடிக்கும் பழக்கம் முன்பு இருப்பின் படிப்படியாகக் குறைத்தல், மாற்றுப் பழக்கத்தை ஏற்படுத்துதல் (ஸ்வீங்கம்) வாயில் போட்டு நெடுநேரம் மெல்லுதல், மருத்துவம், மனோவசிய முறைகளை நாடுதல், தனிமையில் இருத்தலைத் தவிர்த்தல், தன்னடக்கமுறை. சிகரெட் குடிப்பது தவறு. அது எமது உடலுக்கு நஞ்சு என்பதை அறிந்து புறமனதின் அறிவுறுத்தலினால் நாம் ஒவ்வொருவரும் இதில் இருந்து மீட்சி பெறுதல் வேண்டும். இன்று உலக அரங்கில் எந்த அரசின் பொருளாதாரத்திலும் புகையிலைப் பொருள்களும் மதுபானமும் அதிக வருமானத்தைக் கொடுப்பதால் அதனை முற்றுமுழுதாகத் தடை செய்யமுடியாத நிலையில் உள்ளது. எனினும் மக்கள் நலன் கருதி இதன் கவர்ச்சிகரமான விளம்பரங்களைத் தடை செய்வதன் மூலமும் இதன் பாதிப்புக்களை பகிரங்கமாக வெளியிடுவதன் மூலமும், மாணவர்கள் கல்வி நிறுவனங்களுக்கு இதுபற்றிய அறிவைப் புகட்டுவதன் மூலமும் பொது இடங்கள், மக்கள் போக்குவரத்துப் பாதைகள் போன்றவற்றில் இவை பாவிப்பதை தடைசெய்வதன் மூலமும் ஒவ்வொரு தனிமகனும் இதுபற்றி விழிப்புணர்வு பெற்று இதில் இருந்து மீள்வதன் மூலம் எம்மால் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

**ச.சுதாகரன்,** தாதிய உத்தியோகத்தர்.
யாழ். போதனா வைத்தியசாலை.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

## மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 5

எல்லா மதங்களின் போதனைகளிலும் மருத்துவம் சம்பந்தமான கருத்துக்கள் மறைந்திருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. விஞ்ஞானமயப்பட்டு வரும் உலக நடைமுறைகளும் மனிதனின் புதிய சிந்தனைகளும் வரவேற்கப்படவேண்டியவை. வளர்ச்சி பெற வேண்டியவை. அதேபோல மதக்கருத்துக்களும் விஞ்ஞான மயப்படுத்தப்படவேண்டும் என்ற ஒரு தேவை எழுந்திருக்கிறது. சொல்லப்படும் ஒரு கருத்தை எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் மனம் ஏற்றுக்கொள்ளமாட்டாது. ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவும் முடியாது. காரணம் அப்படிப்பட்ட மனதுடன்தான் கடவுள் மனிதனைப் படைத்திருக்கின்றார்.

அதாவது எதற்கும் ஆதாரத்தையும், காரணத்தையும், விளக்கத்தையும் தேடும் மூளைதான் மனிதனுக்கு அமையப்பெற்றிருக்கிறது. இதனைத்தான் பகுத்தறிவு என்று சொல்லுவார்கள். எனவே மதக் கருத்துக்கள் மனிதனின் பகுத்தறிவால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தால் மட்டுமே அவை மனிதனை வழிநடத்தும். இதன் மூலம் மதங்களில் பொதிந்திருக்கும் மருத்துவப் பேரொளி மக்களைச் சென்றடையும்.

கடவுளைப் பக்தியுடன் மனமுருகி, மனம் ஒருமித்து, தியானித்து வழிபடும் முறை அன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. இதன்மூலம் பல தீமைகள் நீங்கும். நாம் காப்பாற்றப்படுவோம். பல நல்ல விடயங்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவை உண்மைதானா என்ற கேள்வியும் பலரது மனங்களிலே எழத்தான் செய்கிறது. ஆனால் உண்மையென ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டு வருகிறது. மனமுருகி, மனம் ஒருமித்து, தியானித்து வணங்குவது என்பது Meditation, Relaxation, சுவாசப்பயிற்சி என்பவற்றின் அடிப்படையில் அடக்கமாகின்றது. இவற்றை ஒழுங்காகச் செய்து வருமாறு நவீன மருத்துவ உலகு மக்களுக்குப் பரிந்துரைத்து நிற்கின்றது.

*மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் என்ற இந்தத் தொடர் கட்டுரையில் சொல்லப்படுகின்ற கருத்தோட்டங்களுடன் பூரணமாக நீங்கள் உடன்பட்டால் 'A' எனவும் ஓரளவு உடன்பட்டால் 'B'உடன்படவில்லையாயின் 'C' எனவும் இத்தக் கருத்துக்களை எதிர்ப்பதாயின் 'D' எனவும் ரைப் செய்து 0773604097 என்ற இலக்கத்துக்கு SMS செய்யவும்*

இதனைத் தினமும் செய்து வந்தால் பல நோய்களின் தீவிரத்தன்மை நீங்கும். அல்லது குறைவடையும். நாம் பல கொடிய நோய்களிலிருந்து காப்பாற்றப்படுவோம். மனதுக்குப் புத்துணர்ச்சியும் அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படும். இதன் மூலம் பல நல்ல காரியங்கள் நிறைவேறும்.

தற்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கும் ஆராய்ச்சிகளின் முடிவின்படி Meditation, Relaxation, தியானம், சுவாசப் பயிற்சி போன்றவற்றின் மூலம் பல கொடிய நோய்கள் ஏற்படும் வீதத்தைக் குறைக்க முடியும் என்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கொடிய நோய்களாவன அதிகரித்த குருதி அமுக்கம், மன அழுத்தம், பாரிசவாதம், தலையிடி, மனச்சோர்வு, மாரடைப்பு போன்றவையாகும். தியான முறைக்குக் கடவுளின் உருவை வைத்துத் தான் தியானிக்கவேண்டும் என்ற அவசியமில்லை. கோயிலில் இருந்துதான் தியானிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. நாம் விரும்பிய ஓர் அமைதியான இடத்தில் இருந்து நாம் விரும்பிய ஒருபொருளை மையமாக வைத்து தியானிக்க முடியும். காரணம் கடவுள் எங்கும் எதிலும் நிறைந்திருக்கிறார் எனறு மதங்கள் கூறுகின்றன.

எனவே மதவழிபாட்டு முறைகள் மனிதனை உடற்பலமும் ஆன்மிக பலமும் பொருந்தியவனாக ஆரோக்கியமானவனாக வாழ வழிசெய்கிறன என்பதில் சந்தேகம் இல்லை. மதக் கருத்துக்கள் அனைத்தும் விஞ்ஞான தத்துவங்களுக்கும் நவீன மருத்துவத்துக்கும் முரணாவை என்ற கருத்துக்கு இடமில்லை. எமது இளம் தலைமுறையினரை மதக்கோட்பாடுகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்களாக அதில் நம்பிக்கை கொண்டவர்களாக வளர்த்தெடுப்பது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை ஆகும்.

(தொடரும்)

**சி.சிவன்சுதன்,** வைத்திய நிபுணர்.
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் மகத்துவத்தை உணர்வோம் 3

கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து புரிந்துணர்வுடன் வாசித்தலே சிறந்த வாசிப்பு. இதற்குரிய முன்பயிற்சிகள் கொடுக்கப்படுதல் மிகவும் முக்கியம் என்பதை ஆசிரியர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். மாணவர்களின் முதிர்ச்சிக்கும் விருப்புக்கும் உரிய முறையில் ஆர்வத்துடன் கூடிய வாசித்தல் செயற்பாடு ஒன்றை அமைத்துக்கொள்ளுதல் மூலம் வாசிப்பை ஏற்படுத்தி நீண்டகாலம் நிலைபெறக்கூடிய வாசிப்பில் தொடர்ந்தும் மாணவர்களை ஈடுபடச்செய்யும் வண்ணம் ஆசிரியர் வழிகாட்டியாக இருத்தல்வேண்டும்.

மேலே கூறப்பட்ட கருத்துக்களின்படி மொழியறிவைப் பெறவும் அனுபவத்தைத் தெளிவாக விளக்கவும் ஆசிரியர்கள் அதிக நூல்களை வாசிக்கவேண்டும். மாணவரிடையே வாசிப்பாற்றலை மேம்படுத்தி அவர்களைச் சிறந்த ஆளுமையுடையோர்களாக்குவது இன்றைய முக்கிய தேவைகளில் ஒன்று என்பதைக் கருத்தில்கொண்டு செயற்படவேண்டியது ஆசிரியர்களது கடமையாகும்.

இந்தவகையில் நோக்கும்போது மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்வது கல்வியின் தரத்தையே குறைத்துவிடும் என்பதால் வாசிப்பில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தவேண்டியது இன்றைய ஆசிரியர்களின் மிக முக்கியமான பணியாகும்.

மரபுரீதியாகக் கற்கும் வழிமுறைகளில் வாசிப்பு மிகவும் பலம்வாய்ந்த ஒன்று. முன்பு பாடசாலைகளில் வாசிப்பு முக்கிய பாடமாக இருந்தது. மொழி கற்பிக்கும் முறைகளில் வாசிக்கும் திறனே முக்கியமானது. வாசிப்புத் தேர்ச்சியை அடைவதே மொழியின் முக்கியமான குறிக்கோளாகவும் இருந்தது.

கற்றல் தொடர்பாக 3 Rகள் குறிப்பிடப்படுகின்றன. அவை Reading - வாசித்தல், Retention - ஞாபகத்தில் வைத்திருத்தல், Recall - மீட்டுப்பார்த்தல் என்பவையாகும். மேலும், விரிவாகக் கூறுவதாயின் Reading, Remembering, Recaptulating, Reproducing, Reffering, Rectifying, Revidine ஆகிய ஏழு படிகளையும் குறிப்பிடலாம். மேற்கூறப்பட்ட கற்றல் தொடர்பான வளர்ச்சி நிலைகளிலும் முதன்மை பெறுவது வாசிப்பே எனலாம். வாசிப்பின் மூலம்தான் இயல்பான கல்வி வளமும், கற்பனை ஆற்றல்களும் வளரும். அழகியல் மனோபாவம் உருவாகும். ஆக்க சிந்தனை வளரும். முதலில் கற்பனை பண்ணு, பின் விரும்பு, பின் சிருஷ்டி என பேர்னாட்டோ கூறுகின்றார். எனவே, வாசிப்பே அடிப்படையானது. அவர் தொடர்ந்து கூறுகையில், சீரான கல்விக்கு நுண்கலை முறைதான் சிறப்பானது. அதற்கப்பால் சித்திரவதைதான் என்கிறார்.

பல உலக நாடுகளில் சாதாரண எழுத்தறிவே இன்னமும் பெரிய பிரச்சினையாக உள்ளது. இந்தியாவை எடுத்துக்கொண்டால் 35வீதமான மக்கள் எழுத்தறிவு அற்றவர்கள். பெண்களில் எழுத்தறிவற்றோரின் சதவீதம் அதிகம். ஆரம்பப் பாடசாலையில் அனுமதிபெறும் மாணவர்களில் 50 வீதமானோர் ஆரம்பக் கல்விநிலை முடிவுறும் முன்னரே பாடசாலையை விட்டு விலகிவிடுகின்றனர். உயர் கல்வியிலும், தகவல் தொழில்நுட்பத்திலும் பெருவளர்ச்சி பெற்றுள்ள இந்தியா எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை பரந்த எழுத்தறிவின்மையாகும்.

வாசித்தலின் வளர்ச்சி கல்வித்துறையில் பிரதான பங்கை வகிக்கின்றது. உயர்ந்த அறிவு, சமூக மனவெழுச்சி, ஆன்மீகத்துறை விருத்தி ஆகியவற்றுக்கு வாசிப்பு அடிக்கல்லாகும். வாசித்தலின் நிலை பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் பலரும் இன்று கலந்துரையாடி வருகிறார்கள்.

வாசித்தலின் பழக்கம் குன்றி வருகிறதெனப் பலராலும் பேசப்பட்டு வருகிறது. எனவே, வாசித்தலின் நன்மை தீமைகளை ஆராய்வது சாலவும் பொருந்தும். ''ஒரு புத்தகம் ஒரு மனிதனுக்குச் சமம்'' என ஆங்கிலக் கவி மில்ரன் கூறுகிறார். ஒரு புத்தகத்திடம் குருதி, என்பு என்பன இல்லை. ஆனால், மூளை உண்டு என மேலும் விளக்கம் கொடுக்கப்படுகிறது.

வாசிக்கும் பழக்கத்தை அனைவரும் கைக்கொள்ளச்செய்ய வேண்டும். ஏனெனில், அது கற்பித்தலுக்குரிய விடயம் அல்ல. ''இது என்றும் வாசிக்கப்படவேண்டும் அல்லது அச்சிடப்பட்டவையோடு உரைக்க வேண்டும்'' என சேர் அடம்ஸ் என்ற அறிஞர் கூறுகின்றார். ''வாசித்தல் ஒருவனை முழுமனிதன் ஆக்குகிறது'' என பிரான்சிஸ் பேக்கன் கூறுகிறார்.

எமது நாட்டில் வாசித்தல் ஓர் இயந்திரமான நுட்பம் எனக் கூறலாம். வாசிக்கும் நுட்பத்தை நன்கு கற்க நான்கு வருடங்கள் எடுக்கலாம். வாசித்தல் ஒரு சிக்கலான நடைமுறை. இது எழுதுவது போன்று சுலபமான நுட்பம் அல்ல. ஒருமுறை எழுதக் கற்றுக்கொண்டால் சுயமாக ஆற்றலை அதிகரிக்கச் செய்யலாம். பல மட்டங்களில் எழுத்துப் பயிற்சியைப் பெறலாம். ஆனால், வாசிக்கும் ஆற்றலை ஒரு மட்டத்தில் அடைந்தவர் அதே ஆற்றலைக்கொண்டு உயர் மட்டத்தை அடைய முடியாது. அதாவது, உயர் அறிவுகொண்ட ஆன்மிக பாரம்பரியத்தை விளங்கி வாசிக்க முடியாது. அதற்கு நன்றாக வாசித்துத் தேர்ச்சி பெறவேண்டும். சிறு பிள்ளைகளில் ஆரம்ப காலத்தில் இருந்தே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும். அச்சிடப்பட்ட எழுத்துக்களை ஓசை உடையதாக மாற்ற முடியாது. பிள்ளையின் ஆர்வத்தை, அதனுடைய அறிய விரும்பும் ஆவலை நிலைநாட்ட வாசிப்புக்குக் கருத்துக்கொடுக்கும் தன்மையை ஏற்படுத்தவேண்டும்.

கருத்தை விளங்கி வாசிக்கவேண்டும் என்பது பற்றி சிறுபிள்ளை உளவியலாளர் புறரனோ பெற்றில் ஜெயம் கருதுகிறார்.

சும்மா வாசிக்கக்கூடிய புத்தகங்கள் உண்டு. வாசித்து விளங்கவேண்டிய புத்தகங்கள் உண்டு. வாசித்து விளங்கி ஜீரணிக்கவேண்டிய புத்தகங்களும் உண்டு என பிரான்சிஸ் பேக்கன் கூறியுள்ளார். பிள்ளைகளும் பெற்றோரும் கைகோர்த்து நடக்கவேண்டும். ''பிள்ளைகள் பின்பற்றும் தன்மையுடையவர்கள்'' என பிறெட்மன் கூறியுள்ளார்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களின்படி வாசித்தல் மட்டுமன்றி கிரகித்தலின் முக்கியத்துவமும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. எனவே, பாடசாலை மாணவர்கள் வாசிப்பதில் கிரகித்து வாசிப்பது மிகவும் முக்கியமானது. கிரகித்து வாசிக்கும்பொழுதே கற்றல் முழுமைபெற முடியும்.

**மைதிலி தேவராஜா,**
**ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக் கல்வி, யாழ். கல்வி வலயம்.**

(வளரும்)

## வானம்



## விமர்சனம்

இன்றைய நகர்ப்புறத்து இளைஞர்களின் வாழ்க்கை அவர்கள் ஏழைகளாகவே இருந்தாலும் நுகர்வு கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்றது. அவர்கள் வாழும் வாழ்க்கைக்கும் வாழ விரும்பும் வாழ்க்கைக்குமான தொலைவு ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இந்த மனப்போராட்டத்தில் தன்னைச் சூழ்ந்திருக்கும் துன்ப துயரங்களைப் போக்கும் வழிமுறைகளை ஆராயாமல் எதைச் செய்தேனும் நவீன வாழ்வின் இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்னும் வேட்கை இளைஞர்களின் மனங்களில் விதைக்கப்படுகிறது. அதற்காக அவர்கள் எந்த எல்லைக்குச் செல்லவும் தயங்குவதில்லை.

வானம் படத்தில் வரும் இளைஞர்களின் எதிர்பார்ப்பு இதேபோல அமைந்து விடுகிறது. பல்வேறு பிரச்சினைகளுக்காக ஐந்து வகையான பாத்திரங்களில் நபர்கள் சென்னையை நோக்கி வருகிறார்கள். விபச்சாரி, பணக்கார இளைஞன், குப்பத்து ஏழை இளைஞன், வறுமையால் வாடும் நெசவாளி, நேர்மையாக வாழும் நடுத்தரவர்க்க முஸ்லிம் என்று அந்த ஐந்து பாத்திரங்களும் சமகால இந்தியாவின் கதைகளை விவரிக்கின்றன. வானம் என்ற படத்தின் கதை. வேதம் என்னும் பெயரில் வெளியான இந்தப் படத்தை இயக்கிய க்டுஷ் என்பவரே தமிழிலும் இயக்கியிருக்கிறார். நகர்ப்புற குப்பத்து இளைஞனாக வரும் சிம்புவுக்கு கோடீஸ்வரப் பெண்ணுடன் காதல் ஏற்படுகிறது. தனது காதலிக்காகத் திருட்டிலும் ஈடுபடுகின்றான் சிம்பு. உதிரிப்பாட்டாளி வர்க்கத்தின் இளைஞர்களாக சிம்புவும், சந்தானமும் வருகிறார்கள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் தன் சொந்த இரசனையை மட்டும் பெரிதெனப் பேசித்திரியும் பரத் பாத்திரம் பணக்கார இளைஞர்களின் அசல் விம்பம். இறந்துவிட்ட தந்தையைப் போல இராணுவத்தில் சேருவதற்குத் தாய் வற்புறுத்துவதைப் பரத் மறுக்கிறான். இசைதான் தனது எதிர்காலம் என்று கூறுகிறான்.

ஓர் இசை நிகழ்ச்சிக்காக பெங்களூரில் இருந்து தன் குழுவுடன் சென்னையை நோக்கிக் காரில் வரும் பரத் லொறி ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்படுகிறது. அந்த விபத்தில் பலர் அடிபட்டு வீதியில் விழ அதைப்பற்றிக் கவலை கொள்ளாமல் தொடர்ந்து காரில் சென்று கொண்டிருக்கிறான் பரத். காப்பாற்ற வேண்டாமா என்கிறாள் கூடவே வரும் காதலி. அதுக்கெல்லாம் ஆள் இருப்பார்கள் என்கிறான் பரத். தன்னால்தான் அந்த வீதி விபத்து ஏற்பட்டிருக்கிறது என்ற குற்ற உணர்வு கொஞ்சம்கூட இல்லாத இந்திய பணக்கார இளைஞர்களின் போக்கைக் காட்டுகிறது பரத் என்ற பாத்திரம். எந்த லொறி ஒன்றை விலக முற்பட்டவேளை விபத்து ஏற்படுகிறதோ அந்த லொறியின் சாரதியான சிங்கால் பரத்துக்குக் கடைசியில் உதவி கிடைக்கிறது. அதாவது பரத் துக்கும் காதலியான வேகாவுக்கும் ரவுடிக் கும்பலால் பிரச்சினை ஏற் படும்போது அவர்களை சிங் அடித்து விரட்டுகிறான். அதன்மூலம் பரத்தின் சுய நலப் பண்பு கடும் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

பாலியல் தொழிலாளியாக வரும் அனுஷ்காவின் பாத்திரமும் ஊரும் தமிழ்ச் சூழலுக்கு அந்நியமாக இருந்தாலும் காவல் துறையினருடன் அவர் பேசும் பல வசனங்கள் குறிப்பாகத் தமிழ் நாட்டுக் காவல்துறையினரைக் கேலி செய்வதாகவும் அமைகிறது. குறிப்பாக நாங்கள் உடுப்பை அவிழ்த்துவிட்டுச் செய்யுறதை நீங்க உடுப்பை அவிழ்க்காமல் செய்கிறியள் போன்ற வசனங்கள் கூர்மையானவை. ஆந்திரா எல்லையில் ஒரு விபச்சாரக் கும்பலில் மாட்டிக் கொண்ட அனுஷ்காவும் அவரது தோழியான திருநங்கையும் அந்தக் கும்பலிடமிருந்து தப்பிச் சென்னையில் தனியாகத் தொழில் நடத்த ரயிலேறுகிறார்கள்.

கிராமப் புறங்களில் வாழ வழியற்று வட்டிக்குப் பணம் வாங்கி அந்தக் கடனை அடைப்பதற்கு மகனை அடகு வைத்து அவனை மீட்பதற்கு கிட்னியை விற்று என விவரிக்கப்படும் சரண்யாவின் பாத்திரம் அமைந்திருக்கிறது. இந்தியா முன்னேறுகிறது. தொழில் வாய்ப்புக்கள் பெருகிக் கிடக்கிறன எனப் பிரச்சாரம் செய்யும் இதே இந்தியாவில் தான் விவசாயம் பொய்த்துப்போய் வறுமையில் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கிறது. சரண்யாவும் அவரது வயதான மாமனாரும் சென்னை வந்து கிட்னி விற்க முனையும் காட்சிகள் யதார்த்தமானவை. ஏழ்மையின் அவலத்தைக் கூர்மையாகக் காட்டுவது இந்தப்படம்.

வானம் படத்தின் மற்றொரு பக்கம் பிரகாஷ்ராஜினுடையது. இந்தியாவில் இஸ்லாம் தீவிரவாதம் உருவாகுவதற்கான காரணமாக இருப்பது இந் துத் தீவிரவாதம் என்ற கருத்து முதல்முறையாகத் தமிழ்த்திரையில் வெளிப் படையாகப் பேசப்படுகிறது. பிரகாஷ்ராஜின் தம்பி இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் ஒன்றில் சேர்கிறான். தனது தம்பியைத் தேடி பிரகாஷ்ராஜும் மனைவியும் சென்னை வருகிறார்கள். கோவையில் பிரகாஷ்ராஜை அடித்து நொறுக்கும் இந்துத் தத்துவ ஆதரவாளரான பொலிஸ் சென்னையில் பிரகாஷ்ராஜை தீவிரவாதியாக்கி கைது செய்கிறான். அப்பாவி முஸ்லிம்கள் அதிகார வர்க்கத்தால் எவ்வாறு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதை பிரகாஷ்ராஜின் பாத்திரச் சித்திரிப்பு நேர்மையாக உணர்த்துகிறது.

இதைத் தவிர இந்தப் படம் சமகாலத் தமிழ்ப் படங்களில் இன்று முற்றிலும் மாறுபட்ட முறையில் யதார்த்தமான கதைக் களங்களிலிருந்து பயணிக்கிறது. ஐந்துவகை இந்தியாவையும் காட்சிப்படுத்தியதிலிருந்து கதையை கொண்டுபோன விதத்திலும் சரி நாம் அசலான இந்தியாவைப் பார்க்கிறோம். அரசியல் களங்களைக் கதையாகக் கொண்டு அதை சுவாரசியமாக கதை சொல்[illegible]களின் மூலம் படமாக்கியிருக்கும் வானம் பரந்தது.

- குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் செயலினால் பெரிய பதவியை இழந்த பிரமுகர்

உலகின் உச்சாணிக் கொப்பில் வீற்றிருந்தவர் டொமினிக் ஸ்ட்ராஸ் கான் என்ற பிரமுகர்.

ஐ.எம்.எஃப் என்பது இன்ரநஷனல் மொனிட்டரி ஃபண்ட் (சர்வதேச நாணய நிதியம்). அந்த உலக அமைப்பின் தலைவராகக் கடந்த சில நாள்கள் வரை கொடி கட்டிப் பறந்தவர் அவர்.

பதவியும் பவிசும் வந்துவிட்டால் மனிதர்கள் தமது அந்தஸ்துக்கு மீறிய செயல்களில் இறங்கி விடுகிறார்கள் என்பதற்கு இவரே ஓர் உதாரணம்.

நியுயோர்க் நகரில் உள்ள ஹோட்டலில் கெனியாவைச் சேர்ந்த 32 வயது-விதவைப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைதானார். குற்றச்சாட்டை அவர் என்னதான் மறுத்த போதிலும் அதிகாரிகள் விடவில்லை.

நல்லகாலம் அது நடந்தது இலங்கையில் அல்ல அமெரிக்காவில். வன்னியில் நடந்துள்ள மனித வரலாறு காணாத பாலியல் வல்லுறவுகள் பற்றி ஐ.நா.நிபுணர் குழு பந்திபந்தியாக எழுதி எடுத்துக்காட்டியுள்ளது.

ஸ்ட்ராஸ் கான் கடந்த வாரம் சிறைக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார். மான்ஹற்டன்ஹோட்டலில் அவர் மேலும் சில நாள்கள் வைக்கப்பட்டிருப்பார். தரமாக வீடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டும் அவர் அங்கு தொடர்ந்து காவலில் வைக்கப்படுவார். ஜூன் 6ஆம் திகதி அவர் மீண்டும் நீதிமன்றில் நிறுத் தப்படுவார். அப்போது தம் மீதான குற்றச்சாட்டுகளுக்கு அவர் பதிலளிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

விசாரணை சுமார் ஆறு மாதங்கள்வரை நீடிக்கும். அவர் காவலில் வைக்கப்பட்டுள்ள தற்காலிக வீடும் வசதிகளும் தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாதம் 200,000 டொலர் இதற்குச் செலவாகும். அவரே அதனை செலுத்த வேண்டிய வராய் இருப்பார்.

கடந்த வாரம் வரையில் உலகின் மிகப் பலம் வாய்ந்த நிதித்துறைப் பிரமுகராகவிருந்த அவர் அத்தனையையும் இழந்து ஏளனமாகப் பார்க்கப்படும் ஒருவராக மாறி விட்டார். பிரான்ஸ் நாட்டவரான அவர் அந்நாட்டின் அடுத்த ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தார். அதனையும் இப்போது இழந்து விட்டார். சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் பதவியிலிருந்து கடந்த புதன்கிழமை அவர் விலகிக்கொண்டார்.

**கருணாநிதியின் உண்ணாவிரதம்**

இலங்கைத் தமிழர் விடயத்தில் அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி உண்ணாவிரதம் இருப்பதாக நாடகமாடினார் என்று அவரது பேரன் தயாநிதி மாறன் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது. அதனை சென்னை இந்து பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தி தவறானது என்று மாறன் மறுத்திருப்பதாகத் தெரிகிறது.

இது ஒன்றும் புதியதன்று. கருணாநிதி உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்து விட்டு பின்னர் அதற்குச் சாக்குப்போக்குக் கூறிக்கொண்டு வாபஸ் பெற்றுக் கொண்டமை பற்றி அன்றே மக்கள் மத்தியில் கதைகதையாகப் பேசப்பட்டது. கருணாநிதி இன்று மட்டுமல்ல அந்தக் காலத்தில் டால்மியபுரம் பெயர்மாற்றப் போராட்டத்தின் போதும் கூட ரயில் மறிப்புப் போராட்டம் செய்வதாகக் கூறி நாடகமாடினார் என்று கூறுவார்கள். அந்தப் போராட்டத்தில் கவிஞர் கண்ணதாசன், ஈ.வி.கே. சம்பத் முதலியவர்களும் கலந்துகொண்டதாகத் தகவல் உண்டு.

அண்ணா உயிர்வாழ்ந்தபோது மூன்றாவது அல்லது நான்காவது இடத்தில் இருந்து கருணாநிதி அண்ணா மறைவுக்குப் பின்னர் அப்போதைய பொதுச் செயலாளர் நெடுஞ்செழியலை ஒதுக்கி விட்டு முதலிடத்துக்குத் தாவிக் கொண்டார். எம்.ஜி.ஆரின் ஆதரவில் முதல் அமைச்சர் பதவிக்கு வந்தவர் எம்.ஜி. ஆரின் புகழை மங்கச் செய்வதற்கு மு.க. முத்துவுக்கு எம்.ஜி.ஆர். போன்று வேடமிட்டு நடிக்க வைத்தார். விஷயத்தைப் புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர். புதுக்கட்சி ஆரம்பித்து கருணா நிதியை வீழ்த்தினார். ஆனால் மீண்டும் கருணாநிதி கட்சியை வளர்த்து தன்னையும் வளர்த்துக் கொண்டு முன்னேறினார். தமிழையும், தமிழ்க் கலையையும் அரசியலாக்கி அதன் மீது தன்னை கட்டியெழுப்பிக் கொண்ட கருணாநிதியை மீண்டும் பதவியில் அமர்த்தினர்கள் தமிழ் நாட்டு மக்கள்.

ஜெயாவின் ஊழல்களை அம்பலப்படுத்தி வழக்குகள் வைத்து அபகீர்த்தியை ஏற்படுத்திய கருணாநிதி அதே பாணியில் மீண்டும் ஊழல் மலிவதற்குக் காரணமானார். தமது பெயரில் உள்ள ஊடகத்துக்கு கோடிக்கணக்கில் ஊழல் பணம் வந்து சேர்ந்ததில் அவரது மகள் கனிமொழிக்கும் சம்பந்தம் உண்டு என்ற வகையில் அவர் அமுலாக்கல் பிரிவின் விசார ணைக்கு உள்ளாகியுள்ளார்.

இலவச அரிசி, இலவச வர்ண ரி.வி போன்றவைகளால் மகிழ்ச்சியடைந்திருந்த தமிழ் நாட்டு மக்கள் அரசியல் போலித் தனத்தையும் ஊழலையும் விரும்பவில்லை. அதனால் தூக்கி ஏறிந்து விட்டார்கள் கருணாநிதியின் ஆட்சியை.

கருணாநிதி மீண்டும் திட்டமிட்டு

**உலகைச் சுற்றி ஒரு பார்வை**

முன்னேறும் திறமை படைத்தவர்தான். ஆனால் அதற்கு இனி வாய்ப்பிருக்காது. அவருக்கு வயதாகிவிட்டது. மற்றும் கருணாநிதியின் சாணக்கியங்கள் எல்லாம் தீர்ந்து போய்விட்டன. இனி மு.க. ஸ்டாலினின் திறமை எப்படி இருக்குமோ காலம் தான் காட்டவேண்டும்.

**ஒபாமாவின் பூர்விக குடும்ப உறவு**

ஐரோப்பாவில் நான்கு தேச பயணம் ஒன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை டப்லின் (அயர்லாந்து) போய்ச் சேர்ந்த அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தனது பூர்வீக உறவினை அந்நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொண்டார்.

அமெரிக்காவுக்கும் அயர்லாந்துக்குமிடையில் ஒருமைப்பாட்டைப் பிரகடனம் செய்தார். அவரை வரவேற்பதற்காக மக்கள் திரண்டு வந்திருந்தார்கள். டப்லினில் உணர்ச்சி பூர்வமான சொற்பொழிவொன்றை நிகழ்த்திய ஒபாமா, மொனிகால் என்ற சிறுகிராமத்துக்கும் விஜயம் செய்தார். அந்த ஊரில் ஒபாமாவின் பூர்வீக உறவினர் ஒருவர் வாழ்ந்துள்ளார். அவரது தாயாரும் அக்கிராமத்தைச் சேர்ந்தவர்தானாம். பின்னர் அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்தார்கள் அவர்கள்.

டப்ளினில் திரண்டு வந்திருந்த மக்கள் மத்தியில் பேசிய ஒபாமா "என் பெயர் பராக் ஒபாமா, மனிகால் கிராமத்து ஒபாமா குடும்பத்தைச் சேர்ந்தவன்" என்று அறிவித்தார். ஐரிஷ் பிரதம மந்திரி என்டா கென்னி ஒபாவை வரவேற்று அறிமுகப் படுத்துகையில் "அமெரிக்க கனவு வீடு வந்து சேர்ந்துள்ளது" என்று குறிப்பிட்டார். ஒபாமா பிரிட்டன், பிரான்ஸ், போலந்து ஆகிய நாடுகளுக்கும் செல்லவிருக்கிறார்.

**சுற்றுப்பாதை இல்லாத புதிய கிரகங்கள்**

சுற்றுப்பாதை இல்லாத பல கிரகங்கள் பிரபஞ்சத்தில் காணப்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். பால் வெளியில் காணப்படும் இவ்வாறான பல கிரகங்கள் சுற்றுப்பாதையில் நகர்வ தில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். வியாழனைப் போன்று மிகப் பெரியவையான இவை ஒன்றில் மிக நீண்ட சுற்றுப்பாதையைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது சுற்றுப்பாதையே இல்லாமலும் இருக்கக் கூடும் என்கிறார்கள் அவர்கள்.

இவை எவ்வாறு உருவாகின்றன என்பது புரியாமல் இருப்பதாகவும் இவை பெரும் எடுப்பிலான வாயுக்களினால் ஆனவையாக இருக்கலாம் என்கிறார்கள். கிரகங்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதைக் கண்டறிய இவைபற்றிய ஆய்வு உதவியாய் இருக்கும் என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கை.

ரம்யன்

# வருவாய் தரும் வளங்களை அழிவிலிருந்து மீட்போம்

வே.தபேந்திரன்

"முருங்கைக் காயின் விலை குதிரை விலை. மாம்பழங்கள் ஆசை தீரச் சாப்பிடு மளவுக்குக் கிடைப்பதில்லை. மரவள்ளிக் கிழங்கு பணக்கார மரக்கறியாக மாறி விட்டது."

இவை சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் நீங்கள் கேட்ட வாசகங்களாகவோ, அனுபவித்த வாழ்க்கை முறையாகவோ இருக்கும். விவசாயத்துறையில் முருங்கைக்காய், மாம்பழம், மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றின் உற்பத்திகளின் வீழ்ச்சி மிக வேமாகச்செல்கின்றது.

இதனைத் தடுத்து நிறுத்தி உற்பத்திகளின் எழுச்சியை உருவாக்க வேண்டிய பொறுப்பு விவசாயத்துறை மீது சுமத்தப் பட்டுள்ளது.

இந்த உற்பத்திகள் அழிவைச் சந்திக்கும் விதங்களைப் பார்ப்போம். யாழ்ப்பாணத்து முருங்கைக் காய்களின் சுவையே தனிரகமென பேசப்படுகின்றது. தென்பகுதியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும் பிஞ்சு, முற்றல் என்று கணக்கெடுக்காது முண்டியடித்து வாங்கிச் செல்வதையும் காணமுடிகிறது.

எமது மண்ணுக்கே உரிய தனித்துவமான காலநிலைதான் முருங்கைக்காய்க்கு உயர்வான சுவையைச் சேர்த்துள்ளது.

ஆனால் இன்றோ முருங்கைக்காய் ஐநூறு, எண்ணூறு ரூபாவாக விலை எகிறிக் காணப்படுகிறது.

முருங்கைக் காய் பணக்கார மரக்கறியாக மாறியதற்கு மயிர்கொட்டி, ஒழுங்கற்ற



கோடை மழை, சுற்றுலாப் பயணிகளின் கொள்வனவு போன்றன காரணமாகும்.

மயிர்கொட்டிகளின் பெருக்கத்தைத் தாங்கமுடியாமல் பலநூறு காய்களைத் தரவல்ல முருங்கை மரங்கள் உட்பட ஏராளம் மரங்கள் தறிக்கப்பட்டு விட்டன. மீண்டும் முளைக்காதபடி மர அடிகளும் அழிக்கப்பட்டு விட்டன. இது தான் முருங்கைக் காயின் உச்ச விலைக்கு முதற் காரணம்.

வருடத்தில் 4 முறை இவ்விதம் மயிர்கொட்டி பல்கிப்பெருகுவதால் முருங்கை மரங்கள் தான் அவற்றின் வேகமான வளர்ச்சிக்கு இடமளிப்பதால் அவற்றைத் தறித்து அழித்துவிட்டனர்.

இந்த நிலையில் மயிர்கொட்டிகளை அழித்து விடும் முயற்சியில் விவசாயத் துறை அதிகாரிகள் தமது கவனத்தைத் திசைதிருப்ப வேண்டியது அவசியம். இல்லையேல் விலை குறையாது. முருங்கைக்காய் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

யாழ்ப்பாணத்தை இனிப்பாக உச்சரிக்க வைக்கும் வாயூறச் செய்யும் மாம்பழங்களின் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குரங்குகளின் பெருக்கமும் மாமரங்களை இலக்கு வைத்து அவர்களது நகர்வுகளும் இதன் வீழ்ச்சிக்கு ஓர் காரணமாக இருக்கிறது.

இவை மாம்பூக்கள், பிஞ்சுகள் உட்பட அனைத்தையுமே அழித்து வருகின்றன. குரங்குகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டிய தேவையும் இங்கு உள்ளது.

தென்பகுதிசுற்றுலாப் பயணிகளின் வருகையும் மாம்பழங்களின் திடீர் விலை அதிகரிப்புக்குக் காரணமாகிறது.

கட்டட நிர்மாணத் தேவைகளுக்காக மாமரங்கள் தறித்து வீழ்த்தப்படுவதும் அடுப்பெரிப்புத் தேவைக்காக தறிக்கப்படுவதும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

காலநிலை மாறுபாட்டால் மாம்பூக்கள் அழிவதும் இதற்குக் காரணம் தான்.

மரவள்ளித் தோட்டங்கள் பலவற்றில் பன்றிகள் ஊடுருவி கிழங்கைத் தின்று விடுவது உற்பத்திக்குறைவுக்கு மிகப் பெரும் காரணமாக உள்ளது. வன்னியில் மட்டுமன்றித் தற்போது குடாநாட்டு விவசாய நிலங்களையும் பன்றிகள் ஆக்கிரமித்து விட்டன.

இவற்றை இப்படியே விட்டுவிட முடியாது. பெருத்தமான மாற்று வழிகளைத் தேடி விவசாயிகளுக்கு வழங்கவேண்டியது உரிய அதிகாரிகளின் கடமையாக உள்ளது.

"கெயர்" சர்வதேச நிறுவனம் லிஃப்-2 எனும் பெயரில் மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை அமைத்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுவரும் பிரதேச செயலர் பிரிவுகளில் அனர்த்தத்தைக் குறைக்கும் ஒன்றாக பன்றிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. அகிளான் பெருக்கத்தால் மரவள்ளிக் கிழங்குகள் அழிவதும் உற்பத்தியைக் குறைக்கும் விடயமாகும்.

அகிளான்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதும் முற்றுமுழுதாக அவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிவதில்லை.

அகிளான்கள் ஓசைபடாமல் மரவள்ளிக் கிழங்குகள் முழுவதையும் ஏப்பமிடுவதாலும் உற்பத்திகள் குறைகின்றன.

எமது பாரம்பரிய விசாயத்துறைக்கு உயிர்ப்பூட்டி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உரிய அதிகாரிகளின் நட வடிக்கை தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிறுவனமான BCMS சர்வதேச கல்லூரியின் வடமாகாணத்திற்கான நம்பிக்கையும் நன்மதிப்பும் துறைசார் அநுபவத்திறனுமுடைய Public Relations Officers (PRO) - for Study in UK. தேவை.

சம்பளம் **Rs.50,000/=** க்கு மேல்

**Call: 075 682 7 682, 0771 128 428**

BCMS British College of Management and Sciences

British College of Management and Sciences
BCMS City Campus - 291/2, Gall Road, Wellawatta, Colombo - 06
Email - bcmsl@ymail.com Web - www.bcms.sl.lk
TP - 011 318 3 318
BCMS Northern Campus - 466/9, Muthuthambi Lane, Navalar Road, Jaffna.

## கண்ணீர் அஞ்சலி



கைதடி சமுர்த்தி வங்கியின் சமுர்த்தி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
திருமதி சாந்தினிதேவியின் பாசமிகு தந்தை
**குமாரவேலு காசிப்பிள்ளை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி வங்கி, கைதடி. முகாமையாளரும் சக உத்தியோகத்தர்களும்.

## மரண அறிவித்தல்

### செல்வி இராசதுரை இராசமலர்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி)



அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி யைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை இராசமலர் (27.05.2011) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராசதுரை-இராசமணி தம்பதியரின் அன்பு மகளும் இராசவேல், இராசபூபதி, இராசசிங்கநாயகம் ஆகியோரின் சகோதரியும் செல்வநேசா, தனலட்சுமி, பவானி ஆகியோரின் மைத்துனியும் துஷாந்தன் (யா/இந்துக் கல்லூரி மாணவன்), டர்சி (யா/வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.05.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (4652) இராசசிங்கநாயகம் (சகோதரன்)

## நீர் இறைக்கும் இயந்திர தொழில் நிபுணர்

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்ட நீர் இறைக்கும் இயந்திர தொழில் நிபுணர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.



- 2 தொடக்கம் 3 வருட தொழில் அனுபவம்
- தொழிற்பயிற்சிப் பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பது மேலதிகத் தகைமையாகும்.

நீங்கள் மோட்டார் சைக்கிளுடன் கையடக்கத் தொலைபேசியையும் வைத்திருப்பது கட்டாயமாகும்.

கடமைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் போது குறித்த பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வாரநாட்களில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு தம்மிடமுள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதியுடன் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு வருகைதரவும்.

*மனித வள பிரிவு
வரையறுக்கப்பட்ட த டிரேட்ஸ்மேன் எஸ் எல் (தனியார்) நிறுவனம்
இல.40, பொறுப்பன பெரி வீதி, இரத்மலானை
தொலைபேசி 011 5565637
hrd@tradesmann.com

The TRADESMANN 1956

## Van விற்பனைக்கு

253 XXXX(கூட்டுத்தொகை, அதிர்ஷ்ட இல: 03) உடைய Dolphin Dual A/C, Adjustable Full Seat, நிறம் வெள்ளை, Short Model, Aloy Wheel. விலை ரூபா 28 லட்சம். தொடர்பு-0757163326

## வீடு விற்பனைக்கு

யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில் இருபாலைச் சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 2½பரப்பு7½ குளியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:- 0712124021

## காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி, கரடிப்போக்கு
ஏ9 வீதியிலிருந்து 500 யார்
தொலைவில் 15 ஏக்கர் நெல் வயல்
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 6847

## பொதுக்கூட்டம்

காங்கேசன்துறை ஊறணி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறுமென சங்கத்தின் தலைவர் அ.பிலிப் லியோனாட் அறிவித்துள்ளார். இளவாலை சீந்திப் பந்தல் முகாமில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஊறணி புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவை ஊறணிக்குச் சென்று கொண்டாடுதல், ஊறணிக் கிராமத்தில் குடியேறுதல் தொடர்பான முக்கிய பல முடிவுகள் எடுக்கப்படவிருப்பதால் ஊறணிக் கிராம அனைத்து மக்களையும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ம-555)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி இராசமலர் இராசதுரை



எமது நிறுவன வளர்ச்சிக்கும் ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களின் வளர்ச்சிக்கும் அச்சு வேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்கும் நீண்டகாலமாக அயராது உழைத்த செல்வி.இராமசமலர் இராசதுரை அவர்களின் அகால மரணச் செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரும் அடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஏனையவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை-யாழ்ப்பாணம்
உரிமையாளர்கள், ஊழியர்கள்.
லங்கா புத்தகசாலை (தனியார்)வரையறுக்கப்பட்டது- கொழும்பு.
பணிப்பாளர்கள், ஊழியர்கள்.

## நீங்கள் கணினி கல்வி நிறுவனமொன்றை நடத்துபவரா?

**CSS COMPUTER EDUCATION - INDIA**
நிறுவனத்தின் அங்கீகாரம் பெறுவதன் மூலம் உங்கள் நிறுவனத்தையும் பிரதேசத்தில் முன்னணி நிறுவனமாக உயர்த்துவதற்கான அரிய சந்தர்ப்பம்.

ISO 9001 : 2008 இணை அங்கீகாரம், விளம்பரங்கள், ஆசிரியர் பயிற்சி, சர்வதேச சான்றிதழ்கள் போன்றவற்றை வழங்கி உங்கள் வருமானம் மென்மேலும் அதிகரிக்க உதவுவோம்.

**ஒரு பிரதேசத்திற்கு ஒரேயொரு அங்கீகாரம் மட்டுமே வழங்கப்படவிருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் உடன் பதிவு செய்யவும்.**

விபரங்களுக்கு **0755 123111** www.isscs.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் மருத்துவமும்



அமிழ்திலும் இனிய முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழ், தொல்காப்பியர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வளர்ச்சியடைந்த நுட்பமான கலையாக விளங்கியது. பழந்தமிழ் மக்கள் எவ்வாறு தங்கள் வாழ்க்கையோடு, பண்பாட்டோடு, வழிபடும் தெய்வத்தோடு இசையையும் (யாழ்) தாளத்தையும் (பறை) கருப்பொருளாக அமைத்துக்கொண்டிருந்தனர் என்பதுடன் அவர்கள் எழுத்துக்களுக்கும் இசைக்கும் இடையேயுள்ள உறவை உணரும் நுட்பமான அறிவையும் பெற்றிருந்தனர்.

ஒலி வடிவமான இறைவன் படைத்த உலகம் ஒலி மயமாகவே விளங்குகிறது. இந்த ஒலியிலிருந்து சொற்களும் இசையும் பிறந்தன. கவின் கலைகளில் மிகவும் சிறந்ததான இசை, நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குணமளித்து, அனைவருக்கும் மன அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்க வல்லது.

இறைவன் ஒலி வடிவமாக விளங்குகிறான் என இறையடியார்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். ஆதியிலே வார்த்தை (ஒலி) இருந்தது. அந்த வார்த்தை இறைவனாக இருந்தது. ஒலி வடிவான இறைவனே இவ்வுலகிலுள்ள அனைத்தையும் படைத்தவன் என புனித யோவான் கூறியுள்ளதை விவிலிய நூலில் காணலாம்.

இறைவன் ஒலி வடிவாக இருக்கிறான் என்பதை அப்பரடிகள் ''ஓசையொலியெலாம் ஆனாய் நீயே, உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே'' என்று குறிப்பிட்டுள்ளார். இறைவன் ''ஏழ் இசையாய் இசைப் பயனாய்'' விளங்கி அருள் பாலிக்கிறான் எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார்.

'ஓம்' என்ற பிரணவ மந்திரம் அகிலத்தின் இயக்கத்தினைக் கட்டுப்படுத்தும் அதிர்வினைப் பற்றிக் கூறுகின்றது. இதனையே சிவநடனமும் எடுத்தியம்புகிறது.

இயற்கை தரும் இன்னொலிகளைக் கேட்டு மனிதன் சிந்திக்கிறான். இதுபோன்ற இன்னொலிகளைக் கருவிகளில் இசைப்பதற்கு அவன் முயன்றான் என எண்ணுவதற்குப் பழங்காலத்தைச் சேர்ந்த சங்கப் பாடல்கள் ஆதாரங்களாக விளங்குகின்றன. மூங்கிலில் வண்டுகள் துளையிட்டு அந்தத் துளைகளில் காற்றுப் புகுந்து வெளியேறும்போது இனிய ஒலி பிறந்தது. அருவி நீரின் இனிய ஓசை முழவு (முரசு) போல ஒலித்தது. வண்டின் இமிரொலி யாழின் இசையைப் போல் ரீங்காரம் செய்தது. தன் அறிவின் திறத்தால் மனிதன் பல இசைக்கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கு மேற்கூறிய இயற்கை தந்த இன்னொலிகள் முன்னோடிகளாக விளங்கின எனக் கவிஞர் ஊகிக்கிறார்.

*''ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கன்*
*கோடை யல்வரி குழலிசையாக*
*பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்*
*தோடமை முழவின் துதை குரலாகக்*
*கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தும்பொடு*
*மலைப்பூஞ்சாரல் வண்டியாழாக''*

இயற்கையின் இன்னொலிகளைச் செயற்கை இசைக்கருவிகளின் இசையொலிக்கு உவமித்து இந்த இருவித ஒலிகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைப் பரிபாடல் ஒன்று வழங்கியிருக்கிறது.

திருப்பரங்குன்றத்தில் பாணர்கள் இசைக்கும் இனிய யாழினது இசை ஒரு பக்கத்தில் ஒலித்தது. மறுபக்கத்தில் திருப்பரங்குன்ற மலையில் பூத்துள்ள பூக்களில் உள்ள தேனை உண்பதற்காக வந்த வண்டுகளில் இமிரிசை எழுந்தது. ஒரு பக்கத்தில் கணுக்களையுடைய புல்லாங்குழலின் இனிய இசை காற்றில் மிதந்து வந்தது. மறுபக்கத்தில் தும்பிகள் அசைந்த பரந்த இசை ஒலித்தது.

மண்ணினால் செய்யப்பட்ட மார்ச்சனை ஒரு பக்கத்தில் அமைக்கப்பெற்ற முழவு ஒருபுறம் முழங்கியது. மற்றொரு புறத்தில் மலையினின்று விழும் அருவி நீர் ஒலித்தது. இசையில் தேர்ச்சி பெற்ற கூத்தியர் ஒருபுறம் ஆட, மறுபுறம் வாடைக்காற்று வீசுதலால் பூங்கொடிகள் அசைந்தாடின. ஒரு புறம் பாடினி பாலைப்பண் என்னும் இனிய பண்ணைப் பாட, மறுபுறத்தில் தோகையை விரித்து ஆடும் மயிலின் குரல் எழுந்தது.

இவ்வாறு திருப்பரங்குன்றத்தில் ஒலித்த இயற்கை இன்னொலிகளுக்கு உவமையாக யாழ், குழல், முழவு, கண்டப்பாடல் ஆகியவற்றின் இசையொலிகளைப் பாடலாசிரியர் நயமுறக் கூறியுள்ளார்

*''ஒரு திறம் பாணர் யாழின் தீங்குரல் எழ*
*ஒரு திறம் பாணர் வண்டின் இமிரிசை எழ*
*ஒரு திறம் கண்ணார் குழலின் கரைபு எழ*
*ஒரு திறம் பண்ணார் தும்பி பரந்திசை ஊத*
*ஒரு திறம் மண்ணார் முழவின் இசை எழ*
*ஒரு திறம் அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப*
*ஒரு திறம் பாடல் நல்விறலியர் ஒல்குபு நுடங்க*
*ஒரு திறம் வாடை உளவயின் பூங்கொடி நுடங்க*
*ஒரு திறம் பாடினி முரலும் பாலையங் குரலின்*
*நீடு கிளர் கிழமை நிறைகுறை தோன்ற*
*ஒரு திறம் ஆடு சீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற*
*மாறு மாறு உற்றனபோல் மாறெதிர் கோடல்*
*மாறட்டான் குன்றம் உடைத்து''*

ஆதியிலே மனிதன் தன் உள்ளத்தில் எழுந்த கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த பல்வேறு ஒலிகளைப் பிறப்பித்தான். பல்வேறு சைகைகளும் இதற்குப் பயன்பட்டன. இதன் பின்பு இந்த ஒலிகளிலிருந்து படிப்படியாகச் சொற்கள் பிறந்தன. முதன் முதலில் மனிதன் இந்தச் சொற்களைப் பேசிச் சிரித்து மகிழ்ந்தான். சொற்களைக் கொண்டு அழுது புலம்பினான். குயிலின் இசை, வண்டுகளின் ரீங்காரம் ஆகியவற்றைக் கேட்ட ஆதி மனிதன் சிந்திக்கத் தொடங்கினான்.

அன்றும் இன்றும் நம் நாட்டில் பெரும்பாலானோர் விவசாய மக்கள். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட மனிதன் தான் செய்யும் தொழிலுடனே நாட்டுப் பாடலை இணைத்துக் கொண்டான். வயலில் உழவு செய்யும்போது பாட்டு, மாடு மேய்க்கும் போது புல்லாங்குழல் இசை, நடவோடு பெண்களின் நாட்டுப்பாடல், அறுவடையில் பாட்டு, குருவிகளை விரட்டும்போது ஆலோலப்பாட்டு, வயலில் களையெடுப்பில் பாட்டு, பரம்படிக்கும்போது பாட்டு, ஏற்றம் இறைக்கும் போதும், கதிர் அறுக்கும் போதும் தமிழன் தன் அலுப்பை மாற்றி மறக்கச் செய்ய நாட்டுப் பாடல்களைப் பாடினான்.

கிராமத்தில் வாழும் அவனுக்கு வாழ்க்கையில் [illegible]ங்கள், இன்னல்கள் ஏற்பட்டன. இந்த முடிவில்லாத துன்பங்களை அவன் இனிய எளிய பாடல்களில் வெளியிட்டான். வாழ்விழந்த பெண் தனக்கு உண்டான ஆற்றொணாத துன்பத்தை ஒப்பாரியில் காட்டினாள். இந்த ஒப்பாரிப்பாடல்களில் உணர்ச்சி பொங்கி வழிந்தது. அவைகளிலுள்ள உருவக உவமைகள் அவைக ளைக் கேட்போரின் நெஞ்சைத் தொட்டன.

சாலையில் வண்டியோட்டிச் செல்லும் போது அவன் உற்சாகத்துடன் தன் உள்ளத்தில் எழுந்த இன்ப உணர்ச்சிகளையும் காதல் உணர்வுகளையும் (தென்பாங்கு) தெம்மாங்குப் பாடலில் பொதிந்து வைத்தான்.

தமிழனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இசை பயன்படும் வகையில் அமைந்துள்ளது. குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாய் ஒரு தாலாட்டுப்பாட்டுப் பாடிய உடனேயே குழந்தை அயர்ந்து தூங்கி விடுகிறது. பல்வேறு தொழில்களில் ஈடுபடும் போது இசை ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

திருமணத்தின்போது நாகசுர இசை, தவில், நலுங்குப்பாடல், லாலிப்பாடல் ஆகியவை இசைக்கப்படுகின்றன. பூப்பெய்தும் சடங்கின் போதும் பாடல்கள் பாடப்படுகின்றன. கோயிலின் அன்றாடப் பூசைகளிலும், திருவிழாக்களிலும் பக்திப்பாடல்கள் இன்னிசையுடன் அடியார்களால் பாடப்பெறுகின்றன. நாகசுர இன்னொலி எங்கும் நிறைந்து நிற்கிறது. இறப்பின் போது ஒப்பாரிப்பாடல் ஒலிக்கின்றது. இவ்வாறு தமிழன் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் இசை ஓர் இன்றியமையாத அங்கமாக, கலையாக விளங்குகின்றது.

நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வேதனையால் அல்லல்படும் போது அந்த வேதனையை மறக்கச் செய்ய இசை மிகவும் பயன்படுகிறது. மன வியாதியுள்ளவர்கள், உணர்ச்சிவசப்பட்டுப் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கும் இசை மன அமைதியைத் தருகிறது. படிப்படியாக இத்தகைய நோய்களையும் இசை குணமாக்குகிறது.

**டாக்டர் சி.யமுனானந்தா**

மது அருந்துதல், போதை தரும் பொருள்கள் பயன்படுத்துதல் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமைப்பட்டவர்களையும் படிப்படியாகத் திருத்துவதற்கு இசை மருத்துவம் பயன்படுகிறது.

இளம் பிள்ளைகளின் மத்தியில் ஏற்படும் உளத் தாக்கங்களை மாற்றவும், தீயவழிகளில் செல்லும் இளைஞர்களைச் சீர்திருத்தவும் இசை மருத்துவம் பயன்படுகிறது. உயர்குருதி அமுக்கம், தொய்வு நோய், மனச்சோர்வு ஏற்படாது இருப்பதற்கு இசை உதவும்.

கருவில் இருந்து ஐந்து வயது வரை இசையினைக் குழந்தை கிரகித்தால் சிறந்த அறிவாற்றல் உள்ளவர்களாக அக்குழந்தைகள் உருவாக முடியும். முன்பள்ளிகளிலும் ஆரம்பக் கல்வியிலும் இசை மூலமும், அபிநய மூலமும் அறிவினை இலகுவாகப் புகுந்த முடியும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மனவடுக்களில் இருந்து மீட்க சமூகக் கட்டமைப்பில் இசை வளர்க்கப்படல் வேண்டும். இது வெறுமனே விளம்பர நிகழ்ச்சிகளால் அல்ல. மாறாகத் தினமும் இல்லங்களில் இசை பயிலப்படல் வேண்டும்.

நல்ல தூக்கமில்லாமல் தவிப்பவர்கள் நீலாம்பரி இராகத்தைச் சிறிது நேரம் கேட்டால் தூக்கம் தானாகவே வந்துவிடும். உணர்ச்சியினால் உந்தப்பட்டு மன அமைதி இழந்தவர்கள் சாமா இராகத்தைக் கேட்டால் படிப்படியாகக் குணமடைவார்கள் என்றும், முடக்கு வாதத்தினால் அல்லல்படுவோர் துஜவாந்தி இராகத்தைக் கேட்பதன் மூலம் நல்ல பயனடைவார்கள்.

பூபாள இராகமும் மலையமாருதம் இராகமும் உதய கால இராகங்களாகும். இவை மக்களைத் தூக்கத்தினின்று விழித்தெழச்செய்கின்றன. உற்சாகமற்ற நிலையில் உள்ளவர்கள் பிலகரி போன்ற இராகங்களைக் கேட்பதன் மூலம் புதிய உற்சாகமும் நம்பிக்கையும் பெறுகின்றனர். இதய நோயுள்ளவர்களும் இனிய இசையைக்கேட்பதன் மூலம் படிப்படியாகக் குணமடைகிறார்கள். தீயவழிகளில் சென்று குற்றம் புரிவோர் நாதநாமக்கிரியா இராகத்தினையும் அதில் அமைந்துள்ள கீர்த்தனைகளையும் கேட்டால் அவர்கள் தீய வழியைவிட்டு விலகிச் சீர்திருந்திய வாழ்க்கையை நடத்த வழியுண்டு.

இவ்வாறாக நவீன விஞ்ஞான தொழிநுட்ப உலகிலும் மருத்துவத்துறையில் இசை தனக்கென முக்கிய இடத்தினை வகிக்கின்றது. தமிழ் இசை அதன் சுயத்தினை இழக்காது மணம் கமிழ, எமது இளம் சந்ததியினர் அதனை முறையாகப் பயின்று அன்றாட வாழ்வில் இணைத்துக் கொள்ளல் வேண்டும்.

முதற் சங்க காலத்தில் தமிழ் அழிந்தபோது எஞ்சிய ஒரே இலக்கியம் தொல்காப்பியம். அதிலிருந்து இன்று வரை தமிழ் இசை மிகவும் சிறப்பாக எமது மூதாதையினரால் பேணப்பட்டது. அதனை தற்போதைய சூழலில் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது எமது கடமைக் கடமை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 29.05.2011 முதல் 04.06.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் மேம்படும். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகிவிடும். பணவரவுகளைப் பெறலாம். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பிள்ளைகளால் உருவான கவலைகள் தீரும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் பெறலாம். குழந்தைப்பேறு எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். எந்த விடயத்திலும் புத்திசாலித்தனமாக செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிணக்குகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். தேக ஆரோக்கிய தெம்பு, உற்சாகம் தரும். மற்றவர்கள் மதிக்கும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்வீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். தந்தையுடன் சச்சரவு உண்டாகலாம்.

### இடபம்

விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்ய நேரிடலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். நினைத்தபடி சில விடயங்கள் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். தம்பதியர் இடையே பாசம் மேலிடும். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வேலைப்பளு அதிகரிக்கும். பணம் வந்த வேகத்தில் கரைந்து கொண்டிருக்கும். ஒரு செலவை எப்படி சரி செய்யலாம் என, யோசித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் மற்றொரு செலவு வந்து உங்களுக்குக் கவலையை உண்டாக்கலாம். நீண்ட தூரப்பயணங்கள் செல்ல நேரிடலாம். உடல் உபாதைகளாலும் அடிக்கடி பிரச்சினைகளைச் சந்திக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல்கள் கூடும். பெரிய அளவில் திட்டமிட்ட காரியங்கள் எல்லாம் நடக்காமல் போகலாம். அவமானங்களையும் சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். சகோதரர்கள், பங்காளிகள், மாமன், மைத்துனர்கள், உறவுப் பெண்கள், சகோதரிகள் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.

### மிதுனம்

மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட காரியங்களை செய்ய முடியாமல் தடை, தாமதங்கள் போன்றவற்றைச் சந்திக்கலாம். சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். பேராசைகளால் பிரச்சினைகள் உருவாகலாம். வேலைப்பளு கூடும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வேலையாகவோ வெளியூர் பயணம் செல்லலாம். உங்களுக்கு வேண்டியவர்களுக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். பக்தி நாட்டம் அதிகரிக்கும். பணம் வரும் வழிகள் அதிகரிக்கும். தொழில் ரீதியாக முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு, சம்பள உயர்வை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். வளர்ந்த பிள்ளைகள் பொறுப்போடு நடந்து பெருமை சேர்ப்பர். நெடுநாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதி வரலாம். எதிர்பார்த்த கடனு தவி கிடைக்கும். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைத்தல், வெளிவட்டாரத் தொடர்புகளில் புதியவர்களின் அறிமுகம் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். .

### கடகம்

பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். வேலைகள் தடங்கல் இல்லாமல் சுல பமாக முடிவுக்கு வரும். மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். பயணங்களில் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். மறதியால் அவதியுண்டு. பிள்ளைகள் தொடர்பான வகையில் செலவுகள் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். பணிபுரிவோர் விருப்பத்தகாத இடமாற்றம், வீடு மாற்றம் போன்றவற்றைச் சந்திக்கலாம். வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் அனைத்தை யும் நீங்களே செய்வது நன்மை தரும். இல்லையெனில், வீண் பழிகள், விமர்சனங்களுக்கு ஆளாகலாம். மாற்று மதத்தினர், மாற்று மொழி பேசுவோர் மூலம் சில காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். மூத்த சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். தகப்பனார், அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு.

### சிங்கம்

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சி நடக்கலாம். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். புத்திசாலித்தனமாக செயற்பட்டு மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். எடுத்த காரியங்கள் தங்கு தடையின்றி வெற்றிகரமாக முடிவுக்கு வரும். நீண்ட நாள்களாக சந்திக்காத நண்பர்கள் சிலரைச் சந்திக்கலாம். அவசியத் தேவைகளுக்காக பொன், பொருள்களை அடகு வைத்து கடன் பெறலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். நீண்ட நாள்களாகத் தள்ளிவைத்த கோயில் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சேமித்த பணம் கணிசமாககைக்கு கிடைத்து புதிய வகையில் முதலீடு செய்வீர்கள். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்கலாம். எந்த வேலையும் தடங்கலின்றி சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஏதோ ஒரு காரியமாக அங்கும், இங்கும் அல்லாட வேண்டிய நிலைமையும் உருவாகும்.

### கன்னி

பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம். தொழில் ரீதியான சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். பணம் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். அவசரப்பட்டு எந்தக் காரியத்திலும் இறங்குவதையும், முதலீடு செய்வதையும் தவிர்க்க வேண்டும். கைமாத்தாகக் கொடுத்த பணம் வராமல் இழுத்தடிக்கலாம். வாகனங்களில் செல்லும் போது கவனம் அவசியம். நீங்கள் சரியாகச் சென் றாலும், மற்றவர்களால் பிரச்சினை உருவாகலாம். சகோதரர்கள், பங்காளிகளுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். பணிபுரிவோர், நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம்.

### துலாம்

ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். உங்களுக்கு வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்துப் பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்து விட்டுத் தேடலாம். பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். சொந்தபந்தங்கள், நண்பர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை மேம்படும். பலரும் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்வீர்கள். தொழில் முடக்க நிலைமை நீங்கி முன்னேற்றம் காணப்படும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணலாம். கணவன், மனைவி உறவில் அவ்வப்போது சிறு, சிறு சச்சரவுகள் உருவாகும். வாகனங்கள் திடீரென செலவு வைக்கலாம். சந்தோசமமான செயற்பாடுகளால் அதிகமாகச் செலவழித்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம்.

### விருச்சிகம்

பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். சுகமான இனிய அனுபவங்களைப் பெறலாம். நீண்ட நாள்களாகத் தள்ளிக் கொண்டே வந்த காரியங்கள் சுலபமாக முடியலாம். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவம் உண்டு. வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக் கலாம். உறவினர்கள் சிலரால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். கடன் மிகுதி ஒன்றைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். கடன் பிரச்சினைகளால் கவலை உண்டாகும். நோய் உபாதைகளாலும் மருத்துவ செலவுகளுக்கு ஆள்படலாம். சிலரிடம் கைமாத்தாகப் பெற்ற பணத்தைக் கொடுக்க முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கலாம். உடல் ரீதியான உபாதைகளாலும், உங்களின் உற்சாகம் குறையலாம். மற்றவர்களை நம்பி இறங்கும் காரியங்கள் வம்பில் மாட்டி விடலாம் என்பதால், எதிலும் எச்சரிக்கை அவசியம். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

### தனுசு

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வழக்கமாகச் செய்யும் வேலைகளைச் செய்ய முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். குடும்பத்தினரின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். ஊக்கம், உற்சாகமா கவும், பரபரப்பாகவும் செயற் படுவீர்கள். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கலாம். இனிய அனுபவம் பெறலாம். வேலை நெருக்கடிகள் தொடரும். நீங்கள் நல்லவர், அற்புதமாக வேலை செய்வீர்கள் எனக் கூறியே, மற்றவர்கள் உங்கள் தலையில் வேலைகளை சுமத்தி விடுவர். சிலர் புதிய சூழ் நிலையில் பணியாற்ற வேண்டிய கட்டாயம் உருவாகலாம். பிள்ளைகளின் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். கடந்த காலத்தில் வராமல் இழுத்தடித்த பணவரவுகள் எல்லாம் வரலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. புதிதாகத் தொழில் ஆரம்பிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம்.

### மகரம்

ஓய்வின்றி ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். எதிர்பாராத வகையில் சில காரியங்கள் முடிவடைவதால், மனதில் சந்தோஷம், மகிழ்ச்சி அதிக ரிக்கும். பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். சில பிரச்சினைகளை நினைத்து அதிக கவலை கொள்வீர்கள். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் அடிக்கடி அல்லாடலாம். மாற்று மதத்தினர் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். அரசு தொடர்பான காரியங்கள் எளிதில் முடியாமல் இழுத் தடிக்கலாம். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் அதிகரிக்கும். சர்ச்சைக்குரிய பேச்சைத் தவிர்க்க வேண்டும். தொழில் ரீதியான முன்னேற்றம் உண்டு. நீண்ட தூரப் பயண்ங்கள் செல்லும் வாய்ப்பும் உருவாகும். சிலர் விரும்பிய இடமாற்றங்களைச் சந்திக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள், கேளிக்கை, கொண்டாட்டங்கள், உறவினர்கள் சந்திப்பு போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.

### கும்பம்


எதிர்பாராத செலவுகளால் பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். பல நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். மனதில் இனம் புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களைப் பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், சகோதரர்கள், பங்காளிகள் சந்திப்பு, அவர்கள் வகையில் எதிர்பாராத உதவி கிடைத்தல் போன்ற நல்ல பலன்களைக் காண லாம். தோட்டத் தொழிலில் உள்ளோருக்கு வருமானம் அதிகரிக்கும். பல நாள்களாக விற்க முயன்ற சொத்துக்களை விற்கலாம். பணப்பிரச்சினைகள் அதிகரிக்கும். தொழில் ரீதியான விடயங்களில் முள்ளாய் குத்தும், மனதை நோகடிக்கும் விடயங்கள் அடிக்கடி நடக்கலாம். வேலையாள்களாலும் தொல்லைகள் உருவாகும். வியாபாரிகள் எதிலும் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும்.

### மீனம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சில பிரச்சினைகளை நினைத்து மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் கோபதாபங்கள் ஏற்படலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். ஆறுதலான அனுபவங்களைச் சந்திக்கலாம். தேவையான பணத்தை எந்த வகையிலாவது புரட்டிக் கொள்வீர்கள். கொடுக்கல் வாங்கல்களை சிரமமின்றிச் சமாளிக்க முடியும். பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீண்ட நாள்களாக சேமித்த பணம் ஒன்று கைக்கு கிடைக்கும். பெரிய மனிதர் ஒருவர் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார். சுபகாரிய விடயங்களிலும் முன்னேற்றம் உண்டு. குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள், ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள் நீங்கள் கேட்கா மலேயே சில உதவிகளைச் செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் புனைவுகளும் காலூன்றும் பெருமிதமும்



ஒருமுறை தேவநம்பியதீசன் வேட்டைக்குச் சென்றிருந்தான். நீண்டநேரமாக அலைந்து திரிந்தும் எந்தவொரு மிருகமும் அவன் கண்களில் தென்படவேயில்லை. களைத்துப் போன தேவநம்பியதீசன் தன் பரிவாரங்களை விட்டு நடுக்காட்டுக்கு வந்துவிட்டான். அப்போது அவன் முன்னால் துள்ளியோடியது ஒரு அழகிய மான். மானைத் துரத்தத் தொடங்கிய தீசன், இன்னும் நீண்டதொலைவு காட்டுக்குள் வந்துவிட்டான். திடீரென மான் மறைந்து, அந்த இடத்தில் ஒரு மாமரம் தோன்றியது. அது மறைந்த இடத்துக்கு அருகில் உள்ள குன்றில் மஹிந்த தேரரை தேவநம்பியதீசன் காண நேர்ந்தது. அவர் அசோகச் சக்கரவர்த்தியின் உத்தரவின் பேரில் பௌத்த மதக் கருத்துக்களை தேவநம்பிய தீசனுக்குப் போதித்தார். அவன் பௌத்த மதத்தைத் தழுவினான். அன்று முதல் இலங்கையில் புத்தரின் போதனைகளால் உருவான பௌத்த மதம் தழைக்கத் தொடங்கியது. தேவநம்பிய தீசனுக்கு மான் வடிவில் புத்தபெருமானே மஹிந்தரின் இடத்தைக் காட்டினார். அவ்வாறு புத்தர் மானாகத் தோன்றிய இடமே மான்குளம். இப்போது மாங்குளம் என மருவிவிட்டது.

- என்ன தலை சுற்றுகிறதா? மான்கள் அதிகமாக இருந்ததால் அல்லவா மாங்குளம் என்ற பெயர் வந்தது. (அதிகளவான மாமரங்கள் இங்கு இருந்ததாலும் இப்பெயர் வந்ததாகச் சொல்வதுண்டு.) அப்படியிருக்கையில் இதென்ன புதுக்கதை? மானாகப் புத்தரும், அவரின் போதனைகளோடு மஹிந்த தேரரும் இங்கே எப்போது வந்தார்கள்? எனப் பூர்வீகமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எண்ணக்கூடும். இனி எழுதப் படப்போகும் புதிய மகாவம்சத்தில்.

இவ்வாறுதான் இதுவரை இல்லாத கிளைக்கதை ஆதாரங்களோடு வரலாறு புனையப்படப்போகிறது. மாங்கன்றுகள் சூழ்ந்துள்ள இடமொன்றில் புதிதாக முளைத்து வரும் பௌத்த விகாரையைக் காணும் போதெல்லாம் வரலாறு இப்படித்தான் புனையப்படப் போகின்றது என்ற எண்ணம் எல்லோருக்கும் வரவே செய்யும். இப்போது விகாரைகள் மட்டுமல்லாது பௌத்த மதம் சார்ந்த அமைப்புகளை உருவாக்குவதிலும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர் பெருமதத்தினர்.

தமிழ்பௌத்த சங்கம், யாழ். பல்கலைக்கழக பௌத்த மாணவர் சங்கம்(இது இன்னும் உத்தியோக பூர்வமாகச் செயற்படா விட்டாலும், இந்த வருடம் வெசாக் பண்டிகைக் கொண்டாட்டங்களில் இந்த அமைப்பு ஈடுபட்டது) என்பவற்றின் வரிசையில் இப்போது புதிதாகப் பிறந்துள்ளது இந்து-பௌத்த கலாசாரப் பேரவை.

கடந்த திங்கட்கிழமை கந்தர்மடத்தில் இப்பேரவையின் அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது. அதன் பின்னர், வந்தவர்கள் எல்லாம் யாழ்.நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். எத்தனையோ கலாசார மண்டபங்கள் இருக்கக் கூடிய வகையில் கலாசார மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட அமைப்பொன்றின் கருத்தாடல் நிகழ்வு தனியார் விடுதியில் நடைபெறும் முரண்நகை இங்கு நிகழ்ந்தேறியது. இது குறித்த அமைப்பின் வியாபார உள் நோக்கங்களையே வெளிப்படுத்துவதாக அமைந்தது. கருத்தாடல் நிகழ்வில் இந்து மதம் மீதும், யாழ்ப்பாண மக்கள் மீதும் பாசமழை பொழிந்தார் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்ன தேரர் . இத்தனைக்கும் கடும் பௌத்த சிந்தனைப் போக்காளர் அவர். நாடாளுமன்ற உறுப்பினரான அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜாதிக ஹெல உறுமய தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களையே எப்போதும் வெளியிட்டு வருகின்ற ஓர் அமைப்பு. இந்த நிலையில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் பௌத்த சங்கத்துக்கு இந்த அத்துரலியரத்ன தேரரே தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

கருத்துரை வழங்கிய பௌத்த மதம் சார்ந்தவர்களின் குரல்களில் ஒருவித வெற்றியின் சாயல் படர்ந்திருக்க, இந்து மதம் சார்ந்தவர்களின் குரல்களில் ஒருவித சந்தேகமும், பயமும் ஒட்டியிருந்ததை எல்லோரும் அவதானித்தனர்.

யாழ்ப்பாணத்துக்குப் பெருந்தொகையான புத்தர் சிலைகள் எடுத்துவரப்படுகின்ற செயலால் இங்குள்ள தமிழ் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இவ்வாறு சிலைகள் எடுத்து வரப்படுவதன் உள்நோக்கம் யாழ்ப்பாணத்தை எதிர்காலத்தில் பௌத்தமயமாக்குவதற்கான முயற்சியாக இருக்குமோ என்ற எண்ணமே அவர்களின் இந்த அச்சத்துக்குக் காரணம். அகில இலங்கை இந்துமதக் குருமார் ஒன்றியத் தலைவரான ஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் யாழ். மக்களின் அடிமனதில் இருக்கும் அச்சத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் போட்டுடைக்கத் தவறவில்லை. ஆனால் இது குறித்து மறந்துங்கூட மூச்சுக் காட்டாமல் நைசாகக் கழன்றுவிட்டார்கள் பேரவை அமைப்பாளர்கள். இதற்குப் பதில் சொன்னால் அது பௌத்தத்தின் பெயரால் இங்கு நடைபெறும் எல்லாத் திரைமறைவு வேலைகளையும் காட்டிக் கொடுத்துவிடும் என்பது வந்தவர்களுக்குத் தெரியும்.

கருத்துரையின் நிறைவில் ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் கேட்கலாம் எனக் கூறப்பட்டதை நம்பி, யாழ். பல் கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் ஒருவர் ஏன் இந்து-பௌத்த கலா சாரப் பேரவை என்று தனியே அமைக்க வேண்டும். இதில் இஸ்லாம் கலாசாரங்களை சேர்க்காமல் விடுவது தவறல்லவா? என்ற நியாயமான கேள்வியைக் கேட்டார். அவ்வளவுதான் தாமதம். இந்தக் கேள்விக்கு அத்துரலியரத்ன தேரர் பதில் சொல்ல வாயெடுக்க முன்னரே பேரவையின் அமைவுக்கு மூலகாரணமான தமிழர் பொங்கியெழுந்தார்.

முந்தி முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில இருந்து கலைக்கேக்க உதுகளைக் கேட்டிருக்கலாமே? அப்ப அதை எதிர்த்து ஒரு அறிக்கை கூட உங்களால விட முடியேலை. இப்ப கதைக்க வாறியளோ? இப்பிடித் தேவையில்லாமல் கதைச்சு இந்தப்பேரவை அமைக்கிறதைக் குழப்பப் பாக்கிறியளோ? என்று சுடுதண்ணீர் குடித்த குரலில் கூறினார்.(நல்லகாலம், அந்த விரிவுரையாளர் கிறிஸ்தவ மதத்தையும் இதில் இணைப்பது பற்றிப் பிரஸ்தாபித்திருந்தால் அவரின் கொதி இன்னும் கூடியிருக்குமோ என்னவோ?) இவ்வாறு ஒரு ஆரோக்கியமான கேள்விக்குக் கூடக் கொதித்தெழும்பிய இவர்களைப் போன்றவர்கள்தான், இந்து-பௌத்த இணைப்பின் மூலம் அமைதியான சூழலை இங்கு ஏற்படுத்தப் பாடுபடப்போகிறார்களாம். இதை நினைத்துச் சிரிப்பதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்?

இந்து-பௌத்த கலாசாரப் பேரவை அமைக்கப்படவில்லையென்று இங்கு யார் அழுதார்கள்? ஏதோ இவ்வாறான அமைப்புகளுக்காகவே தமிழ்மக்கள் தவமிருந்ததாகவும் ஏதோ மனமிரங்கி இப்போது இந்தப் பேரவையை அமைப்பதற்கான வரத்தை தந்திருப்பது போலவுமே பேரவையை அமைத்தவர்கள் கருத்துச் சொல்லியிருந்தனர். இலங்கையில் தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையேயான முரண்பாடுகள் தொடர்வதற்கு மிகமுக்கியமான காரணம் பௌத்த பேரின மதத்தின் ஆணவத்தனமான செயற்பாடுகளே. பண்டா-செல்வா ஒப்பந்தத்தைப் பண்டாரநாயக்கா கிழித்தெறிவதற்கு முக்கிய காரணமே பௌத்த பிக்குகளின் எதிர்ப்புத்தான். அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருக்குமானால் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தமது விடுதலைக்கான வழியாகத் தெரிவுசெய்யும் நிலை வந்திருக்காது. இத்தனை அழிவுகளைத் தமிழ் மக்கள் சந்திக்கவேண்டியுமிருந்திருக்காது. பௌத்தம் அன்பைப் போதிப்பதாகக் கூறப்பட்டாலும், அது இலங்கையின் அதிகாரபீடத்தில் மிக நீண்டகாலமாக ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கும் மதம். எனவே தன்னுடைய இருப்பை விசாலித்துக் கொள்வதற்கே பௌத்தம் அப்போதிருந்து முயன்று வந்திருக்கிறது. போரில் தாம் வென்ற இடங்களில் எல்லாம் அரச மரங்களை வளர்த்து, புத்தர் சிலைகளையும் விகாரைகளையும் படையினர் அமைத்து வந்தனர். எனவே தம் இருப்பைப் பலப்படுத்த உதவும் போரைப் பௌத்தபீடங்கள் கண்மூடியபடி ஆதரித்தே வந்தன. இதனால் நடப்பது இனங்களுக்கிடையிலான போரா? அல்லது பௌத்த மதம் தன்னுடைய எல்லையை விரிவுபடுத்துவதற்காக நடத்துகின்ற யுத்தமா? என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது.

ஒவ்வொரு முறையும் சமாதானத்தின் கீற்றுகள் [illegible] அகன்ற [illegible] முற்பட்டது. இதனாலேயே அமைதி இலங்கையில் சாத்தியமற்றதாக இருந்தது.

இப்போது போர் முடிவுற்றபின்னர் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் ஆமை வேகத்தில் நகர அதற்கு எதிர்மாறாகப் பௌத்த மதத்தின் காலூன்றல் தீவிரமடைந்துள்ளது. சாத்தியமான எல்லாக் கதவுகளின் இடுக்குகளின் வழியாகவும் நுழைவதற்கு அது முயன்று கொண்டிருக்கிறது.

நாவற்குழியில் சிங்களக் குடியேற்றம், பௌத்த எச்சங்கள் இருப்பதாக வலிந்து நிறுவப்பட்ட கந்தரோடையில் மீளவும் தொடங்கியிருக்கும் அகழ்வாய்வு, வீட்டில் விகாரை கட்டினால் நிதியுதவி வழங்கல், பெருமளவான புத்தர் சிலைகள் இரகசியமாகக் கொண்டு வரப்படுதல் என்னும் செயற்பாடுகளும், தமிழ்ப் பௌத்த சங்கம், யாழ்.பல்கலைக் கழகத்தில் பௌத்த மாணவர் சங்கத்தை அமைக்க முயற்சித்தல், இந்து-பௌத்த கலாசாரப் பேரவை உருவாக்கம் என்பனவெல்லாம் பௌத்தத்தின் வருகையை யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கச் செய்யும் முனைப்புகள் தான். இந்து-பௌத்த சங்கத்தின் உருவாக்கம் எவ்விதத்திலும் இங்கு கலாசார மேம்பாட்டையோ அல்லது அமைதி நிலையையோ ஏற்படுத்தப் போவதில்லை. வேண்டுமானால் அதை அமைத்தவர்கள் தமது விசுவாசத்தை ஆட்சியாளர்களுக்கு இதன் மூலம் காட்டி, தனிப்பட்ட ஆதாயங்களைப் பெறலாம்.மற்றும்படி பௌத்தம் தன்னுடைய இலக்கில் வெல்வதற்கே இந்தச் சங்கங்கள் உதவப்போகின்றன.

ஏனெனில் ஏதோ ஒரு உருமறைப்புடன் உள் நுழைந்த பின்னர் தன்னுடைய நோக்கங்களை அடைவதற்கே பௌத்தம் முனையும். பௌத்தம் என்பது மிகப்பெரிய மீன். இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்கள் மீன்குஞ்சுகள்தான். ஒருபோதும் மீன் குஞ்சுகள் பெரியமீனை விழுங்கியது கிடையாது. ஆனால் பெரிய மீனுக்கு சிறிய மீன்களை விழுங்குவது ஒரு பெரிய விடயமேயல்ல. சிறியமீனுடன் கூட்டுச் சேர்ந்து ஒரு பொதுக் கலாசாரத்தை உருவாக்குவதனூடாக நாட்டில் நிரந்தர அமைதியை உருவாக்கப் போவதாகக் கூறி- ஆசை காட்டி- பெரியமீன் உள்நுழைந்து விட்டது. எப்போது சின்னமீனை அது விழுங்கப் போகிறது என்பது மட்டும்தான் தெரியாத விடயமே தவிர அது விழுங்கப்போவது நிச்சயமான ஒன்றுதான்.

அரசுக்கு வால் பிடிக்கின்ற - மாற்றுக்கருத்தாளன் எனத் தன்னைத்தானே பீற்றிக் கொள்கிற -புலம்பெயர் நாட்டில் வசிக்கும் எழுத்தாளர்(?) சுகன் என்பவர் கலந்துரையாடல் ஒன்றில் இவ்வாறு கூறினார்.

பௌத்தம் தான் அழகிய அமைதியான சமத்துவமான மதம். எல்லோரும் பௌத்தர்களாக மாறினால் எந்தப் பிரச்சினையும் வராது. இதைச்சொல்லும்போது வெறியில் அவர் கண்கள் சொருகியிருந்தன. பௌத்த மதம் தன்னுடைய ஆசையை அவரைப் போன்ற எடுபிடிகளின் குரல்களினூடாக வெளிப்படுத்தியிருந்தது. அந்தக் குரல்கள் இப்போது உண்மையாகவே கண்முன்னால் நிஜமாகப்போகின்றதோ என்ற பயம் மட்டுமே எம்மைச் சுற்றி வியாபிக்கத் தொடங்கியுள்ளது. நாம் விழித்தெழாவிட்டால் காலையில் இருந்து மாலை வரை தமிழர் பகுதி எங்கும் பிரித் ஒலிகள் கேட்கத் தொடங்கும் காலம் விரைவில் வந்துவிடலாம்.

ஔண்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவை ஐம்பதிலே எல்லாப் புகழும் உங்களுக்கே!

ஆறு. திருமுருகன்



வயதிலே ஐம்பதாகி
வனப்பிலே அழகனாகி
சொல்லினில் செல்வனாகி
சோர்விலா தொண்டனாகி
உள்ளத்தைக் கவர்ந்த எங்கள்
உத்தமன் ஆறு திருமுருகனாவான்

அறிவினில் அடக்கம் தன்னில்
ஆன்மீகத் தொண்டு தன்னில்
உயர்குடி பிறப்பதனில்
ஊருக்கு உழைப்பதினில்
ஈகையில் இறை பணியில்
இவனுக்கு ஈடு முண்டோ?

சிவபூமி என்ற எங்கள்
சீர் மேவு யாழ்ப்பாண நாட்டை
சிவபூமி ஆக்கித் தந்த
செம்மலும் நீயே அன்றோ
தூயநற் துர்க்கா புரத்தை
துரிதமாய் அமைத்து பின்னே
பார் புகழ் சைவம் காக்கும்
பாங்கினை மறப்பா ருண்டோ

ஆண்டுகள் நூறு மண்மேல்
ஐயனே நீயும் வாழ்ந்து
துர்க்கா புரத்தை ஒத்த
தூய பல தலங்கள் கண்டு
மாண்புறு சைவ நீதிகாத்து
மக்களின் வறுமை போக்கு
நாவலர் பெருமான் போல
நா நிலம் வியக்க வாழி!

ஆக்கம் விகடகவி.

வாழ்த்தி மகிழ்வோர்:
சிவகணேசன் ரெக்ஸ்ரைஸ்ஸ்
நிறுவனத்தினர், யாழ்ப்பாணம்.

(49,22,24)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 29

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான 30 பந்து மாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் (காலை).
* ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் சிறி காமாட்சி விளையாட்டுக் கழகம் (மதியம்).

(த-23)

**வேலையாள் தேவை**

* உணவு பரிமாறுபவர்(சப்ளையர்)
* சமையலறை உதவியாளர் உடன்தேவை.

தொடர்பு- 0771751495

**எதிர்கால கனவுகளை நனவாக்கத் துடிக்கும் இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

சர்வதேச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்துக்கு (A.S.M, Reception, Customer care)போன்றவற்றுக்கு வெற்றிடம் காணப்படுகின்றன.
நீங்கள் O/L, A/L சித்தி பெற்று இருந்தால் சிறந்த பயிற்சியுடன் உயர்ந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு- V.உதயா-0717494735
B.Srikanth-0770771377

**வீடு வாடகைக்கு**

யாழ். மாநகர சபை எல்லைக்குள் யாழ். போதனா வைத்தியசாலை, பஸ் நிலையம் என்பவற்றை அண்மித்த மின்சார நிலைய வீதியில் சகல வசதிகளும் உடைய ஒரு பெரிய வீடு வாடகைக்கு உண்டு.
(அரச/ தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு இல-0779213609

**விற்பனைக்கு**

45 நாள் நிரம்பிய ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாய் குட்டிகளும் பொக்சர் நாய் குட்டிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0770552223,0214903565

**SKILL TESTING CENTRE (PVT) LTD**
**SPECIAL OFFER**

| | | | |
|---|---|---|---|
| 1.பகோ ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~18,000~~ | 15,000 |
| 2.டோசர் ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~18,000~~ | 15,000 |
| 3.போக்லிப்ட் ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~18,000~~ | 14,000 |
| 4.றொலர் ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~19,000~~ | 16,000 |
| 5.வீல் லோடர் ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~19,000~~ | 16,000 |
| 6.கிரேன் ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~32,000~~ | 25,000 |
| 7.ட்ரெயிலர் ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~17,000~~ | 15,000 |
| 8.எஸ்கவேட்டர் ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~18,000~~ | 15,000 |
| 9.பொப்கட் ஒபரேட்டர் | கட்டணம் ரூபா | ~~16,000~~ | 14,000 |

அனைத்தும் ஒரு மாதகால பாடநெறிகள்
சாப்பாடு இல்லை (தங்குமிட வசதிகள் இலவசம்) 2 புகைப்படங்கள், பாஸ்போட்; தேசிய அடையாள அட்டை என்பனவற்றையும் கொண்டு வரவும். பயிற்சி நெறியின் பின் சகல முகவர்களினாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். இச்சலுகை ஜீன் 30ம் திகதி வரை மட்டுமே.
உடனடியாக வந்து பதிவு செய்து கொள்ளுங்கள்.
38, Fairline Rd, (Inner Fairline Rd) Dehiwala.
Tel: 011 4939780, 0777 310224, Fax: 011 4939781
E-mail: zafer@skilltesting.com / Info@skilltestinglk.com
Web: www.skilltestinglk.com

NEEDWOOD

## Rewarding Careers With Great Benefits

*Vacancy for Marketing Executives*

Need Wood Emmag pvt Ltd, 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் BOI தரச்சான்றிதழைப் பெற்றுக்கொண்டது. கலப்படமற்ற {Organic (tea), Estate} தேயிலையை ஏற்றுமதி செய்து வருகின்ற நிறுவனமாக விளங்கும் எமது நிறுவனத்தில் வர்த்தக பயிற்செய்கை வியாபாரத்தில் தகுதி உடையவர்கள், சிறந்த பேச்சு திறமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி
இல.: 021 2945670/2 அல்லது
**544 'B' Hospital Road, Jaffna.**
இல் அமையப்பெற்ற கிளை நிறுவனத்தில் உங்கள் விண்ணப்பங்களை கையளிக்கலாம்.

Basic Salary + Daily Allowance + Commission in excess of 25,000/- per month

(30 ஆம் திகதியிலிருந்து 2 ஆம் திகதி வரை நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் அளிக்கலாம்)

**Head Office:**
No.103/7, Galle road, Colombo 03.
(opposite Ceylinco Celestial Towers
2 Bldgs away from Crescat towords Colpetty

(48,22,24)

## மாபெரும் விசேட விலைக்கழிவு!!

SALE
Best Prices
10 நாட்கள் மட்டுமே!!!

Unbelievable Offer

Intel Dual Core 3.2Ghz
Asus G41 Mother Board
Samsung 500GB Harddisk
Kingston DDR3 2GB
Liteon DVD Writer
ATX Casing
Viewsonic19" LED Monitor
Speaker,Keyboard
DCP 650VA UPS,Mouse
Only 45750/=

Intel Core i3
Asus H55 Mother Board
Samsung 500GB Harddisk
Kingston 2GB DDR3
Liteon DVD Writer
ATX Casing
Viewsonic19" LED Monitor
DCP 650VA UPS,Keyboard
Mouse, Speaker
Only 56250/=

3 Years Warrenty

Intel Dual Core 3.2Ghz
Asus G41 Mother Board
Samsung 500GB Harddisk
Kingston DDR3 2GB
Liteon DVD Writer
ATX Casing
Viewsonic15.6" LED Monitor
Speaker,Keyboard
DCP 650VA UPS,Mouse
Only 42250/=

Intel Core i5
Asus H55 Mother Board
Samsung 500GB Harddisk
Kingston 2GB DDR3
Liteon DVD Writer
ATX Casing
Viewsonic19" LED Monitor
DCP 650VA UPS,Keyboard
Mouse, Speaker
Only 69500/=

HP Laser Jet 1102 11400/= 1 Year
DCP UPS 3800/= 2 Years
Laser Jet ML1666 10250/= 1 Year
Pendrive 2GB/4GB
2GB 1000/= 1 Year
4GB 1250/= 1 Year
Dongle Dlink 5800/= 1 Year
Dongle HSDPA 5600/=
1 User 1500/=
2.1 Woofer 2800/=
1 User 1200/=
Epson T13 4600/= 1 Year
D.link ADSL Wireless 4Port Router 6700/= 3 Years
D.link ADSL Single Port Router 3000/= 3 Years
Webcam 2800/= 1 Year
Headphone 475/=



Sale

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD

305, Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 222 1101, 021 222 9644

29,M.M.V Road, Nelliadi.
T.P: 021 226 4999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

மஹோற்சவம் - 2011



29.05.2011 ஞாயிற்றுக்கிழமை

நான்காம் நாள் திருவிழா

மாலை 07.00 மணி

சுவாமி வீதியுலா இடம்பெறும்

தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்

இணுவில்

## லாவா நீரிழிவுப் பராமரிப்பு மையம்
நீரிழிவுடன் மகிழ்ச்சியான வாழ்க்கை

யாழ்ப்பாணத்தின் முதலாவது தனியார் நீரிழிவுப் பராமரிப்பு மையம் இன்று **சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் வெ.சுதர்சன்**(யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் நீரிழிவும் பராமரிப்பும் பற்றிய கருத்துரையுடன் ஆரம்பித்து வைக்கப்படும்.
நோயாளர் அனைவரும் பதிவு செய்யவும். -

ஆரம்பம்: 29/05/2011 பி.ப 2.00
இடம்: லாவா வைத்தியசாலை
-விளக்கவுரைகள்,வைத்திய பரிசோதனை,இரத்தப்பரிசோதனைகள் அங்கத்துவ பதிவு என்பன நடைபெறும். -

மாதாந்த கிளினிக் (உங்கள் நேர வசதிக்கேற்ற)
மாதாந்த/கிரமமான இரத்த பரிசோதனைகள்
சத்திர சிகிச்சை நிபுணர் .பொது வைத்திய நிபுணர்.பொது வைத்தியர்.
உணவு ஆலோசனை நிபுணர்களின் ஒன்றிணைந்த பராமரிப்பு.
நீரிழிவுக்கான நவீன சிகிச்சை முறைகள்.
உறுப்பு பராமரிப்பும் சோதனைகளும்.
பக்கவிழைவுகளுக்கான விசேட சிகிச்சைகள்
நீரிழிவுப் புண்களை ஆற்றும் விசேட சிகிச்சை

கிரமமான பராமரிப்பு உறுப்பிழப்புக்களை தடுப்பதோடு. மாரடைப்பு.சிறுநீரக கோளாறு.நரம்பு மண்டல கோளாறு. கண்பார்வைக்கோளாறு போன்ற பாரிய பிரச்சினைகளிலிருந்தும் உங்களை காக்கும்.

லாவா நீரிழிவு சிறப்பு சிகிச்சை மையம்
**Diabetic Care Centre**
லாவா வைத்தியசாலை .இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2224333 / 0773164617

## 9 ஆம் ஆண்டில் ஈரவிழிகளுடன்



அமரர்
**தம்பிப்பிள்ளை சூடாமணி**
(எழுத்தோவியர் அகிலன்ஸ்)

பிறப்பு - 17.08.1937
இறப்பு - 08.06.2002

அன்பின் உறைவிடமே பண்பின்
இலக்கணமே ஆண்டுகள் ஒன்பது
ஆனதப்பா ஆறவில்லை நம்துயரம்

205/2, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## உதயன்....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து கொண்டிருந்த இவரைச் சுற்றி வளைத்து அவர்கள் தாக்குதல் நடத்தினர். அருகில் இருந்த தனியார் கல்வி நிலையத்துக்குள் புகுந்து கொண்டதை அடுத்து, தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர்.

சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எழுதப்பட்ட செய்தி தொடர்பில் இவர் இலக்கு வைக்கப்பட்டாரா என்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாக்குதலை அடுத்து கவிதரன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். செய்தியாளர்மீது காட்டுமிராண்டித் தனமாக நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை பல்வேறு தரப்பினரும் கடுமையாகக் கண்டித்துள்ளனர். (உ-ஐ)

## அமெரிக்காவுக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கையை முன்னெடுக்க ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அவை கோரி அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிலாரி கிளிங்டனுக்கு இந்த மனித உரிமைகள் அமைப்புகள் கடிதம் எழுதியுள்ளன.

ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் சூசன் ரைஸ், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான துணை அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் ஆகியோருக்கும் இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதற்கிடையே இலங்கை விவகாரம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் எடுக்கப்பட்டால் ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை அதனைக் காப்பாற்றுவதற்கு முழு மூச்சாக முயலும் என்று கூறுவதற்கு இல்லை என்று இந்த விடயத்தில் நெருக் கமான தொடர்புகளைக் கொண்டுள்ள ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

**தேவை**
ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையத்துக்கு பெண்கள் வேலைக்கு தேவை. திருநெல்வேலிக்கு அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0777804493

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் ஐந்து அறைகள், குசினி, ஹோல், குளியலறை போன்ற சகல வசதிகளுடன் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0778449687

**விற்பனைக்கு**
ஐஸ்கிறீம் தயாரிப்புக்கான 3 தட்டு பழபாத் கொம்பிறசர் செற்றுடன் விற்பனைக்குள்ளது.
தொடர்பு: 0777804493

## முதலாவது நினைவஞ்சலி

மலர்வு
12
03
1940



உதிர்வு
09
06
2010

**பசுபதி விஜயலட்சுமி**

*பாசமுள்ள எங்கள் தெய்வமே, எங்களை விட்டு*
*நீங்கள் பிரிந்து ஓராண்டு நிறைந்து விட்டது*
*நீங்கள் இல்லாத துயர் இன்னமும் எங்களை விட்டு அகலவில்லை.*
*எங்களை வளர்த்தெடுத்தீர், வழி காட்டினீர்*
*நீங்கள் எங்களை விட்டுப் பிரியவில்லைத் தாயே*
*என்றும் எங்களுடன் தான் வாழ்கிறீர்கள்.*
*அன்புத் தாயே உங்களுக்கு எங்கள் அஞ்சலிகள்!*

'பசுபதி'
இல.11, முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

என்றென்றும் நினைத்து வாழும்:
பாசமுள்ள பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(4674)

**வாடகைக்கு தேவை**
வியாபார நிலையம் ஒன்றுக்கு யாழ் நகர் அல்லது யாழ்.நகருக்கு அண்மையில் வீடு அல்லது கடை வாடகைக்கு தேவை.
தொடர்பு: 0777804493

**[illegible] பல்கலைக்கழகங்களின் உயர் கல்வி**
G.C.E-A/L முடித்தவர்கள் மட்டும் மிகவும் குறைந்த கட்டணம், பகுதி நேர வேலை வாய்ப்புடன் கூடிய மேற்படிப்பைத் தொடர்வதற்கு.
தொடர்பு: 0716419050
[4193]

**Vacancy Notice - Walk in Interview**
1. English Lecturer - Full Time/ Part time
2. Office Clerk
Date : 02-06-2011 Time : 11.00am Onwards
BCHS
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No:15 2/1,Sirampiyadi Lane,Off Stanley Road,Jaffna.
(அரியகுளத்துச் சந்திக்கருகில்,கோசிHotel மேல்)
Tel:0212224550 Hotlines :0777222422/0777585913/0714299935

## மரண அறிவித்தல்கள்

### கனகசபாபதி சாம்பசிவம்
(இளைப்பாறிய கணக்காய்வாளர்)

புலோலி தெற்கைப்பிறப்பிடமாகக் கொண்டவரும், சுழிபுரத்தை புகுந்த இடமாகவும், பம்பலப்பிட்டியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சாம்பசிவம் 26.05.2011 வியாழக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புலோலி பண்டிதர் கனகசபாபதி - மங்கையர்க்கரசி தம்பதியரின் அருந்தவப் புதல்வரும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஸ்தாபகர் மனேஜர் செல்லப்பா- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தர்(புலோலி), ஆரணியசுந்தரம் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வவதனி (அமெரிக்கா), ஸ்கந்தகுமார் (லண்டன்), நந்தகுமார் (கனடா), தில்லைக்குமரன்(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராஜா(அமெரிக்கா), பிரியா(லண்டன்), கவிதா(கனடா),பகீரதி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும், அஸ்வினி, அஞ்சலி, லவணா, சயூரி, ஜனார்த்தனன், ராதேஷ், திரிலோஷன், அபிநாஷ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (28.05.2011) நண்பகல் 12 மணிமுதல் பி.ப. 5 மணிவரையும் இன்று 29.05.2011 காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரையும் ஜயரத்தின மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

இறுதிக் கிரியைகள் இன்று (29.05.2011) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஜயரத்தின மலர்ச்சாலையில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

*19- 6/7, மிலாகிரிய அவன்யு,*
*பம்பலப்பிட்டி.*

### திருமதி பாலசிங்கம் தவமணி



இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த பாலசிங்கம் தவமணி நேற்று (28.05.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், மகேந்திரன், கணேசலிங்கம்(சுவிஸ்), பரமேஸ்வரன்(சுவிஸ்), ரவிச்சந்திரன்(சுவிஸ்), கலைமதி, ஜெயந்தி(சுவிஸ்), சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், யோகேஸ்வரி, சிவாஜினி(சுவிஸ்), வேவி(சுவிஸ்), சியாவினி (சுவிஸ்), ஞானசேகரம், நகுலகுலசிங்கம்(சுவிஸ்), கோகுலறாதா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்

தகவல்:
குடும்பத்தினர்.

(பி/262)

### திருமதி செல்லையா சிவபாக்கியம்



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திருமதி செல்லையா சிவபாக்கியம் நேற்று (28.05.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வயிரமுத்து- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், பொன்னுத்துரை, மயில்வாகனம், இராசம்மா மற்றும் தங்கரத்தினம், இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, செல்லத்துரை, இரத்தினேஸ்வரி, மகேஸ்வரி, தம்பிராசா மற்றும் நடராசா, நல்லம்மா, கண்ணம்மா ஆகியோரின் மைத்துனியும், பரமேஸ்வரி, தவனேஸ்வரன், சிவலிங்கம் ஆகியோரின் தாயாரும் பரமநாதன், லலிதா, நந்தகுமாரி ஆகியோரின் மாமியும் சசிகரன், சசிகலா, சுவர்ணா, சுரேஸ்கரன், சர்மிளா, கஜனி, ஜனனி, துஸ்யந்தினி, தவேஷன், தாட்சாயினி, ஐங்கரன், அபிராமி, ஷெரினா, அருட்செல்வம், ஜெயக்குமார், பாலகுமார், கோபிகிருஷ்ணா ஆகியோரின் பேர்த்தியும் அஜந்தா, சுபானி, ஆதுஷன், எனோஸ், எட்வின், எட்வினா, அனோஜ், அனோசா, அபிஷா, டனுசன், மதுஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.05.2011) சனிக்கிழமை நடைபெற்று கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமேஸ்வரி -மகள்
தவனேஸ்வரன்-மகன்
சிவலிங்கம்- மகன்

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி: news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 32°c | 28°c | |
| மன் | | 31°c | 28°c | |
| வவு | | 35°c | 28°c | |
| முல் | | 33°c | 27°c | |
| கிளி | | 33°c | 27°c | |

தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான காலநிலை நாள் முழுவதும் நிலவும்.

CSE
COLOMBO STOCK EXCHANGE
பங்குச்சந்தை µ யாழ்ப்பாணம்
வைகாசி 25. 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7452.68↑
மிலங்கா(MPI) 6879.94↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2.5Bn
பங்குகளின் அளவு(No.) 115.23Mn
வியாபாரம்(No.) 20663
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
டியுனமிஸ் 22.70
கொழும்பு லேண்ட் 30.60
கௌ்சி 21.10
எஸ் எம் பி லீசிங் 0.60
பெ(F)ஸ்ர் கபிரல் 26.90
குறைவு(Top 5 losers) - விலை Rs.
மேகன்ரைல் ஸிப்பிங் 241.00
யூனியன் கெமிகல் 800.80
அவீவா என்.டீ.பீ. 290.20
லங்கா அசோக் 5900.00
புளுடயமண்ட் 1.90
மேலதிக தகவல்கள்- www.cse.lk

குதிரை நடனம், வேதபாராயணத்துடன் சைவமணம் கமழும் பேரணி

# சிவப் பாரம்பரியத்துடன் நல்லூரில் சிவதொண்டர் மாநாடு ஆரம்பம்




சமயப் பெரியார்களை அழைத்துவரப்படுவது முதலாவது படத்திலும் ஆறு. திருமுருகனுக்கு இந்திய உயர் ஸ்தானிகராலய இராஜதந்திர அலுவல்கள் நாயகத்தின் யாழ். பிரதிநிதி வி. மகாலிங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

யாழ்ப்பாணம், மே 29

பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் நல்லூரில் நேற்றுக் கூடிய ஆயிரத்துக்கு மேற்பட்ட சிவதொண்டர்கள் குதிரை நடனத்துடன் கொடிகளை ஏந்தி சிவப்பாரம்பரியத்துடன் ஊர்வலமாகச் சென்றனர்.

அதைத் தொடர்ந்து துர்க்கா மணிமண்டபத்தில் சிவதொண்டர் மாநாடு கோலாகலமாக ஆரம்பமானது.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் விசேட பூசை வழிபாடுகள் காலை 8 மணிக்கு இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கோயில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்திருந்த சிவதொண்டர்கள், விருந்தினர்கள் முன்னிலையில் சிவதொண்டர்களுக்கான இந்து ஆராய்ச்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிவதொண்டர்கள் கொடிகளை ஏந்தியவண்ணம் வேதபாராயணம் ஓதியவண்ணம் ஊர்வலமாக நல்லூர் துர்க்காதேவி மண்டபத்துக்குச் சென்றனர்.

இந்த ஊர்வலத்தில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சமயப் பெரியார்கள் உட்பட கொழும்பு, நாவலப்பிட்டி, மன்னார், இரத்தினபுரி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சிவதொண்டர்களும், சமயப் பெரியார்களும் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து இந்து மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி, இந்து சிரோரத்தினம் வி.கயிலாசபிள்ளை தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்துக்குரிய சுவாமி சர்வரூபானந்தா ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து தொடக்க உரையை மன்றப்பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் மன்றத்தின் உபதலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனது 50ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரைப் பாராட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. நல்லை ஆதீன முதல்வரால் ''சைவஞானபானு'' எனும் பட்டம் அவருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இதன்போது இவரது சேவை நலனைப் பாராட்டி ''இந்து ஒளி'' எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தொடர்ந்து மாலை நிகழ்வுகளில் சமூக நலன் அன்பளிப்புகள் வழங்கும் நிகழ்வும், ஆய்வரங்கமும், பேரரங்கும், ''செஞ்சொற் செல்வம்'' சிறப்பு நூல் வெளியீடும் இடம்பெற்றன.

சிவதொண்டர் மாநாடு முதல் நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராக இளைப்பாறிய உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக: இந்திய உயர் ஸ்தானிகராலயம் இராஜதந்திர அலுவல்கள் நாயகத்தின் யாழ். பிரதிநிதி வி. மகாலிங்கம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. (ஐ-313)

## மோ. சைக்கிள் விபத்துக்களில் இருவர் காயம்

தென்மராட்சி, மே 29

மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் சிக்கி இருவர் காயமடைந்தனர். சம்பவம் நேற்று இடம்பெற்றது.

வரணிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வரணி வடக்கைச் சேர்ந்த தியாகராசா இராஜரூபன் (வயது - 23) என்பவரும், சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் சாவகச்சேரி கோயிற் குடியிருப்பைச் சேர்ந்த பரமநாதன் (வயது - 68) என்பவரும் காயமடைந்தனர். (உ-207)

# மோட்டார் சைக்கிள்களைத் திருடி விற்ற நபர் பொலிஸில் சிக்கினார்

## யாழ். நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 29

மோட்டார் சைக்கிள்களைத் திருடி விற்பனை செய்துவந்தார் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை நேற்றுக் காலை யாழ். நகரில் வைத்துக் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

நாவாந்துறையைச் சேர்ந்த 36 வயதுடைய குடும்பஸ்தரான அந்த நபர், யாழ். நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் சிலவற்றைத் திருடி விற்பனை செய்து வந்துள்ளார். இந்த நபர் தொடர்பாகக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபருடன் இணைந்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த ஏனைய இரண்டு உறுப்பினர்கள் தலைமறைவாகிவிட்டனர். அவர்களைத் தேடி வலை விரித்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதாகியுள்ள சந்தேகநபர் அண்மையில் களவாடியதாகச் சந்தேகிக்கப்படும் ''சவாரி'' ரக மோட்டார் சைக்கிள் ஒன்றைக் குருநகர் பகுதியிலுள்ள ஒருவருக்கு விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

10012240 இலக்கமும் *LAS - T-X-Ka 17A000324* என்ற இயந்திர இலக்கமும் கொண்டு சிவப்பு நிற சவாரி ரக மோட்டார் சைக்கிள் தொடர்பாகத் தகவல் அறிந்தவர்கள் குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் மேலும் கேட்டுள்ளனர்.

திருட்டுத் தனமாக விற்பனை செய்யப்பட்டுள்ள இந்த மோட்டார்சைக்கிளை யாரும் விற்பனை செய்யவோ, கொள்வனவு செய்யவோ வேண்டாம் எனவும் யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் கேட்டுள்ளனர். (த-14)

# நிகழ்வுகள்

## விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 29

தென்கோவை கற்பக விநாயகர் ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதம குருவாக இருந்து மஹோற்சவத்தை நடத்தியவருமான சிவஸ்ரீ பால. செல்வசேனக் குருக்களுக்கு 'கற்பக விநாயகர் கிரியா உபாசகர்' என்ற கௌரவ விருது வழங்கும் நிகழ்வு இன்று இரவு 8 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## இறுவட்டு, பயிற்சி இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 29

யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கை மாணவர்களின் தயாரிப்பில் ஆவணப் பட இறுவட்டு, பயிற்சி இதழ் என்பன வெளியீடு செய்யப்படவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எஸ். லோகிதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்ப காலத்தில் வெளிவந்த 5 பத்திரிகைகளின் வரலாற்றுப் பார்வையை உள்ளடக்கியதும், சிறுவர்கள் துஷ்பிரயோகம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் அடங் கியதுமான இறுவட்டுக்களுடன், ''பல்கலையன்'' பயிற்சி இதழும் வெளியீடு செய்யப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆதரவு திரட்டுவதில் பாலியில் அமைச்சர் பீரிஸ் தீவிரம்

பாலி, மே 29

அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தோனேசியா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் ஆதரவை இலங்கை பக்கம் திருப்ப கடும் பாடுபட்டுள்ளனர்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்க அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா ஆகியோரை உள்ளடக்கிய குழு பாலித் தீவு சென்றிருந்தது.

இந்தக் குழுவினர் அணிசேராடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை தனித்தனியே சந்தித்து சிறிலங்காவுக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 17ஆவது கூட்டத்தொடர் நாளை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தக் கூட்டத்தில் ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை பற்றிய விவாதம் நடத்தப்படலாம் என்ற அச்சம் இலங்கைக்கு இருக்கிறது.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஏதும் கொண்டு வரப்பட்டால், அதை முறியடிப்பதற்கான ஆதரவையே அமைச்சர்கள் பாலியில் தேடிவருகின்றனர்.

பாலித் தீவில் பீரிஸ் தலைமையிலான தூதுக்குழு ஐ.நா. மனிதஉரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசி வருவதாக வெளிவிவகார அமைச்சும் கூறியுள்ளது.

ஆனால் எந்தெந்த நாடுகளின் வெளி விவகார அமைச்சர்கள், பிரதிநிதிகளை இவர்கள் சந்தித்தனர் என்ற தகவலை அமைச்சு வெளியிடவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 42 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அதில் இந்தியா உள்ளடங்கவில்லை. (உ)

# பதுமன் நேற்று நீதிமன்றில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் இராணுவ கட்டளைத் தளபதியாக இருந்த பதுமன் மீது திருகோணமலை மேல் நீதிமன்றத்தால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. பதுமன் என்று அழைக்கப்பட்ட சிவசுப்பிரமணியம் வரதநாதனை தீவிரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரால் நேற்று திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி தபேந்திரன் முன்னிலையில் நிறுத்தியிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதியாக செயற்பட்ட இவர் இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், படையினரை கொன்றதாகவும், குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவருக்கு எதிராக 1979ம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 48வது இலக்கத்தின் விதிமுறையின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பியது.

''ஜெயலலிதாவைக் கொல்வதற்கு புலிகள் திட்டமிட்டிருந்தனர் என்று தொலைக்காட்சிப் பேட்டியில் கேபி தெரிவித்திருப்பது உண்மைக்குப் புறம்பானது. தமிழர்களிடம் பிளவுகளையும் குழப்பங்களையும் உருவாக்கும் நோக்குடன் அந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது'' என்று அந்த 4 பக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இந்தியா மௌனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கே.பியின் இந்தக் கருத்துத் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்று இந்திய வெளிவிவகார அமைச்சக அதிகாரி கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

ராஜீவ் கொலைக்குப் புலிகள்தான் காரணம் என்று கேபி தெரிவித்திருப்பதால் அவரிடம் விசாரணை நடத்த அனுமதிக்குமாறு இந்தியா கோருமா என்று, இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் சைலாஸ் தங்கவிடம் கேட்டதற்கு, ''கேபியின் கருத்துக் குறித்து யாரும் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை'' என்று தெரிவித்தார். (உ)

## இந்துமாமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரங்கில் மாநாடு ஆரம்பமானது.

மாநாட்டில் சிறப்புப் பேரரங்கு, ஆய்வரங்கு, பேரரங்கு எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வுகள் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளன. (விவரமான செய்தி 30 ஆம் பக்கத்தில்) (ஐ-313)

## எம்.பிகளுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீடு செய்யப்படவில்லை என ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

தமது பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை வழங்காமல் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அந்த நிதியைச் செலவிடுகிறார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதில் அளித்த அமைச்சர் பஸில், நிதி எப்போது தேவை எனக்கேட்டால் வழங்கத் தயார் என்று கூறினார்.

இந்த நிதி ஒதுக்கீடு குறித்து அரச - எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் நீண்ட நேரம் விவாதம் இடம்பெற்றது. (ஐ)

## மாகாணங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வழங்கியுள்ள செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபை நிர்வாகத்துக்கு வழங்க வேண்டும் என்று இன்று வலியுறுத்தப்படுகிறது.

அவ்வாறு பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால், அவை தவறாகப் பயன் படுத்தப்படக் கூடும் என்ற சந்தேகமும் தயக்கமும் நிலவுகிறது.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால், வெளிச் சக்திகள் அதில் தலையிட்டு, ஊடுருவி தேவையில்லாத பிரச்சினைகளை உருவாக்கக் கூடும். அதனால் எதிர்காலத்தில் கிளர்ச்சிகள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. இதனாலேயே பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை நாம் எதிர்க்கிறோம்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால், இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போன்ற அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளலாம்.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்றவற்றைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுவதால் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களைத் தொடர்ந்து நடைமுறையில் வைத்திருப்பதால், எமது நாட்டைப் பயங்கரவாத நாடாகவே உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையை நீக்கி, உடனடியாக இந்தச் சட்டங்கள் நீக்கப்படவேண்டும் என்றும் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தற்போது மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதை எதிர்க்கின்ற போதும், 1987 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரான ஜெ.ஆர்.ஜெவர்த்தனாவே கையெழுத்திட்டிருந்தார். அந்த ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தில் மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ)



# சந்தியடிச் சோமு

## எள்ளண்டா என்னையா நிக்கும் பெரிய வாத்திமார்!

சந்தியில நின்று வெறுவாய் சப்ப வேண்டாமெண்டு மகள் கட்டிப்பான உத்தரவு பாருங்கோ. அதால நேற்றைக்கு நான் மௌனவிரதம்; வாயே திறக்கிறதில்லையெண்டு சொல்லிப் போட்டுத்தான் சந்திக்குப் போயிருந்தனான். அங்க எல்லாரும் பலதையும் பத்தையும் கதைச்சுக்கொண்டிருக்க நான் கேட்டுக்கொண்டிருந்தன்.

கதிரண்ணை கொஞ்சம் கடுகடுப்பாத்தான் வந்தார். ''அதுசரி யார் உந்த கே.பிய தமிழற்ற தலைவனாக்கினது? உயிர விடுவன் ...ப் பிடிப்பன் எண்டு ரோக்காரனோட சேர்ந்து உளளுறார்..?'' எண்டார். உதுகளைக் கேட்டுக்கொண்டு என்ர மௌனவிரத்தை என்னெண்டு தொடருறது? நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பன் எண்டு நீங்கள் ஒருக்கா யோசிச்சு பாருங்கோ.

கதிரண்ணை தொடக்க அக்கம் பக்கத்தில நிண்டதுகள் எல்லாம் ஏகத்துக்கு தொடங்கி மனசுக்க கிடந்த வெப்பியாரத்தை எல்லாம் கொட்டித் தீர்த்துப் போட்டுதுகள். ''நடந்ததையெல்லாம் மறக்க வேண்டுமெண்டு போட்டு ஒருத்தரோட ஒருத்தருக்கு சிண்டு முடியிறான் பாவி'' இது கனகண்ணையின்ர கருத்து.

